தொழில்

INDUSTRY

ஆசிரியர்:
K. பெருமாள் உடையார்

15·8·59

புதிய 25 காசு

பயிற்சிக்கும் வெற்றிக்கும் உத்திரவாதம்

தபால் மூலம்

இலவசக் கல்வி போதனை

(ஸ்தாபிதம் 21-3-52.)

'F' குரூப் வகுப்புகள் ஆரம்பதேதி: 21-8-59.

தமிழ் அறிவுபெற்ற ஆண்-பெண் இருபாலரும் பள்ளியில் இடையே படிப்பை நிறுத்தியவர்களும், S. S. L. C. தேர்வில் தேறியவர்களும், தவறியவர்களும் கீழ்க்கண்ட 59-60ம் வருட சர்க்கார் தேர்வுகளுக்கு மாதம் மும்முறை தபால் மூலம் பாடங்கள் அனுப்பி இலவசமாக பயிற்சி அளிக்கப்படும். தேர்வின் வெற்றிக்கும், பாடங்கள் அனுப்பிப் பயிற்சியளிப்பதற்கும் உறுதிப் பத்திரம் வழங்குகிறோம். மாணவர்களின் கஷ்ட-நஷ்டங்களுக்கு எமது உத்திரவாதப்பத்திரம் பொறுப்பேற்றுக்கொள்கிறது.

(1) உத்கல்; B. A.; (2) B. Com.; (3) I. Com; (4) Inter; (5) Madras Metriculation; (6) Pre-University; (7) தமிழ் வித்வான் வகுப்புகள்; (8) சர்வீஸ் கமிஷன்; (9) (S. S. L. C. (Oct. 59 & March 60); (10) E. S. L. C; (11) கைத்தறி நெசவு; (12) விவசாயம்; (13) Accountancy; (14) Overseer; (15) Postal-clerk; (16) Postman; (17) கிராமணியம் & கர்ணம்; (18) ஹிந்தி வகுப்புகள் (பிப்ரவரி 60); (19) ஹோமியோபதி (தமிழ் & ஆங்கிலம்); (20) கிராம வைத்தியம்; (21) பேஸிக் ஆங்கிலம்.

1949-ம் ஆண்டு முதல் சொந்த அச்சகத்துடன் பல கிளை நிலையங்கள் நிறுவி ஆண்டுதோறும் பல்லாயிரக்கணக்கான மாணவர்களுக்கு இலவசக் கல்வி பயிற்சியளித்து வருகிறது நமது கல்வி ஸ்தாபனம். ஆகவே 21-8-59 முதல் ஆரம்பமாகும் நமது F-குரூப் வகுப்புகளின் முழு விபரங்களுக்கு 15 n p. ஸ்டாம்புடன் விண்ணப்பித்து நமது வகுப்புகளில் சேர்ந்து பயிற்சிபெற்று பயன் அடைய அன்புடன் அழைக்கிறோம்.

கிளைகள்:- சென்னை, சிலோன், மலேயா & தென் ஆப்ரிக்கா.

தமிழ் நாட்டின் தனிப்பெறும் தபால் இலவசக் கல்வி ஸ்தாபனம்!

ஸ்ரீ முருகன் டுடோரியல் இன்ஸ்டிடியூட்
ரிஷிவந்தியம் S.O. தென் ஆற்காடு Dt.
கிளைகள்: சென்னை, மலேயா, சிலோன் & தென்னப்ரிகா.

தொழில்

இந்த இதழில்

15—8—59

கொடுங்கோலாட்சிக்கு முடிவு	... 5
அரசியலின் வரலாறு	... 9
சுமதியின் சபதம் (சி. ஜெ. எம்)	... 17
என்னைக் தொட்டுவிட்டான்	... 29
சொன்னபடி நடந்து விட்டால்	... 33
குடிமியா? இருப்பா?	... 49
தமிழ் எழுத்தாளர் மகாநாடு	... 57
அமெரிக்க வியாபார தூது கோஷ்டி	... 61
கலைமணம்	... 65

கதை, கட்டுரைகளில் வரும் சம்பவங்களும் பெயர்களும் கற்பனையே.

தியாகிகளுக்கு வாழ்த்து!



"அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்
ஆயிரம் தொழில் செய்திடுவீரே!"

தொழில்

ஆசிரியர்; கே. பெருமாள் உடையார்

தொழில் 2	சென்னை, 15—8—'59	இதழ் 8

கொடுங்கோலாட்சிக்கு முடிவு!

கேரளாவில் அராஜகம் தலைவிரித்தாடியது. ஜனநாயகம் அங்கு அணு அணுவாக சித்திரவதையாக்கப்பட்டு குழி தோண்டி புதைக்கப்பட்டது. அந்த கோரத்தாண்டவம் கேரள மாஜி முதன் மந்திரி ஸ்ரீ நம்பூதிரிபாடு தலைமையின் கீழ், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. கேரளாவில் எங்கும் ஒரே குழப்பமும் கொந்தளிப்பும் தான் நிலவியது. இதை எதிர்த்து பல்லா ஆயிரக்கணக்கான பேர் மறியல் போராட்டத்தில் இறங்கினர்கள். உள்ளம் குமுறும் மக்களை உள்ளே தள்ளினர் ஸ்ரீ நம்பூதிரிபாடு. நம்பூதிரிபாடு ஆட்சியில் தொழிற்சாலைகள் ஜெயில்களாக மாற்றப்பட்டன. கொல்லம் பக்கத்தில், குண்டதா என்னுமிடத்தில் ஒரு தொழிற்சாலை சில மாதங்களாக மூடி இருந்தது. அதை நம்பூதிரிபாடு ஜெயிலாக மாற்றிவிட்டார். பெண்கள் கூட ஸ்ரீ நம்பூதிரி ஆட்சியை எதிர்த்து கிளர்ச்சியில் ஈடுபட்டார்கள். நாம் ஏற்கனவே அவரது ஆட்சியை கண்டித்தோம். தற்போது கேரளாவில் நிலவிய கொடுங்கோலாட்சிக்கு முடிவு ஏற்பட்டு விட்டது. வரவேற்கிறோம்; வாழ்த்துகிறோம்.

கேரள பிரச்னையைத் தீர்க்க வேறு வழி எதுவுமே இல்லாததால் தான் மத்திய சர்க்கார தலையிட்டது என்று பிரதம

மந்திரி ஸ்ரீ நேருஜி காங்கிரஸ் பார்லிமெண்டரி கூட்டத்தில் விளக்கிக் கூறியுள்ளார். மத்திய சர்க்கார் இப்போதாவது தலையிட்டதை வரவேற்கிறோம். இந்த தலையீடு முன்னால் நடந்திருந்தால் மிகவும் நல்லதாக இருந்து இருக்கும். மக்கள் ஏகோபித்த மகிழ்ச்சியை தெரிவித்திருப்பார்கள்.

202368

கேரள சர்க்கார் உட்பட ஒவ்வொருவரும் மத்திய சர்க்கார் கேரளா விஷயத்தில் தலையிட வேண்டும் என்று விருப்பம் தெரிவித்ததாகவும், கேரள சர்க்கார் இவ்விதம் கோரியதற்கு, தன்னுடைய எதிர்ப்பை தன்னால் சமாளிக்க முடியாத அளவுக்கு பெருகி வந்ததாக அது உணர்ந்ததே காரணம் என்றும் ஸ்ரீ நேரு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

கேரளத்தில் ஏற்பட்ட நிலை விபரீதமானது சிக்கலானது என்றும், அந்தவிஷயம் இத்துடன் முடிந்துவிடவில்லை என்றும், பின்னால் ஏற்படக்கூடிய விளைவுகளை சமாளிக்கவும் நாம் தயாராக இருக்க வேண்டுமென்றும் அவர் பேசியதை உண்மையிலே, கேரள மக்கள் இரண்டு கைக்கூப்பி வரவேற்பார்கள் என்பது உறுதி.

கேரளத்தில் கம்யூனிஸ்டு மந்திரி சபை பதவி வகித்த காலத்தில் செய்தவைகள் எல்லாம் படுதோல்வி என்றும் ஸ்ரீ நேரு குறிப்பிட்டிருக்கிறார். கம்யூனிஸ்டு கட்சி, தனக்காக தானே சிந்திக்காமல், பிறர் சிந்தனையளித்த விஷயங்களில், கருத்து செலுத்தியதுதான் அக்கட்சியின் தவறு என்றும் இந்தியாவின் நிலவரங்களை எண்ணிப்பார்க்காமல், ரஷ்யாவில் செய்யப்பட்டவைகளை இங்கு எண்ணிப் பார்ப்பது பொறுத்தமாகாது. நடைமுறைக்கு வர சாத்தியம் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

மத்திய சர்க்கார் தலையீட்டை வரவேற்கிறோம். இனிமேலாவது இப்படி பயங்கர ஆட்சி வராமல் இருப்பதற்கு மக்கள் இப்போதே ஆவன செய்ய வேண்டும். இந்தியா முழுவதும், இப்படிப்பட்ட பயங்கர ஆட்சி நடைபெறுமல், இருப்பதற்கு, மத்திய சர்க்கார் இத்தகைய நடவடிக்கை இப்போதிலிருந்தே எடுக்கவேண்டுமென தொழில் வற்புறுத்துகிறது.

மத்திய சர்க்கார் தலையீட்டை எதிர்த்து சில ராஜ்யங்களில் பத்தாம் பசலி கூட்டங்கள் சில கிளர்ச்சிகளில் இறங்கி

யுள்ளன; வேலைநிறுத்தம் தொழிற்சாலையில் வெளி நடப்பு போன்ற செய்கைகளில் மக்களை ஏவி விடுகின்றன சில கருங் காலிகளின் கூட்டம். சர்க்கார் உடனே தலையிட்டு, இப்படிப் பட்ட பயங்கர நடவடிக்கைகளில் இறங்கியுள்ள நபர்களை, கைது செய்து ஒடுக்கவேண்டும். இதில் கால தாமதம் கூடாது என்று கோருகிறோம்.

இறக்குமதிக் கட்டுப்பாட்டை தளர்த்துக!

நமது தேசிய வருமானத்தை ஓரளவு அதிகரிக்கவேண்டு மென்பதுதான் ஐந்தாண்டுதிட்டத்தின் அடிப்படை நோக்கமாக இருக்கிறது. நாம் தற்போதும் பொருளாதாரத் துறையில் பின் தங்கி இருக்கிறோம் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷய மாகும். கனரகத்தொழிற்சாலைகள் நிறுவுவதிலோ, அல்லது சிறு தொழிற்சாலைகள் ஸ்தாபிப்பதிலோ, நாம், மேல்நாட்டாரோடு போட்டி போடக்கூடிய நிலையில் தற்போது இல்லை என்பதையும் நாம் அறிவோம்.

ஆகவே, பொருளாதாரத்துறையில் பின் தங்கிய நாம், நம் முடைய பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய என்ன செய்ய வேண்டுமென்பதை ஆராய்வது சாலச்சிறந்ததாகும்; கிட்டத் தட்ட 3 கோடி மக்கள் வேலையில்லாத்திண்டாட்டத்தால் அல்லல் பட்டுக்கொண்டிருக்கிறார்கள்; வேலையில்லாத் திண்டாட்டத்தை நாட்டை விட்டு விரட்டி அடிக்க முடியும் என்றால் அது சிறு தொழில் நிறுவனங்களால்தான் முடியும், என்று பொருளாதார நிபுணர்கள் முடிவுக்கு வந்திருக்கிறார்கள்.

சிறு தொழில்களை ஊக்குவிப்பது சர்க்காரின் முக்கிய கட மையாகும்.

வெளிநாட்டு சாமான்கள், நம்நாட்டில் இறக்குமதி செய்யப் பட்டு, சிறுதொழிலுக்குப் புத்துயிர்கொடுத்துக்கொண்டிருக் கின்றன; இக்கெட்டான நிலையிலுள்ள சிறுதொழிலை, சீர்தூக்கி நிறுத்துபவை, எவை என்றால், அவைகள்தான் நாம் வெளிநாட் டிலிருந்து நம்நாட்டிற்கு இறக்குமதி செய்யும் சாமான்கள்; வெளி நாட்டுசாமான்கள் இங்கு வராவிடில், சிறுதொழில் ஸ்தம்பித்து விடும்; அத்தொழிலை நம்பிவாழும் வியாபாரிகளின் நிலைமை பரி தாபக்ரமாக முடியும்; உற்பத்திக்குறையும்; மக்களுக்குத் தேவை யான சாமான்களின் உற்பத்திக் குறைந்தால்விலைவாசிகள் ஏறும். விலைவாசிகள் ஏறுவதால், பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்படு வார்கள்; சிறுதொழிலை நம்பி இருக்கும் அநேக வியாபாரிகள்,

வேலையில்லாத்திண்டாட்டத்திற்குப் பலியாக்கபபடுவார்கள். வேலையில்லாத்திண்டாட்டம் அதிகரிக்கும்.

இந்த அபத்தமான, பயங்கர நிலைவராமல் தடுப்பது சர்க்காரின் அத்யாவசியமான கடமையாகும்; இறக்குமதிக்கட்டுப்பாட்டை கூடிய அளவு அகற்றி, தாராளமாக இறக்குமதி லைசென்ஸ் வழங்கவேண்டும்.

சிறுதொழில்களை நம்பி இருக்கும் வியாபாரிகள் பற்பல வழிகளில் பாதிக்கப்பட்டுள்ளார்கள்; தரமான மூலப்பொருள்கள் சரியான விலையில் இடைக்காமை; கருவிகள் திருப்திகரமாக இல்லாமை இவைகள் போன்ற கஷ்டங்கள் நிதிபற்ருக்குறையின் விளைவுகளாகும்; தகுந்த விற்பனை வசதி இல்லாமை, புதிய உற்பத்தி முறைகளை அறிந்துகொள்ளாமை, வரியின் சுமை தாங்கமுடியாமை போன்றவைகளும் சிறுதொழுல் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையாக இருக்கின்றன.

இப்படிப்பட்டப்பயங்கர சூழ்நிலையில், சிறுதொழில் வளர்ச்சி அடையவேண்டிய நிலை இங்கு நிலவுகிறது; நிதி பற்ருக்குறை தொழிலை பெரிய அளவு பாதிக்கிறது. தொழில் துறையில், சும தேவை பூர்த்திசெய்யப்படவில்லை; அநேக சாமான்களை வெளி நாட்டில் இருந்துதான் இறக்குமதி செய்ய வேண்டியதிருக்கிறது. சிறுதொழில் செய்யும் வியாபாரிகள் பலர், வெளிநாட்டிலிருந்து இறக்குமதிசெய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளார்கள்; யந்திரிக சாமான்கள் பெரிய அளவில்வெளி நாட்டில் இருந்துதான் இறக்குமதி செய்யப்படுகின்றன. ஜனத்தொகை பெருகுகிற அளவுக்கு உற்பத்தியைப் பெருக்கவேண்டுமென்ருல், இறக்குமதி லைசென்ஸ் வழங்குவது தாராளமாக இருக்கவேண்டும். கட்டுப்பாடு கூடிய அளவு தளர்த்தப்படவேண்டும்.

ஏற்றுமதி லைசென்ஸ் வழங்குவதிலும், கட்டுப்பாடு தளர்த்தப்படுவது அவசியமாகும்; ஏற்றுமதி லைசென்ஸ் வழங்குமுன், தேவையில்லாத கேள்விகள் பல கேட்கப்படுகின்றன. வழக்கமாக ஏற்றுமதி செய்துக்கொண்டிருப்பவர்களுக்குத்தான் இந்த லைசென்ஸ் வழங்கப்படுகிறது; இடையில், ஏதோ ஒரு காரணத்ததிஞல், எற்றுமதி செய்வதில், தடை எற்பட்டால், மறுமுறை லைசன்ஸ் பெறுவது கஷ்டமாக இருக்கிறது. ஏன் தொடர்ந்து, ஏற்றுமதி செய்யவில்லை? பூர்வீகமாக ஏற்றுமதி செய்கிருயா அல்லது தற்போதுதான் ஏற்றுமதி செய்யப்போகிருயா? இவைகள் போன்ற கேள்விகள் பல கேட்கப்படுகின்றன. இந்தக் கேள்விகள் தேவையற்றவை; ஏற்றுமதி லைசென்ஸ் வழங்குவதில் கட்டுப்பாட்டை தளர்த்திஞல், நாட்டின் பொருளாதாரம் அபிவிருத்தி அடையும் என்பது

எல்லோருக்கும் தெரிந்த வெட்ட வெளிச்சமான உண்மையாகும்; வேலையில்லாத் திண்டாட்டத்தைப்போக்க, நாட்டின் பற்றுக் குறையை அகற்ற, தொழிலை நம்பிவரும் வியாபாரிகளை ஊக்கு விக்க, உற்பத்தியைப் பெருக்க, நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்ய, சர்க்கார் செய்யவேண்டிய முக்கிய கடமை ஒன்று உண்டு. அதுதான் ஏற்றுமதி இறக்குமதி லைசென்ஸ் வழங்குவதில தாராளமனப்பான்மை; நம்முடைய, உற்பத்திப் பெருகி, வெளிநாட்டிற்கு ஏற்றுமதி செய்யும் சாமான்களின் பண மதிப்பு, இறக்குமதி செய்யும் சாமான்களின் பணமதிப்பைவிட அதிகரித்ததும், இந்த லைசென்ஸ் வழங்குவதில் கட்டுப்பாடு அமுல் நடத்துவது மிகவும் நல்லது; ஆகவே குறைந்தது 5 ஆண்டுகள் வரையாவது லைசென்ஸ் வழங்குவதில் தாராள மனப்பான்மை தேவையானது; அவசியமானதும் கூட; இதை இந்தியா சர்க்கார் கவனித்து, ஆவன செய்யவேண்டுமென்று தொழில் வற்புறுத்துகிறது.

சர்க்கார் ஏற்றுமதி. இறக்குமதி கொள்கையை வகுப்பதற்கு முன்னுல், அவைகள் சம்பந்தப்பட்ட, தனி நபர்கள், நிபுணர்கள் ஆலோசனையைக் கேட்டு, அந்த ஆலோசனைபடி கொள்கையை திருத்தி, வெளியிட வந்திருப்பதை தொழில் பத்திரிகை பாராட்டு கிறது; இனிமேலும் இப்படிப்பட்ட முறையில், கொள்கையை வகுப்பது சாலச்சிறந்ததாகுமென்று கூறிக்கொள்ள ஆசைபடுகி ருேம.

அட்டைப்பட விளக்கம்!

போலிஸ் வான் ஆறுமுகநேரி ''நேரு காபிஸ்டால்'' முன் வந்ததும், காரை நிறுத்தி வைத்துவிட்டு அங்குமிங்கும் பார்த்தார் ஏட்டு கிருஷ்ணசாமி. ''ஸார் இந்த பக்கமாக சாக்லட் நிறமான ஒரு கார் புயல் வேகத்தில் போகிறது. உள்ளே இரண்டு இளம்பெண்கள் இருந்தார்கள்;காரை ஓட்டிச் செல்வதும் ஒரு இளம் பெண்தான்'' என்ருர் ஓட்டல் புரோப்ரய்ட்டர் ஆனந்த நாயர். சுமதி கடத்தப்பட்டாள்! சாக்லட் நிறக்காரில், ஒரு வேளை சுமதி கடத்தப்பட்டிருக்கலாமோ? சாக்லட் நிறக் கார், ஓடிக் கொண்டிருப்பதைத் தான் நமது அட்டைப் படம் விளக்குகிறது.]

''சுமதியின் சபதம்'' திருப்புக; விளங்கும்!

ஸ்ரீ. காமராஜின் புன்முறுவல்!

முதன் மந்திரி ஸ்ரீ. கே. காமராஜ் அவர்கள், காலம் சென்ற ஸ்ரீ. சத்திய மூர்த்தி அவர்கள் திரு உருவப்படத்தை சென்னை ஸ்ரீநிவாச சாஸ்திரி ஹாலில் திறந்து வைக்கும்போது, உள்ளப் பூரிப்போடு புன்முறுவல் செய்கிறார். இந்தப்படத்தை மாஜி அட்வோகேட் ஜெனரல் ஸ்ரீ. கே. ராஜா அய்யர் அன்பளிப்பாகக் கொடுத்தார்.

அரசியலின் வரலாறு

சி.ஜெ.எம்

தேன்மொழிக்கு,

பூத்துக் குலுங்கும் புதுமைப் பெண்ணாகிய நீ-புது உலக சிற்பியாகப்போகும் நீ - புதுமைக் கருத்துக்களினால் தோய்ந்தெடுக்கப்பட்ட நீ-"அரசியலின் வரலாறு"வைப் பற்றி நான் எழுத ஆர்வம் தெரிவித்திருந்தாய், வரவேற்கிறேன். கேள்!

அரசியலின் வரலாற்றைப் பற்றி நான் கூறுவதற்குமுன் நான்கூறும் ஒரு சில வார்த்தைகளை உன் மனதில் போட்டுவை. உலக ஜோதி; உத்தமர்; அஹிம்ஷா மூர்த்தி மகாத்மா காந்தி அடிகளை சுட்டுக் கொன்றது இந்த அரசியல் உலகம்; அடிமைகளை ஒழித்து, அடிமை விலங்கை நொறுக்கி-அவர்கள் நலனுக்காக தன் வாழ்நாள் முழுவதும் போராடினார்-அப்ராஹாம் லிங்கன். அந்த அடிமைகளின் ஒருவன் தான் அந்த உத்தமரை சுட்டுக்கொன்றான்; அந்தப் பொல்லாதவனும், அரசியல் போதையில்தான் அவரை சுட்டு வீழ்த்தினானும். ஆகவே தான் அரசியலை "மது" என்று கூறுகிறார்கள். ஆகவே தான் "ரௌடிகளின் கடைசி புகலிடம் அரசியல்" என்று கூறினார் போலும் ஆங்கில பேராசிரியர் டாக்டர் ஜான்சன். நீ பள்ளி மாணவி; அரசியலை நன்கு தெரிந்துகொள்: அரசியலில் குதித்து விளையாடலாம் என்று நினையாதே அது ஆபத்து; சூரியனைப்பார்; சூரியனைத் தொட்டு விளையாடலாம் என்று நீ நினைத்தால், உன்னை நான் ஒரு பேதைப் பெண் என்று தான் கூறுவேன்; காரணம் அது உன்னை சுட்டுபொசுக்கிவிடும், என்று நான் நினைப்பதால்; சூரியனைப் பொல்தான் அரசியலும்.

பூர்விககாலத்தில் ஒரு நிலையான அரசாங்கம் நிறுவப்படுவதற்கு முன்னால், நாட்டில், குழப்பமும், கொந்தளிப் பும் எங்கும் தலைவிரித்தாடியது. அமைதி இல்லை; சொத்துக்கள் குரையாடப் பட்டன; பெண்களுக்கு நிரந்தரமான கணவர்கள் கிடையாது; இன்று ஒருவன் கணவனாக இருப்பான்; நாளை, அவனைவிட பலம்படைத்தவன், அவனைத் தாக்கி அவனுடைய மனைவியை அப

கரித்துக் கொள்வானும்; குரங்குகள் கைகளில் சிக்கி சித்திரவதைமாக்கப்பட்ட மலர்கள் போல்தான் பெண்களும் இருந்தார்கள்.

ஆணவக்காரன் — அதிகாரம் படைத்தவன் அரசனுக்கப்பட்டான். அவனைக்கண்டால் எல்லோருக்கும் தொடை நடுக்கம்; அவன் கூறுவதுதான் வேதம்; அவன் உதட்டிலிருந்து உதிர்க்கும் வார்த்தைகள் தான் சட்ட திட்டங்கள். "பூர்வீக அரசியல் உலகம் ஒரு விசித்திரமானது. நியாயம், ஒழுங்கு, கட்டுப்பாடு ஒன்றும் இடையாது; ஒவ்வொருவனுக்கும், அவனைத்தவிர மற்றெல்லோரும் எதிரிகள்; மனிதன் சுயநலமுள்ளவன் கெட்டவன்" என்று ஹாப்ஸ் (1588-1679) என்ற அரசியல் ஞானி கூறுகிறார்.

அரசன் தன்பலத்தால் பதவிக்கு வந்ததும், தான் ஆண்டவனால் நியமிக்கப்பட்டவன் என்று கூறினான்; தன்னுடைய ராஜ்யம் கடவுள் ராஜ்யம் (Divine State) என்றும், தான் கடவுளுக்குத்தான் கட்டுப்பட்டவன் என்றும் கூறினான்; மக்களுக்கு அரசன் கட்டுப்பட்டவனல்ல. மக்களை என்ன வேண்டுமென்றாலும், செய்ய 'அரசன் அளவு கடந்த அதிகாரம்' படைத்திருந்தான் அரசன் ஆண்டவனால் நியமிக்கப்பட்டவன் என்பதற்கு, மஹாபாரதத்திலிருந்தும், பைபிளிலிருந்தும் மேற்கோளைக்காட்டினான்.

நாட்டில் குழப்பமும், கொந்தளிப்பும் ஏற்பட்டதாம்; தலைவன் இல்லாமல் மக்கள் தவித்தார்களாம்; மக்கள் எல்லோரும் ஒன்றுகூடி கடவுளிடம், ஓடினார்களாம். ஓடியவர்கள் "கடவுளே, தலைவன், இல்லாமல் நாங்கள் அழிந்துபோகிறோம். எங்களுக்கு ஒரு தலைவன் கொடும்; அவன் எங்களைப் பாதுகாக்கட்டும்" என்று முறையிட்டார்களாம். உடனே கடவுள் மனுவை தலைவனாக நியமித்தாராம். இதுதான் மஹாபாரதம் கூறும் கதை; ஆகவே மஹாபாரதத்தின்படி, கடவுள் மக்களின் வேண்டுகோளின் மேல் மனுவை அரசனாக நியமித்தார்; இந்த மேற்கோளை எடுத்துக்காட்டி, அரசர்களாகிய நாங்கள், ஆண்டவனால் படைக்கப்பட்டோம். என்று கூறி அந்தகால அரசர்கள் ஆட்சி செய்தார்கள்.

மேல்நாட்டு அரசர்கள் பைபிளில் இருந்து மேற்கோள் காட்டினார்கள். "கடவுளுக்குத்தான் அதிகாரம் உண்டும் அப்படியானால், மனிதர்களில் அதிகாரம் படைத்தவர்கள், கடவுளின் பிரதிநிதிகள்; மக்கள் எல்லோரும் அந்த அதிகாரம் படைத்தவனுக்குக் கீழ்படிதல்வேண்டும் அதிகாரம் படைத்தவர்களை எதிர்க்கிறவர்கள், ஆண்டவனை எதிர்ப்பவர்களாகும், அவர்கள் அழிந்து போவார்கள், என்று "பைபிள்"ளில் கூறப்பட்டதை மேற்கோளாக எடுத்துக்காட்டி "மக்களே, அரசரை எதிர்க்காதீர்கள், நீங்கள் அழிந்து போவீர்கள்" என்று பழங்கால மேல் நாட்டு, அரசர்கள் மக்களை அச்சுறுத்தி ஆட்சிசெய்தார்கள். இப்படி ஆட்சி

செய்ததற்கு உதாரணமாக இங்கிலாந்து தேசத்து அரசர் ஜேம்ஸ் I நமக்குக் கிடைத்துள்ளார்: அவர் ஆட்சியில் மக்கள் நசுக்கப் பட்டார்கள்: அநீதி தாண்டவமாடியது; குழப்பமும், கொந்தளிப்பும் கோரத்தாண்டவமாடியது: அவரது விவேகமற்ற அரசியல் மக்களை விழிப்படையச் செய்தது. எரிமலை போல் எழுந்த எதிர்ப்புக்களைப் பார்த்து அவர் ஏளனம் செய்தார்: பாராளு மன்றத்தில் அவர் பேசியதைக் கேள் "அரசன் சகல அதிகாரமும் படைத்தவன். அவன் செய்யும் காரியங்கள் அத்தனையும் நல்லவைகள். அவன் கெட்டவனாக இருந்தால், அது கடவுளின் ஆணை; ஆண்டவன் அவனைக் கெட்டவனாக சிருஷ்டித்து, மக்களைத் தண்டிக்க அனுப்பியுள்ளான். ஆகவே அரசனை நல்லவனாக்கவேண்டுமென்றால், அரசனை குற்றம் கூறக்கூடாது. கடவுளிடம் அரசனை நல்லவனாக்க ஜெபம்பண்ணவேண்டும். அரசன் கடவுளுக்குக் கட்டுப்பட்டவனேத் தவிர மக்களுக்கு அல்ல" என்று அந்த பொல்லாத அரசன் கூறி முடித்தான்.

"கடவுள் ராஜ்யம்" என்ற பெயரை உடைய அந்த ராஜ்யத்தை ஆட்சி செய்த அரசன் அளவு கடந்த அதிகாரம் பெற்றிருந்தான். இ. மு. 700ம் ஆண்டில் கிரேக்க நாட்டிலுள்ள "ஸ்பார்ட்டா" என்ற நகரில் இந்த கடவுள் ராஜ்யம் அமைக்கப்பட்டிருந்தது. "ஸ்பார்ட்டா" நகரில், குழந்தைகள் பிறந்ததும், அரசரின் ஒற்றர்கள் பார்வை இடுவார்கள்; குழந்தை புஷ்டியாக இல்லாமல் இருந்தால், பெற்றோரிடமிருந்து குழந்தையை பிரித்து, "டைகடேஸ்" மலையிலிருந்து அதை உருட்டிவிடுவார்களாம். மலையிலிருந்து அதை உருட்டி விடுவார்களாம்; மலையிலிருந்து உருட்டப்படும் குழந்தை இறந்துபோகும். ஏன் இப்படி செய்தார்கள் என்றால், புஷ்டியில்லாக் குழந்தைகள் நாட்டிற்கு அவசியமில்லை என்று அரசன் கருதியதால்தான். நன்கு உறுதியான குழந்தைகள் பெற்றோர்களிடம் திருப்பி கொடுக்கப்படும். குழந்தை வளர்ந்து 7 ஆண்டுகள் பூர்த்தியானதும், சிறுவனை அரசாங்கம் எடுத்துக் கொள்ளும்: பிறகு பெற்றோர்கள் அந்த சிறுவன் மீது உரிமை பாராட்ட முடியாது. அவன் அரசாங்கத்துக்குக் கொடுக்கப்பட்டு விடுவான். அவன் அரசாங்கச் சொத்து. அவனுக்குத் திருமணம் நடக்கும்; ஆனால் மனைவியோடு உல்லாசமாக வாழ முடியாது. மனைவியை பார்க்க வேண்டுமென்றாலோ, அல்லது குழந்தைகளை பார்க்க வேண்டு மென்றாலோ, அவன் திருட்டுத்தனமாகத்தான் வரவேண்டும். இதை எல்லாம் ஏன் கூறுகிறேன் என்றால், அந்த காலத்து அரசர்கள் மக்கள் மீது எவ்வளவு அதிகாரம் வைத்திருந்தார்கள் என்பதை தெரிவிக்க;

அக்காலத்திலுள்ள அரசர்களை எதிர்க்க யாரும் துணியவில்லை, கடவுளிடம் எவ்வளவு நம்பிக்கையும், மரியாதையும், மக்கள் வைத்திருந்தார்களோ,

சர்வதேச தொழில் ஸ்தாபனம்?

சர்வதேச தொழில் ஸ்தாபனம் தொழிலில் முன்னேற்றம், தொழிலாளர்களின் நலன்கள் ஆகியவைகளை நன்கு கவனித்து ஆவன செய்தல் போன்ற நல்லபணிகளை கடந்த 40 ஆண்டுகளாக, செய்து வருவது பாராட்டத்தக்கது.

தொழிலாளிகளுடைய நிலையை வெவ்வேறு கோணங்களில் நன்கு ஆராய்ந்து வருகிறது; தொழிற்சாலைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் நிலையை மட்டும் கணித்து ஆவன செய்வதால், உலகதொழிலாளர்கள் நிலை உயர்ந்து விடாது

அதேப்போல் அரசனிடமும், அவ்வளவு அளவு நம்பிக்கையும், மரியாதையும் வைத்திருந்தார்கள், ஆண்டவன் பெயரால் அவன் ஆட்சி செய்து வந்தான்; ஆயிரம் குற்றங்கள் அரசன் செய்வான். ஆனால் குற்றங்கள் குற்றமாகக் கருதப்படமாட்டாது. காரணம் ஆண்டவன் பெயரால் குற்றங்கள் செய்யப் படுவதால்;

கொலைகள் பல அரசன் செய்வான். ஏன் கொலை செய்தீர்? என்று அவனைக்கேட்க யாரும் முன்வருவதில்லை, அவனைக் கேட்டால், "ஆண்டவனின் ஆணையை, அவன் பிரதிநிதியாகிய நான் செய்கிறேன். அதை நீ கேட்டால், ஆண்டவனின் எதிரி நீ: ஆண்டவனின் எதிரி அழிக்கப்பட வேண்டும்" என்று கூறி, அரசனிடம் கேள்வி கேட்டவனை கொன்று விடுவான் அரசன். மக்களும் அரசனோடு சேர்ந்து அவனை ஒழிக்க முன் வருவார்கள்.

முதல் முதலில் இப்படிப் பட்ட கடவுள் ராஜ்யம் (Divine State) தான் உலக முழுவதும் பரவி இருந்தது; இட்டத்தட்ட கி. மு. 700ம் ஆண்டில் கடவுள் ராஜ்யம் உலகம் முழுவதும் பரவி இருந்தது.

முதல் முதலில் அரசியல் இப்படிப்பட்ட கடவுள் ராஜ்யத்திலிருந்தான் உருவானது; அரசன் வாயில் இருந்து உதிர்ந்தவைகள் தான் சட்டத்திட்டங்கள்; அவன் நினைத்தது தான் ஒழுங்கு. அவன் தான் சட்டம் அவன் தான் நீதிபதி; அவன் தான் கடவுள்; அவன் தான் எல்லாம். மனித ரூபத்திலுள்ள கடவுள் தான் அரசன் என்ற ஏகோபித்த கருத்து எல்லோருடைய மத்தியிலும் குடி கொண்டிருந்தது. அன்பே அடுத்து உன்கடிதம் பார்த்து.

இப்படிக்கு,

"ஜெமார்"

விவசாயத் துறையிலுள்ள தொழிலாளர்கள், இன்னும் தொழிற்சாலைகளில் அல்லாத மற்றைய இடங்களில் இயங்கி வரும் 'தொழிலாளர்கள் ஆகியவர்களின் நிலையை எல்லாம் நன்கு ஆராய்ந்து பார்த்து, அவர்கள் மத்தியில் குடிகொண்டிருக்கும் குறைகளை அகற்றி, அவர்கள் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது மிகமிக அவசிய மாகும். தற்போதுள்ள இந்த சர்வதேச தொழில் ஸ்தாபனம், ஆரம்பகாலத்தில் நிறுவப்பட்டதிலிருந்து மாறுதல் அடைந்துள்ளது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். தற்போது உலகிலுள்ள வெவ்வேறு நாடுகளில், வெவ்வேறு விதமாக பொருளாதாரக் கொள்கைகள் பின்பற்றப்படுகின்றன. அரசியலில் ஒரு பெரிய மாறுபாடு ஏற்பட்டுள்ளது அரசியல் துறையில் லேடின் அமெரிக்கா, ஆசியா, மத்திய கிழக்குநாடுகள், ஆப்பிரிக்கா, ஆகிய நாடுகளில் பின் தங்கிய இடங்கள் பல உள;

இப்படிப்பட்ட பின் தங்கிய நாடுகளின் தொழிலாளர்களின் நலனை முன்னேற்ற மடைய ஆவன செய்யவேண்டும். உலகத்தை கவ்வி இருக்கும் யுத்த மேகங்கள் அகற்றப்படவேண்டும். நாட்டில் ஏற்பட இருக்கும் குழப்பத்தையும் கொந்தளிப்பையும் அவ்வவ்போதே அகற்றவேண்டும்; உலக மக்கள் எல்லோரும் ஒற்றுமையாக இருக்கவேண்டும் என்ற நல்ல கருத்தை அடிப்படையை கொண்டு நிறுவப்பட்டதுதான் சர்வதேச சங்கம் (League of Nations) ஆகும். இந்த லீக் 1919ம் ஆண்டு நிறுவப்பட்டது. இதனுடைய அலுவலகத்தின் ஒரு பகுதிதான் சர்வதேச தொழில் ஸ்தாபனமாகும் (I.L.O.) இக்கட்டத்தப்ட இந்த சர்வதேச தொழில் ஸ்தாபனம், இயங்கி 40 ஆண்டுகள் உருண்டோடிவிட்டன.

சமூக நிறுவனங்கள் மூலம். நியாயம், ஒழுங்கு, சமாதானம் ஆகியவைகளை மக்கள் மத்தியில் பரப்பி நல்லதொரு தொண்டு செய்து வருகிறது. இதில் கவனக் குறைவு இருக்கக் கூடாது.

யுத்த மேகங்கள், ஒருமாதிரியாக படை எடுக்கின்றன இந்த சந்தர்பத்தில், 1919ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட லீக் ஆப் நேஷன்ஸ் (League of Nations) உலகில் சமாதானம் நிறுவுவதில் தோல்வி கண்ட காரணத்தை எடுத்து பார்ப்பது நல்லது. (1931—33ம்) ஆண்டு சைனு, ஜப்பான் தகராறு மூண்டது. இதற்குக் காரணம், நாடு பிடிக்கும் வேட்டைதான்; ஒரு நாட்டிலுள்ள தொழில் சக்தியை இன்னொரு நாடு விழுங்கத்திட்டம் தீட்டியது.

1931ம் ஆண்டு ஜப்பான் சைனுவுக்குச் சேர்ந்த மஞ்சூரியாவின் மீது படை எடுத்தது. லீக் ஆப் நேஷன்ஸ் ஒரு நிபுணர் கமிட்டி போட்டு, தகராறுக்கான காரணங்களை விசாரித்தது. பிறகு கமிட்டி தன்னுடைய பொர்சை சமர்ப்பித்தது; ஆனல் ஜப்பான் பொர்சை

ஏற்க மறுத்தது போர் நடந்து கொண்டு இருந்தது. பிறகு. ஸ்தாபனத்திலிருந்து, ஜப்பான் விலகிக்கொண்டது. இதே மாதிரிதான் (1934—36)ல் லீக்இன் வேண்டுகோளை இத்தாலி நிராகரித்தது. இத்தாலி அபிஸினியா மீது படை எடுத்து, அதை விழுங்கி விட்டது.

லீக் ஆப் நேஷன்ஸ் தோல்விக்குக் காரணம் என்ன? லீக்இல், அமெரிக்கா சேராமல் வெளியே இருந்துவிட்டது. காலப்போக்கில், ஜப்பான், ஜெர்மனி, இத்தாலி. லீக்கை விட்டு வெளியேறிவிட்டன. ஆகவே லீக் ஆப் நேஷன்ஸ், தன்னுடைய குறிக்கோளை அடைய முடியாமல் தோல்வி கண்டது. தோல்விக்கு பாரா பட்சமும் ஒரு காரணமாகும்.

சர்வதேச தொழில் ஸ்தாபனம் (I.L.O.) தொழிலாளர்களின் நிலையை ஆராய்ந்து ஆவன செய்வதில் பாராபக்ஷம் காட்டக்கூடாது. எல்லா நாட்டுத்தொழிலாளர்களின் நலன்களும் நன்கு பேணப்படவேண்டும். விசேஷமாக பின் தங்கிய நாட்டிலுள்ள, தொழிலாளர்கள் நலனைப் பேணுவதில் விசேஷ கவனம் செலுத்த வேண்டும்.

நாட்டில் நிலவும் ஏற்றதாழ்வு அகற்றப்பட வேண்டும். உலகின் முதுகெலும்பாகிய தொழிலாளர்கள் நலன் நன்கு பர்து காக்கப்பட்டால் உண்மையிலே, நாட்டில் சமாதானம் நிலவ ஏதுவாகும். 1919ம் ஆண்டு நிறுவப்பட்ட லீக் ஆப் நேஷன்ஸின் ஒருபிரிவாகிய இந்த சர்வதேச தொழில் ஸ்தாபனம் (I.L.O) உண்மையிலே, லீக் ஆப் நேஷன்ஸ் விட்டுப்போன பணிகளை செய்ய, அது செய்து விட்ட குறைகளை முளையிலே கிள்ளி விடுவது நல்லதாகும். உலகம் முன்னேற அதுதான் வழி!

—※—

பொன்மொழி

கடவுள் இருக்கிறார் என்பதும், அவர் அநீதியையும் அடிமைத் தனத்தையும் வெறுப்பவர் என்பதுவும் எனக்குத் தெரியும். புயல் நெருங்கக் காண்கிறேன். அதுவும் அவரது திருவுளமாயின், அதற்கு நான் தயார் என்று நான் கருதுகிறேன். எனக்கு அவர் ஒரு வேலை குறித்திருக்கிறார். என்பதே என் எண்ணம். நான் ஒன்றும் இல்லை; சத்தியமே எல்லாம்.

—லிங்கன்.

வரப்பெற்றோம்!

தமிழ் எழுத்தாளர் சங்க வெளியீடான "பாரதி" என்ற புத்தகம் வரப்பெற்றோம். சிறந்த எழுத்தாளர்களின் கட்டுரைகள் நிறைய இடம் பெறுகின்றன. எல்லோரும் படிக்க வேண்டிய ஒரு நல்ல புத்தகம் "பாரதி"

இந்தியக் கதைகள்

சில வாரங்களுக்கு முன் அமெரிக்காவிலுள்ள பதிப்பாளர் ஒருவர் இந்தியாவின் பண்பாட்டு வரலாற்றைப் பற்றிய நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். "பண்டைக் கால இந்தியாவின் கதைகள்" என்பது அந் நூலின் பெயர். அது பன்னிரண்டாவது நூற்றூண்டு நூல். அதிலுள்ள கதைகள் எழுதப்பட்டுப் பல நூற்றூண்களாகிவிட்டன. எனினும் அவற்றின் இனிமை குன்றவில்லை.

கதைகள் பிறக்கும் இடமாக இந்தியா விளங்கியுள்ளது. ஈஸாப்பு கதைகள் பொக்காசியோ, சாஸர் ஆகியோரின் இலக்கியக் கதைகளைத் தழுவியவையாக இருத்தல் கூடும் என்று கதை நிபுணரும் இலக்கிய அறிஞரும் கருதுகின்றனர் பஞ்ச தந்திரமும் ஹிதோபதேசமும் கதைக் களஞ்சியங்கள். அவை அரேபியர் மூலம் ஐரோப்பா சென்று விட்டன. அவற்றைத் தழுவிய கதைகள் பல நூற்றூண்டுகளாக ஐரோப்பாவில் பொழுது போக்காகச் சொல்லப்பட்டு வருகின்றன.

பேராசிரியர் வான் புயிட்டெனுனின் புதிய இந்தியக் கதைத் தொகுப்பை நான் படித்த போது பல ஆண்டுகளுக்கு முன் பல்கலைக் கழகத்தில் நான் எம். ஏ. பட்டம் பெற ஆராய்ச்சி செய்த காலத்து அநுபவம் ஒன்று என் நினைவுக்கு வந்தது.

புகழ்பெற்ற அமெரிக்கக் கதை நிபுணர் ஒருவருக்கு நான் ஆராய்ச்சித் துறையில் உதவி செய்து கொண்டிருந்தேன். "தார் பேபி" (தார்க் குழந்தை) என்னும் கதையின் பல்வேறு வடிவங்களை நான் திரட்டிக் கொண்டிருந்தேன். அமெரிக்க நீக்ரோக்களிடமிருந்து ஜோயல் சான்ட்லர் ஹாரிஸ் அறிந்து கொண்ட கதையின் மூலமாகத் தான் அமெரிக்கருக்கு இது தெரிய வந்திருக்கிறது.

முயல் கதை

அது ஒரு திருட்டு முயலின் கதை. அந்த முயல் அழகிய சிறு பெண்ணின் சிலை ஒன்றைக் கண்டது. அது ஒரு தார்ச் சிலை, அதில் அந்தமுயல் சிக்கிக் கொண்டது. சிலையின் தார் அதனைச் சிக்க வைத்து விட்டது. அதன் பாதங்கள் சிலையில் ஒட்டிக் கொண்டன. அதன்பின் அதன் தலையும் தாரில் ஒட்டிக் கொண்டது.

இது அமெரிக்க நீக்ரோக்களின் கதை என்று பலர் கருதினர். ஆராய்ந்து பார்த்ததில் இதன் மிகப் பழைய வடிவத்தின் முக்கிய இயல்கள் இந்தி

யக் கதை ஒன்றில் காணப்படுவது தெரிய வந்தது.

இரண்டாயிரம் ஆண்டுகட்கு முற்பட்டவை புத்த ஜாதகக் கதைகள். அவற்றுள் ஒன்று போதி சத்துவர். அரக்கன் ஒருவனோடு காட்டில் போர் செய்ததைப் பற்றியது. நெடுநேரம் அவர் வீரத்துடன் போர் செய்தார். இறுதியில் கை கொண்டும் கால் கொண்டும், தலை கொண்டும் அவர் அரக்கனைத் தாக்கினார். அரக்கன் ஒட்டும் சட்டை அணிந்திருந்தான். போதி சத்துவரின் கையும் காலும் தலையும் சட்டையில் சிக்கிக் கொண்டன.

இந்தக் கதையின் முக்கிய நிகழ்ச்சியை முக்கியமானதாகக் கொண்ட வேறு பல ஹிந்துக் கதைகளும் உள்ளன. கதை அமைப்பில் வேறுபாடு உள்ளதெனினும், முக்கிய நிகழ்ச்சி எல்லாவற்றிற்கும் பொதுவாக உள்ளது.

கதைகள் பரவிய விதம்

வட அமெரிக்கா, தென் அமெரிக்கா ஆகியவற்றின் கதைகளிலிருந்து ஒன்று தெரிய வந்தது. இந்தக் கதைகள் அரேபியர்கள்மூலம் இந்தியாவிலிருந்து ஆப்பிரிக்காவுக்குச் சென்றிருத்தல் வேண்டும்; அங்கிருந்து நீக்ரோ அடிமைகளோடு அவை அமெரிக்கா சென்றிருக்க வேண்டும்.

ஒருநாள் பல்கலைக் கழக நூலகத்தில் ஜெர்மன் மொழியில் 1857-ல் லித்துவேனியக் கதைகள் வெளியிடப்பட்டன. அக் கதைகளில் ஒன்று தார்க் குழந்தைக் கதை. ஆப்பிரிக்க நீக்ரோக்கள் அந்தக் குளிர் நாட்டுக்குச் சென்றிருக்க முடியாது. ஆசியாவின் சமவெளி வழியாகவே பண்டைக் காலத்து இந்தியக் கதை ஐரோப்பாவுக்குச் சென்றிருத்தல் வேண்டும்.

ஒன்றுக்கொன்று தொலைவில் உள்ள நாடுகளில் பண்பாடுகள் ஒன்றையொன்று எவ்வாறு பாதிக்கின்றன என்பதை அறிய வேண்டும் என்னும் ஆவலை அந்த ஆராய்ச்சி ஊட்டி விட்டது. ஆன்மார்த்தத் துறையிலும், தொழில் நுட்பத் துறையிலும் ஒரு நாடு கண்ட உண்மைகள் சுற்றிச் சுற்றிப் பல நாடுகளுக்கும் செல்கின்றன என்று தெரிய வருகிறது.

—●—

சாத்தனூர் அணைப்பகுதியில் பூங்கா

சுற்றுப்பிரயாணம் செய்பவர்களையும், சுற்றுலா வருவோரையும் ஈர்க்கும் முறையில் அணைப் பகுதிகளை எழில்மிக்க இடங்களாக வைத்திருக்க வேண்டும் என்ற அரசாங்கத்தின் பொதுக் கொள்கையை யொட்டி, வடாற்காடு மாவட்டம் சாத்தனூர் தேக்கப்பகுதியில் பூங்கா, புல்வெளி, நீரூற்று முதலியன அமைப்பதற்கு ரூ. 1 லட்சம் செலவிட அரசாங்கம் அனுமதித்துள்ளது. சாத்தனூர் தேக்கத்திட்ட செலவு மதிப்பீட்டில் மிச்சம் நின்ற பணத்திலிருந்து இத்தொகை அளிக்கப்படும்.

ஓடிய கதை

சுமதி மைலாப்பூரிலே ஒரு பிரபல வக்கீல். அவளுடைய சொந்த ஊர் ஆறுமுகநேரியாகும். எதிர்பாராத விதமாக, சுமதியின் காதலனான ராஜரத்தினம் சென்னைக்கு வந்து சேர்ந்தான். வந்தவன், சுமதியிடம் ஒன்றும் கூறாமல், சுமதியின் பங்களாவை விட்டு வெளியேறிவிட்டான். சுமதி, தன்னுடைய ஊராகிய ஆறுமுகநேரியில் 8 ஆண்டுகளுக்குமுன் நடந்த சம்பவங்களை ஒன்றன்பின் ஒன்றாக நினைத்தாள்.

கஜபதி நாயக்கரும், கோவிந்தசாமி நாயக்கரும் சகோதரர்களாவார்கள்; கஜபதி நாயக்கருக்கு ஒரே மகள்; பெயர் கமலா. கோவிந்தசாமி நாயக்கருக்கு இரண்டு புதல்வர்கள்—ராஜரத்தினம், சத்தியவேல். பாண்டியன் நாயக்கர் தோப்பில் தேங்காய் திருடினான்; திருட்டைக்கண்டு பிடித்து, கமலா போலீசுக்குத் தெரியப்படுத்திவிட்டாள். பாண்டியன் கைது செய்யப்பட்டான்; குடும்பத்தகராறு வலுப்பெற்றது; கஜபதி நாயக்கர் தாக்குண்டார்: இந்த சந்தர்ப்பத்தில் சுமதியை ராஜரத்தினம் அடித்து விட்டான்;

"சுமதி கடத்தப்பட்டாள் கட்டப்பொம்மன் சத்திரத்தில் இருக்கிறாள். அவளுக்கு விஷம் கொடுக்கப்பட்டுள்ளது!" என்று போலீசுக்கு ஒரு இளம் பெண் போன் பண்ணினாள். போலிஸ் வான் கட்டபொம்மன் சத்திரத்திற்குச் செல்லத்தயாரானது.

9. கட்டபொம்மன் சத்திரம்!

போலிஸ் "வான்" புயல் வேகத்தில் பறந்தது. எட்டு கிருஷ்ணசாமி பக்கத்தில் கண்ணப்ப முதலியார், பிணம்போல் சாய்ந்து கிடந்தார். "வான்" மெயின் ரோட்டை அடைந்துவிட்டது.

கட்டப் பொம்மன் சத்திரம், ஆறுமுகநேரியை விட்டு விலகி, சுமார் ஒரு மைல் தூரத்தில், ரோட்டை ஒட்டி இருக்கிறது. பள்ளி வாசல்முக்கு பக்கமே, ஆட்க்கள் நடமாட்டம் குறைந்துவிடும். பள்ளிவாசல்முக்கில் ரோடு திரும்பி வளைந்து வளைந்து காயல்பட்டணம் வழியாக

திருச்செந்தூர் செல்லுகிறது. அதற்கும் கட்டபொம்மன் சத்திரத்திற்கும் சுமார் 2 பர்லாங்கு தூரம் இருக்கும்: சத்திரம் பக்கம் எப்போதுமே ஆழ்ந்த அமைதி நிலவும்: சத்திரத்தை சுற்றியுள்ள காட்டு மரங்களில் மனிதர்கள் புக முடியாத அளவு செடிகள் படர்ந்து, பற்பல நிற மலர்களுடன் பார்க்க பயங்கரமாக இருக்கும்: சத்திரத்தினுள் தங்கள் வாசஸ்தலங்களை அமைத்திருக்கும் வெளவால்கள், மரங்களுக்கும், சத்திரத்திற்கும் பறந்த வண்ணமாகவும், ஒரு சில வெளவால்கள் தரையை ஒட்டி பறந்துகொண்டும் இருப்பதை பார்த்தால், வெளவால்கள் சாம்ராஜ்யம் சத்திரத்தில் நிறுவப்பட்டு விட்டதோ, என்று யாரும் ஐயம்பட்டு விடுவார்கள். அவைகள்போடும் சத்தம், மனிதர்களை விரட்டி விட்டு தங்கள் சாம்ராஜ்யத்தை அமைத்து விட்டோம். ஆகையால் நாங்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்கிறோம், என்று, அங்கு தப்பித்தவறி செல்லும் ஒருசில மனிதர்களுக்கு சவால் விட்டமாதி இருக்கும். சத்திரத்தை ஒட்டியுள்ள தூங்குமூஞ்சு மரங்களில் மரத்தை விட்டு மரத்துக்குத்தாவியும் மரங்களில் பாதிகண்ணை மூடி கொண்டும், வானத்தைபிளக்கும் அளவுக்கு ''ஹோ...ஹோ'' என்று அலறும் ஆந்தைகளின் சத்தம், மெயின், ரோட்டில் செல்லுபவர்களை அச்சுறுத்தும். ஆந்தைகள், மரங்களின் மேல் பறந்து சத்திரத்தைச் சுற்றி சுற்றி வந்த வண்ணமாக இருக்கும். இப்படிப்பட்ட பயங்கர சத்திரம்தான் கட்டபொம்மன் சத்திரம்! ரோட்டிலிருந்து நேராக சத்திரத்திற்குள் புக முடியாத வண்ணம், முட்களும், புதர்களும் நிறைய ஒற்றையடி பாதையில் படிந்து கிடக்கும்.

சத்திரத்திற்கு வரவேண்டுமென்றால், காயல்பட்டணம் ரயில்வே ஸ்டேசனுக்கு வந்து, ஸ்டேசனிலிருந்து சத்திரத்திற்குள் செல்லும் வண்டிப்பாதை வழியாகத்தான் வர முடியும். கட்டபொம்மன் தீட்டி வைத்த சித்திரப் பாடுகளமைந்த அந்த சத்திரம், சிதைந்து சின்னா பின்னமாக்கப்பட்டு, கட்டிடத்தைத் தாங்கிய தூண்களில், கீறல்கள் ஏற்பட்டு, தரையில் எப்போது விழலாம் என்ற சந்தர்ப்பத்தை எதிர் நோக்கிய வண்ணமாக இருப்பதுபோல் தோன்றும்.

கட்டிடத்தை ஒட்டி, பச்சைப் பசேலென்று பாசிகளடர்ந்து போன ஒரு குளம்; குளத்திற்கு நடுவில் ஒருபெரிய கிணறு: குளத்தையும், சத்திரத்தின் பாதாள அறையையும் சேர்க்கிறது ஒருபடிக்கட்டு; படிக்கட்டு வழியாகத்தான் பாதாள அறைக்குள் செல்லமுடியும்; ஒரு ஆள் குனிந்து கொண்டு தான் அறையினுள் செல்ல முடியும்; மழைகாலத்தில், குளம் பெருக்கெடுத்தால் கூட தண்ணீர் அறையினுள்செல்லாதாம்; எவ்வளவு பெரிய அளவு மழை பெய்தால் கூட கட்டபொம்மன் பாதாள அறையினுள் தண்ணீர் செல்லாது

என்றும், குளம் நிறம்பி, படிக்கட்டுகளெல்லாம் மூழ்கிவிட்டால், கடல் பொங்கி ஊரையே அழித்து விடுமென்றும் ஒரு கதை அவ்வூர் பெரியவர்கள் கூறுவார்கள்.

ஒருவாறு, மோட்டார் வான் காயல்பட்டணம் ஸ்டேஷன் வந்து சேர்ந்து விட்டது கார் வந்து சேர்ந்ததும், "தொப்" பென்று கீழே குதித்து, வண்டிப் பாதை வழியாக, சத்திரத்தை நோக்கி ஓட ஆரம்பித்தார் முதலியார். ஏட்டு கிருஷ்ணசாமியும், இன்னும் இரண்டு போலிஸ் காரர்களும், ஓடியும், நடந்தும், முதலியாரைப் பின் தொடர்ந்தார்கள். ஒரே மை இருட்டு! பாதை ஒழுங்காக இல்லாததால், முதலியார் குறுக்கு வழியாக ஓட ஆரம்பித்து விட்டார். ஓட்டமும் நடையுமாக ஒருவாறு படிக்கட்டு பக்கம் வந்து சேர்ந்துவிட்டார்கள். பாதாள அறைக்குள் ஒவ்வொருவராகக் குனிந்து வந்து சேர்ந்து விட்டார்கள்.

"சுமதி...சுமதி...சுமதி" முதலியார் அலறினார். வெள்வால்கள் தங்கள் இறக்கைகளை "படபட" என்று அடித்துக் கொண்டு வெளியே ஓடின. ஒரு வெளவால் ஏட்டு கிருஷ்ணசாமி முகத்தில் வந்து விழ, அவர் கையால் அதைத் தட்ட, தொப்பி கீழே விழுந்து விட்டது. வெளிச்சம் தெரியவில்லை. ஒரே இருட்டு, முதலியார் சத்தம் எதிரொலித்ததைத் தவிர பதில் ஒன்றும் இடைக்கவில்லை. அருவருப்பான நாற்றம் வந்து கொண்டிருந்தது. கிருஷ்ணசாமி தயங்காமல், தன்னுடைய கைக் குட்டையை வெளியே எடுத்து அதில் தீப்பற்ற வைத்தார். வெளிச்சத்தில் சுமதி இருக்கிறாளா? என்று எல்லோரும் ஊன்றிக் கவனித்தார்கள். சுமதியை அங்குக்காணவில்லை; ஒரு மெழுகு வர்த்திமட்டும், அரைகுறையாக ஒரு மூலையில் எரிந்துக் கிடந்தது. அதன் பக்கத்தில் ஒரு கந்தல் துணி விரிக்கப்பட்டிருந்தது. சுமதி போட்டிருந்த வளையல்கள் அங்கு நொறுங்கிக்கிடடப்பதை முதலியார்கவனித்தார். வெள்ளையான உப்புப் பவுடர் அறை முழுவதும் சிதறிக் கிடந்தது. முதலியார் கையில் அதைத் தொட்டு மூக்கில் வைத்தார், அவ்வளவு தான். அவர் முகம் போன போக்கு. ஒரே எரிப்பு! அறையினுள் சுற்றி சுற்றி பார்த்தார். துண்டுபீடிகளும், கட்டை சுருட்டுகளும். நிறையக் கிடந்தன: கிழிந்துபோன சீட்டுத் துண்டுகள் சிதறிக் கிடப்பதை அவர் பார்க்கத் தவறவில்லை. அறையின் ஒரு மூலையில், சுருண்டு, தூசிகள் ட்டிந்த ஒரு கைக் குட்டைக் கிடந்தது. ஏட்டு கிருஷ்ணசாமி அதை எடுத்துபார்த்தார். அந்த கைக்குட்டையில் "கீதா," என்று பச்சை நூலால் பின்னப்பட்டிருந்தது.

"ஆ...இது எக்ஸ்ட்ரா கீதா உடையதல்லவா ... அவள் இங்குஎப்படி வந்திருக்க முடியும்" என்று தன்னுடைய கைத்தடியால், கைக்குட்டையின் மேல் இலேசாகத் தட்டினார்.

"சரி......முதலியார் இனி இங்கு இருப்பதில் பயனில்லை. வெளியே சென்று ஆவனசெய்வோம்" என்று கிருஷ்ணசாமி கூறியதும் " என்னங்க...என் சுமதி......இனி அகப்படமாட்டாளா?" என்று விக்கி விக்கி அழ ஆரம்பித்தார் முதலியார்.

போலிஸ் வான், "நேரு காபி ஸ்டால்" முன் வந்ததும் காரை நிறுத்தி வைத்துவிட்டு அங்கும் இங்கும் பார்த்தார் கிருஷ்ணசாமி. ஓட்டல் புரொப்ரயிடர், ஆனந்த நாயர், அவர்களை உற்று கவனித்தார். எதையோ த்தேடுகிறார்களென்று நினைத்து, "ஸார் இந்த பக்கமாக சாக்கலேட் நிறமான ஒரு கார் புயல் வேகத்தில் போகிறது. உள்ளே இரண்டு இளம் பெண்கள் இருந்தார்கள். காரை ஓட்டிச் செல்வது ஒரு இளம்பெண் தான். புழுதியைக் கிளப்பி விட்டு விட்டு கார் மறைந்து போய்விட்டது" என்றார் அவர்.

'சரி கார் திருச்செந்தூர் தான் சென்றிருக்க வேண்டும். ஸ்டேஷன் சென்று " போன் " செய்து எல்லாம் தெரிந்து கொள்ளலாம்; டிரைவர், முதலில் எக்ஸ்ட்ரா கீதா வீட்டிற்குப்போ" என்றார். எக்ஸ்ரா கீதா வீடு, பூவரசூரில் இருந்தது. அங்கு போய் பார்த்ததில் அவள் காணப்படவில்லை. ஒருவாறு 'வான்' போலிஸ் ஸ்டேசஷனுக்கு வந்து சேர்ந்து விட்டது. திருச்செந்தூருக்கு "டிரங் கால்" போட்டு பார்த்தும் சுமதியைப் பற்றி ஒருவித தகவலும் கிடைக்கவில்லை.

காரிலிருந்து இறங்கி, எப்படியும், கருணை கூர்ந்து சுமதி இருக்குமிடத்தைக் கண்டு பிடியுங்கள்' என்று கிருஷ்ணசாமியிடம் கூறிவிட்டு உயிரில்லாத பிணம் போல் வீட்டிற்கு வந்து சேர்ந்தார் முதலியார்.

10. ஓட்டல் கிளியோபட்ரா!

அன்றிரவு திருச்செந்தூரி லுள்ள ஓட்டல் கிளியோபட்ராவில் பெரிய அமர்க்களம்; பெட்ரும் விளக்கு வெளிச்சத்தை அறையில் தெளித்தது. படுக்கையில், வேலுவின் பிடியில் துவண்டு கிடந்தாள், எக்ஸ்ட்ரா கீதா; ஒரு கையால் அவளை பிடித்துக் கொண்டு மறு கையால் அவள் மயிற் கற்றைகளைத் தடவிக்கொடுத்துக் கொண்டிருந்தான் வேலு.

இரண்டு மூன்று கண்ணாடி கிளாஸ்களில், ஒயின், பிராந்தி நிறப்பப்பட்டிருந்தன. அறையிலுள்ள ஒரு சோபாவில் வேலுவும், கீதாவும் ஒருவரோடொருவர் உராய்ந்துகொண்டு செய்யும், சேஷ்டைகளை ஓரக்கண்களால் பார்த்துக் கொண்டிருந்தாள் காந்தா. சாக்லேட் நிறக் கார் கிளியோபட்ரா ஓட்டலின் பின் புறத்தில் நிறுத்தப்பட்டிருந்தது.

"அப்பாவிடம் கொண்டு போகிறேன் என்றீர்களே? அப்பா எங்கே? அவரை நான் எப்படியும் பார்த்தாகவேண்டும்" என்றாள் காந்தா சிறு தயக்கத்துடன். அவள் பெரிதும் கலவரம் அடைந்துள்ளாள் என்பதை அவள் முகம் பட்டென்று காட்டியது.

"பொறு காந்தா,...கீதா!... அந்த கிளாஸிலுள்ள "டிரிங்"கை காந்தாவிடம் குடிக்கக் கொடு...காந்தா இப்படிப்பட்ட தேன்போன்ற பானங்கள் அருந்தி பார்த்திருக்க மாட்டாள் என்றான் வேலு.

கிளாஸிலுள்ள ஒயினை காந்தாவிடம் கீதா நீட்ட, அவளும் வாங்கி 'மடக் மடக்' என்று குடித்துவிட்டாள். அவள் மயங்கி படுக்கையில் வீழ்ந்தாள்; போதை சிறிது ஏறிவிட்டது. என்பதை அவள் கண்கள் நன்கு எடுத்து காட்டியது. போதையோடு இருக்கும் போது, எக்ஸ்ட்ரா கீதா வேலுவின் பிடியிலிருந்து விலகி, நடனம் ஆட ஆரம்பித்து விட்டாள்'. மதுவெறியில் காந்தா இருந்தபோதிலும் அவளிடம் நெருங்க வேலுக்கு சிறிது அச்சமாக இருந்தது. காந்தாவின் பார்வையில் கீதாவை வேலு பிடித்துக்கொண்டு இருந்தான். காந்தாவின் கண்கள் மதுவெறியில் சிறிது மூடி இருந்தன. அவளுடைய உணர்ச்சியை தட்டி விடும்படி, கீதா பேச ஆரம்பித்தாள். கீதா காந்தாவின் உணர்ச்சியைத் தட்டி எழுப்புமாறு, காதல் தோய்ந்த பல கதைகளை அவளுக்கு எடுத்துக் கூறினாள்; கிளியோபட்ரா ஓட்டலில் அவர்கள் தங்கி இருந்த அறையில் கிளியோபட்ராவின் அழகிய படங்கள் சுவர்களில் தொங்கிக் கொண்டிருந்தன. படங்களை சுட்டிக் காட்டிக்கொண்டு கீதா பேச ஆரம்பித்து விட்டாள்.

"கிளியோபாட்ராவின் உல்லாச வாழ்க்கையைக் கேள்" என்று கூறிக்கொண்டு கதை சொல்ல ஆரம்பித்தாள் கீதா.

நைல் நதிக் கரையிலே உலக அழகி கிளியோபட்ரா, ஆணழகன் அந்தோனியா பிடியிலே துவண்டு கிடந்தாள். அவள் இந்த உலகத்தை மறந்திருந்தாள். அவள் முகம் அன்று மலர்ந்த ரோஜா மலர்போல் இருந்தது. நைல் நதி பெருக்கெடுத்து ஓடியது. உள்ளம் புளகாங்கிதம் அடைந்தது. நதியும் பெண்ணல்லவா? நைல் நதி ஒரு புறம் பெருமை கொண்டது. எப்படி? உலக அழகி கிளியோபாட்ரா, அந்தோனியா பிடியிலே ஆனந்தக் கடலில் மூழ்கி விளையாடுகிறாள் என்று நினைத்ததும், நதி பொங்கி எழுந்ததாம்

மகிழ்ச்சி ஆரவாரத்தில் தன்னுடைய அலைகளை அடித்துக் கொண்டதாம். மறுபுறம் சொல்ல முடியாத வேதனை! கிளியோபாட்ராவுக்கு ஒரு அந்தோனியா கிடைத்தானே! நானும் ஒரு பெண்தானே, எனக்கு ஒரு ஆணழகனும் கிடைக்கவில்லையே!! அட சதிகார உலகமே!! காதலர்கள் களிப்புக்கடலில் நீந்தி விளையாடும் போது அதுவும், பெண்ணாகிய என் பக்கத்தில் என் பார்வையில்-இரண்டு காதல் ஜோடியும், ஒன்றையொன்று தழுவிக் கொண்டிருக்கும் போது, எனக்கு மட்டும் ஓராணழகன் இடைக்கமாட்டானா? என்று நினைத்து குழப்பம் அடைந்ததாம். ஏக்கத்தால், உடம்பு மேலும் கீழும் அடித்துக்கொள்வது போல, நதியிலும் ஏற்றமும் இறக்கமும் இருந்ததாம்; நைல் நதிக்கு ஏக்கம் அதிகரித்ததால், ஏக்க அலைகளும் அதிகரித்துக் கொண்டதாம். பேரதையால் கிளியோபட்ரா கண்கள் மூடிவிட்டன. கிளியோபாட்ராவுக்குத் தெரியாமல், அவனது பாதத்தை தொட்டாவது அந்த ஆண்வாடையை அனுபவிக்கலாம் என்று நினைத்து, நைல், உள்ளம் பொங்கி, அலைகளை அந்தோனியாப் பாதங்களைத் தொடும் அளவுக்கு வீசியதாம்.

நதியின் அலைகள் அவன் கால்களைத் தொட்டுவிட்டன. "அப்பப்பா ஆணழகன் பாதங்களைத் தொட்டு விட்டேன். நான் அடையும் மகிழ்ச்சிக்கு எல்லையே கிடையாது" என்று அதன் உள்ளம் மகிழ்ச்சியால்

221, Pilliar Koil Street,

MADBAS-3

2/21, பிள்ளையார் கோயில் தெரு,

சென்னை-3

அடித்துக்கொண்டதாம். "அப்படியே அந்த ஆணழகன் பாதங்களைத் தொட்டுக் கொண்டே இருக்கலாம்... ஆனால்...ஆனால்...அவன் பக்கத்தில் உலக அழகி கிளியோபட்ரா இருக்கிறாளே, அவள் கண் திறந்து விட்டால்...தற்போது உணர்ச்சியால் கண்கள் மூடப்பட்டிருக்கின்றன...இனி, விழித்தாலும் விழித்துக் கொள்வாள்...விழித்துவிட்டால் என் மீது சீறி விழுவாள் என்று பயத்தால் உந்தப்பட்டு, அந்தோணியாவின் பாதங்களை கிளியோபாட்ராவுக்கும், தெரிந்தும் தெரியாமலும் தொட்டும்

தொடாமலும், பட்டும் படாமலும், தன் அலைகளை வீசிக் கொண்டிருந்ததாம். இது உலக நாடக ஆசிரியர் கொடுக்கும் வருணனை. பார் நாடக ஆசிரியன் காதல் வருணனையை! கிளியோபட்ரா இருந்த மகிழ்ச்சி உலகத்தை, எண்ணிப்பார்!! என்ருள் எக்ஸ்ட்ரா கீதா. "காந்தா, நீ தயங்காதே. உன் நீல நைல் நதி போன்றது அன்று, உன் பக்கத்தில் உன் வருகைக்காக, வேலு ஏங்கிக் கொண்டிருக்கிருர். நீ வேலுவோடு உல்லாசமாக இருக்க, நான், கிளியோபட்ரா மாதிரி முட்டுக்கட்டையாக இருக்க மாட்டேன். இந்த ஓட்டல் பெயரோ கிளியோபட்ரா... அறையினுள் மேலே தொங்கப் போட்டிருக்கும் படங்களை பார். அந்த அழகியை எத்தனை விதமாக அந்த அழகன் பார்த்து, ரசித்து தன் ஆசையை பூர்த்தி செய்கிருன்" என்று எக்ஸ்ட்ரா கீதா அறையினுள் தொங்கப் போட்டிருந்த படங்களை ஒவ்வொன்ருகக் காந்தாவுக்குக் காட்டினுள்.

காந்தா இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு "சீ... சீ...இது என்ன வருணனை... நீயும் ஒரு பெண்ணு? பெண்ணுக்குரிய அச்சம், நாணம், மடம்......உன்னிடம் சிறிது அளவுகூட இல்லையே. அடாக் கடவுளே எனக்கு இக்கதியா? கீதா...உன்னைக்கண்டு பெண்மை தலைகுனிகிறதம்மா" என்று கூறி கீதவை சீறி பார்த்துவிட்டு "இந்தாங்க......தயவு செய்து அப்பாவிடம் சேர்த்து விடுங்கள், அப்பா,ஏதோ நோய் வாய்பட்டதாகவும், அவர் என்னை அழைத்ததாகவும்கூறினீர்களே...எல்லாம் பொய் தானு?" என்று பயத்தோடு; கைகள் பதற, வேலு விடம் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள் காந்தா. காந்தா பாதி போதையில் பேசினுள். அவள் பேச்சில் தடுமாற்றம் இருந்தது. தான் குடித்தது மது என்று அவள் நினைக்கவில்லை. மது என்று தெரிந்திருந்தால், அந்தக் கிண்ணத்தை வேலுவின் முகத்தில் வீசி எறிந்திருப்பாள்.

வேலு, முகத்தை அடைத்துக்கொண்டு, காந்தாவுக்குத் தெரியாமல், எக்ஸ்ட்ரா கீதாவுக்குக் கண் ஜாடை செய்தான். அவன் ஜாடையை அறிந்து கொண்டு, இன்னும் ஒரு கிளாசில் விஸ்கி ஊற்றி "சரி போஇறது...விட்டுவிடு......உனக்கும் பிடிக்காவிடில்...வேண்டாம்... இந்த கிளாஸிலுள்ள பழரசத்தை சாப்பிடு...நாம்...உன் அப்பா இருக்குமிடத்திற்குச் சென்று விடலாம்" என்று கீதா கூறிக்கொண்டு, காந்தாவிடம் நீட்டினுள்.

காந்தா கண்கள் கோபத்தால் விரிந்தது. போதை ஏறிவிட்டது என்பது அவள் விழிகள் காட்டின.

"ம்...வேண்டாம்"

"குடிக்கிறியா?......ம்...குடி" என்ருன் வேலு.

"ம்... என்னங்க ...வேண்டாங்க...ஒருமாதிரியா தலை சுற்றுகிறது"

"ஒண்ணும் செய்யாது...பழ ரசம் தானே...உடம்புக்கு நல்லது"

"வேண்டவே...வேண்டாம்"

"குடித்தாக வேண்டும்... பிடிவாதம் பண்ணுதே ஆமாம்... நான் பொல்லாதவனுகி விடுவேன்"

"சரி...கொண்டா கீதா" என்று கிளாஸை வாங்கி மடமட வென்று குடித்து விட்டு, "இஸ்" என்று உதட்டை பிதுக்கிக்கொண்டாள் காந்தா.

"அப்பாவிடம் போகலாம்... கட்டபொம்மன் சத்திரத்தில் சுமதி இருந்தாளே...அவள் எங்கு கொண்டு செல்லப்பட்டாள்" என்றுள் குடிப்போதையில் காந்தா.

"உஸ்...அதைப்பற்றி ஒன்றும் பேசக்கூடாது" என்றுன் வேலு. அவன் முகம் பயத்தால் எப்படியோ இருந்தது.

வேலு காந்தா பக்கம் நெருங்கினன். காந்தா அறையில் அங்கு இங்கும், அவன் பிடியில் சிக்காமல் தன்னை சமாளித்தாள். வேலு தன் இஷ்டத்திற்கு அவள் சம்மதிக்கவில்லை என்பதை அறிந்து கொண்டு, ஒரு போட்டோவை அவளிடம் காட்டினன். ஒரு லெட்டரோடு அந்தபோட்டோவும் ஒன்ருக பின்னல் குத்தப்பட்டிருந்தது.

"இதுவரைக்கும்...உன் தகப்பனர் தான் என் பிடியில் இருந்தார்...இப்போது, உன் லெட்டர் உன்னை என் பிடியில் மாட்டி வைத்துவிட்டது. ஒழுங்கானபடி நான் விரும்புகிற படி நடக்கவேண்டும். அல்லது நீயும் உன் அப்பா ஒலிமுத்து பண்டாரமும் கம்பி எண்ண வேண்டும்" என்றுன். அவன் குரல் அவளுக்கு பயத்தை உண்டுபண்ணியது. அந்த போட்டோவைக் கண்டதும் அவளுக்குத் தொடை நடுக்கம் எடுத்தது. தான் எழுதிவைத்த லெட்டர் அவன் கையில் சிக்கி யதை நினைத்ததும் ஒன்றும் ஓடாமல், குப்புறப்படுத்துக் கொண்டாள். இதற்குள் கீதா, அந்தப்படத்தை குனிந்து பார்க்க எத்தனிக்கும் போது "உம்...உனக்கு... இந்து வம்பு வேண்டாம்... படத்தை நீ பார்த்தது போதும்" என்று அவளை இழுத்து படுக்கையில் தள்ளி போட்டு விட்டான் வேலு. சிறிது நேரம் அமைதி.

காந்தா பக்கம் வேலு நெருங்கினன். புயல்போல் சீறி விழுந்தாள் காந்தா. கண்களிலிருந்து தீப்பொறிகள் பறந்தன. கோபத்தால் அவள் உள்ளம் விம்மியது. கைகள் பதற ஆரம்பித்து விட்டது. வேலுவின் பிடியில் இருந்து திமிறினள். போதை அவள் கண்களை இரத்த மயமாக்கியது; பிடியிலிருந்து நழுவி, துவண்டு கீழே விழுந்து உருண்டு உருண்டு அவன் பிடியில் சிக்காமல் அறையில் அங்குமிங்கும் சென்றுள் அவள்.

இதற்குள் "கணர் கணர்" என்று அறையில் "காலிங் பெல்" அடித்ததையும், அதை

Maniyam Industrial & Engineering Works

Government Approved Fabricator & Contractor,

(Regd. No. 5.)

A·C,C. CEMENT STOCKIST

2, Sankari Road,

Trichengode,

(Salem Dt.)

(சென்னை அரசினர் உதவிபெற்றது)

உயர்ந்த ரகம், உறுதி வாய்ந்த சகல இரும்புப்பெட்டிகள், கேஷ் பாக்ஸ், வாளிகள், பனைவெல்லக் கொப்பரைகள், குடம், தண்ணீர் டாங்குகள் முதலிய பொருள்களும், விவசாயக் கருவிகளும், கட்டிட சாமான்களும், சகல விதமான லேத் வேலைகளும், வெல்டிங்கும் செய்துகொடுக்கப்படும்.

T. M. சுப்ரமணிய ஆச்சாரி.

த்தொடர்ந்து அறையின் மேல் பகுதியிலுள் "சிகப்பு விளக்கு" எரிந்ததையும், வேலு பார்த்தது தான் தாமதம், அவன் அறையை விட்டு வெளியேறக் காலைத் தூக்கி வைத்தான். அறையிலுள்ள கதவுப் படியில் தட்டி "படார்" என்று கீழே விழுந்தான். கீழே துவண்டு கிடந்த காந்தாவின் கண்கள் "துரு துரு" என்று வேலுவின் முகத்தையும், கீதாவின் முகத்தையும், அறையில் எரிந்து கொண்டிருக்கிற "சிகப்பு பல்பையும்" மாறிமாறிப் பார்த்துக் கொண்டிருந்தன. அறை முழுவதும் சிகப்பு ஒளியைத் தெளித்தது அந்த விளக்கு, அந்த ஒளியில் கீதாவின் முகம், இரத்தத்தால் தோய்ந்து எடுக்கப் பட்டதுபோல் தெரிந்தது.

கூனிக் குறுகிய ஒருவன் வேலுவிடம் ஓடிவந்து, அவன் காதுகளில் கேட்கிற அளவு "ஸார், ஆறுமுகநேரியில் இருந்து "டிரங்கால்" வந்துள்ளது. உங்களைப் போலிஸ் தேடுகிறதாம்...போலிஸ் விஸ்வேஸ்வரன் கூறியதாக நம்ம கிளியோபாட்ரா ஒட்டல் முதலாளி நடேச சர்மா உங்களிடம் சொல்லச் சொன்னார்...ஆமாம்... சீக்கிரம் ... இங்கு போலிஸ் வந்தாலும் வந்துவிடும்" என்று கூறினான். அவன் பார்வை காந்தாவின் மேலும், கீதாவின் மேலும், சிதறிவிழுந்தன.

"சரி நீ போ...நான் கவனித்துக் கொள்கிறேன்" என்று அவனை வெளியிலிருந்து பேசிவிட்டு அறையினுள் வந்து சேர்ந்தான் வேலு.

வெளியேக்கிடந்த துணிகளை, தன்னுடைய "சூட் கேஸ்" லி னுள் அடைத்தான். ஒயின், பிராந்தி பாட்டில்களைத் தன்னுடைய தோல் பைக்குள் திணித்தான். கோட்டுப் பைக்குள் க்கையைத்திணித்து, 10 ரூபாய் நோட்டுகளடங்கிய ஒரு கத்தையை வெளியெடுத்தான். அதில் பாதியை எக்ஸ்ட்ரா கீதா விடம் கொடுத்தான். மீதியைக் காந்தாக்கையில் கொடுக்க நீட் டியபோது "வேண்டாங்க.உங்க ளிடமே இருக்கட்டும் வேண்டும் போது தான் நான் வாங்கிக் கொள்வேனே" என்று நைசாக அவள் பதில் கொடுத்தாள். அவள் முகத்தில் சிறிது மகிழ்ச் சியின் சாயலை ஏற்படுத்திக் கொண்டாள்.

"ஒரு அவசரம்...சரி...கீதா, நீயும் காந்தாவும், வெளியில் நிற் கும் டாக்ஸியை எடுத்துக கொண்டு ஊர் போய் சேருங் கள்...காந்தா இங்கு நடந்த விஷயத்தையாவது அல்லது ஊரில் நடந்த விஷயத்தை யாவது யாரிடமும் மூச்சிவிடக் கூடாது. ஏதாவது வெளியே தெரிந்தால், இந்த போட்டா வும், உன் லெட்டரும் பேசும்... நேற்று எங்கு சென்றிருந்தீர் கள்? என்று யாரும் உங்களிடம் கேட்டால், திருச்செந்தூர் முரு கன் கோவிலுக்குச் சென்ற தாக, இரண்டு பேரும் கூறி விடவேண்டும்" என்று கூறி விட்டு, ஒரு கையில் சூட்கேஸை யும், இன்னொரு கையில் தோல்பையையும் எடுத்துக் கொண்டு கீழே இறங்கி, சாக் லெட் நிறக்காரில் ஏறிக்கொண் டான் வேலு. இளியோபட்ரா ஓட்டலிருந்து காந்தாவும், எக்ஸ்ட்ரா கீதாவும், ஏறிய "டாக்ஸி" வடக்கே ஆறுமுக நேரியை நோக்கிப்பறந்தது; வேலுவின் சாக்லெட் நிறமான கார் தெற்குநோக்கி, புழுதியை வாரிவிட்டுக் கொண்டு பறந் தது.

டாக்ஸில், வந்துகொண்டி ருந்த காந்தாவும் எக்ஸ்ட்ரா கீதாவும், ஒருவர் முகத்தை ஒருவர் பார்க்காமல் திருப்பிக் கொண்டிருந்தார்கள். டாக்ஸி, ஆறுமுகநேரி பக்கம் வந்ததும், "வேலு, ஒரு போட்டோ உன் னிடம் காண்பித்தாரே அது யாருடையது? அந்த போட்டோ வைக் கண்டதும் உன் முகம் எப்படியோ ஆகிவிட்டதே. ஏன் காந்தா?" என்று, மெள்ள பேச்சை ஆரம்பித்தாள் கீதா.

"தெரியாது" என்றுள் காந்தா. கீதாவை விழுங்கி விடுவபள் போல் ஒரு பார்வை பார்த்தாள் காந்தா. பேச்சு தடை ஏற்பட்டது. டாக்ஸி ஒருவாறு கீதா வீட்டண்டை வரவும் நேரம் விடிய ஆரம் பித்துவிட்டது.

"நான் இங்கு இறங்கி நடந்தே வீடு சென்று விடுகி றேன்" என்று காந்தா கூறி விட்டு விறு விறு என்று வீடு சென்று விட்டாள்.

* * *

நன்கு விடிந்து விட்டது. கஜபதி நாய்க்கர் படுக்கையில் சுய உணர்வில்லாமல் படுத்துக் கொண்டிருந்தார். படுக்கை யைச் சுற்றி, ஊர்ப்பிரமுகர்கள்

தொழில்

மாதமிருமுறை

சந்தா விகிதம்

தனிப் பிரதி	0—1—0
ஆண்டு சந்தா	6—0—0
வெளி நாடு	8—0—0

கூடியிருந்தார்கள். அவர்கள் மத்தியில், சி-ஐ.டி. ராஜாங்கம் நின்றுகொண்டு நாயக்கர் உடல் நிலையைக் கவனித்துக்கொண்டிருந்தார். அவ்வூர் பிரபல டாக்டர் துரைசிங், உடல் நிலையைப் பார்த்துவிட்டு ',நாய்க்கர் மூர்ச்சையாக் இருக்கிறார். உடலிலுள்ள இரத்தம் பெரிய அளவு வெளியேறிவிட்டது. நாயக்கருக்கு இரத்தம் கொடுக்கப்பட வேண்டும். நாளைக்குத் தான் அவர் பிழைப்பாரா? இல்லையா? என்பதைக் கூற முடியும்" என்று கூறியதும் " அப்பா... அப்பா...நான் என்ன செய்வேன்" என்று கமலா கதற ஆரம்பித்து விட்டாள். இங்கு நடப்பதை ஓரக் கண்ணால், பார்த்துக் கொண்டு, "புரட்சி" என்ற தினசரி பத்திரிகையில் வந்த செய்தியை உன்னிப்பாகக் கவனித்தார் சி. ஐ. டி. ராஜாங்கம். செய்தி பின் வருமாறு:—

மனைவி சுமதி விஷம் உண்டு கட்டபொம்மன் சத்திரத்தில் சாவக் கிடக்கிறாள். இதன் முழு விவரமாவது:—

ஆறுமுகநேரியைச் சேர்ந்த சுமதி, கண்ணப்ப முதலியார் மகள்; உள்ளூர் பள்ளிக்கூடத்தில் எஸ்.எஸ்.எல்.ஸி. படித்து வருகிறாள். நடத்தை தவறியதால், வாழ்க்கையில் வெறுப்பு ஏற்பட்டு, மார்பியா, (தூக்க மருந்து) உட்கொண்டு, கட்டபொம்மன் மடத்தில், சாவக் கிடக்கிறாள்;இதுதான் செய்தி.

"சுமதி எவ்வளவு தங்கமானவள்; புரட்சி பத்திரிகைகாரன் புரளி கிளப்பி விடுகிறான். சுமதி, நேற்று 10 மணி அளவில்தானே கடத்தப்பட்டாள். அந்த பத்திரிகையில் இன்று எப்படி வந்துவிட்டது. புரட்சி பத்திரிகை ஆசிரியரும் இந்த சதியில் ஒருவனாகத்தான் இருக்கவேண்டும். சரி...ஆவன உடனே செய்யவேண்டும், சுமதியை கேவலப்படுத்த வேண்டுமென்றுதான், இந்த பத்திரிகைகாரன் எழுதியுள்ளான். சுமதியின் பண்பு ஒருநாளும் அழிந்துவிடாது" என்று மனதிற்குள் நினைத்துக்கொண்டு, நாயக்கர் உடல் நிலையையும் ஒரு பார்வை பார்த்துவிட்டு வீட்டை விட்டு வெளியேறினார். சி. ஐ. டி. ராஜாங்கம்.

(தொடரும்)

நீடித்தகாலம் வாழ்வது முக்கியமன்று, எவ்வாறு வாழ்வது என்பதே முக்கியம்.

—பெய்ஸி.

'என்னகந் தொட்டுவிட்டான்'

[செ. து. சஞ்சீவி]

அவளோ அழகிய மங்கை அவள் மேனியில் பசலைநிறம் படர்ந்தது. இப்பொழுது அவளுக்கு உணவு செல்லவில்லை. கண்கள் உறக்கமும் கொள்ளவில்லை. மணத்தை விரும்பாததால் வண்ணமலரும் பிடிக்க வில்லை. குழப்பம் வளர்ந்து, அவள் உறுதியையும் சிதைத்து விட்டது! எது?

வசந்த காலம் வந்துற்றது. மலர்க்கணைகளை ஏந்திய மாரன், களம் நோக்கித் தேரூர்ந்து செல்கிறுன். அவன் வருகை அறிந்த அமருக்கு அஞ்சிய மகளிரெல்லாம் புகலிடம் நாடி ஓடுகின்றனர். புறங்கண்டாரின் அகங்காண விழைந்த மாரனே அவர்களை துரத்திச் செல்கிறுன். அவன் வில்லினின்று எழுந்தக் கணைகள் இள மகளிரின் இதயங்களைக் கொல்லாமல் கொல்லுகின்றன.

அதோ, புள்ளிமான்போல் துள்ளியோடி வருகிருள் 'ஒரு அழகி'. அவள் தனக்கு இல்லாத இடையை உள்ளதென்று காட்ட 'இடையில்' குடம் ஏந்தி வருகிருள். அவளின் நீலவண்ண ஆடை கண்டு வியந்த விண்ணக மங்கை, வெண் முகில் போர்த்துத்தன் மேனியை மூடிக்கொள்ளுகிருள். குன்றடுத்த பொழிலுள்ள குயில் அவளைக் கூவி அழைக்கின்றது. தென்றல் தாலாட்டக் களித்திருந்த முல்லை மொட்டுக்கள் அவள் புன்னகையைக் கண்டு, சோபையிழக்கின்றன. பொழிலைக் கடந்த அவள் புனலாட அருவியை அடி மிதிக்கிருள்.

செஞ்ஞாயிறு அளித்தப் பொன்னாரம் பூண்டு அருவிநீர் மின்னிப் பொலிகின்றது. அதன் அழகை ரசித்தவாறு குடத்தில் நீர் முகந்து கரை சேர்க்கிருள். தொடர்ந்து வந்த அருவியின் அலைகள் அவளை நீராட அழைக்கின்றன.

கோதையவளும் தன் கூந்தல்களைந்து ஆடைமாற்றி நீராடச் செல்கிருள்.

அருவி நீரில் மிதந்த அழகிய மலர்களின் மணமும், புதுப் புனலின் குளிர்ச்சியும் அவள் உடலைத் தழுவி உள்ளத்தைத் தணிய வைத்தன.

நீராடிக் களித்த நிறை மகிழ்ச்சியுடன் அவள், தன் இல்லம் நோக்கிச் செல்லுகிருள். இதுவரை காத்திருந்த மாரன் இப்பொழுது கணைத்



தொடுக்கிறான். என்ன இது? ஏதோ ஒரு அழகின் மின் வெட்டு, யார் அது?......... இனம் புரியாத இந்தத் தவிப்பு அவளை மிரட்டுகிறது. மறு கணம் அவள் மேனியிலிருந்த குளிர்ச்சி நீங்கி வெம்மை படர்கின்றது. அது மட்டுமா, அந்த வெம்மை உள்ளத்துள்ளும் ஊடுருவிப்பாய்கின்றது. வீட்டின் வாயிலை அடிமிதிக்கும் போதே அவள் சோர்வடைந்து விடுகிறாள்.

இரவு நேரம். வழக்கமான படுக்கையில் தான் படுத்திருக்கிறாள். மையிருளின் மயக்கம் அவள் மனதை இறுக்கி விடுகிறது. மாடத்தில் ஏற்றிய அகல் விளக்கின் ஒளிச்சுடர் போன்று அவள் துடிக்கிறாள். தங்கக் கூண்டிலே, வெள்ளிக் கிண்ணத்தில்-வைத்த கொவ்வைக் கனியை, கொத்தித்தின்னாமல் ஏங்கித் தவிக்கும் பச்சைக் கிளியும் அவள் கவனத்தைக் கவர்ந்தது. இனம்புரியாத ஒன்று தன்னை தனிமைப் படுத்தி விட்டதை நினைந்து உருகுகிறாள்.

வைகறை விளக்கம் கண்டு வீட்டினில் வழக்கமான ஆரவாரம் எழும்பிற்று. தனிமையில் படுத்திருந்த அவளை தாய் வந்து எழுப்பினாள். அவள் அசட்டையாக இருந்துக் கொண்டாள். அர்த்தமற்ற சலிப்பும் வெறுப்பும் அளவுக்கு மீறிய சஞ்சலத்தை உண்டு பண்ணிவிட்டன. இப்பொழுது அவள் யாரிடமும் பேச விரும்புவதில்லை. தாயன்பினும் சிறந்த தன் தோழியரின் நல்லுறவையே நோயென அஞ்சி ஒதுங்கினாள். ஐயகோ! அவளுக்கு ஏன் இப்படி நேர்ந்து விட்டது.

நாட்கள் பெருகி கிழமைகள் தோன்றி விட்டன. மெல்ல அவள் மேனியில் பசலை நிறம் படர்ந்தது. இப்பொழுது அவளுக்கு உணவு செல்லவில்லை. கண்கள் உறக்கமும் கொள்ளவில்லை. மணத்தை விரும்பாததால் வண்ண மலரும் பிடிக்கவில்லை. குழப்பம் வளர்ந்து அவள் குணத்தின் உறுதியும் சிதைந்து விட்டது.

இதோ அவளுக்கு உற்றத் தோழி வருகிறாள். 'அழகி'யின் நிலை கண்டு வருந்தி உண்மை அறிய வினவுகிறாள். ஆனால் அழகி கூறிய மறுமொழி

''பாலுங் கசந்ததடீ!—சகியே
படுக்கை நொந்ததடீ!
கோலக்கிளி மொழியும்—செவியில்
குத்த லெடுத்ததடீ!

தோழிக்கு இது வியப்பாக இருந்தது, ஏன் இந்தக் குழப்பம் சொல்லடி, சொல்!' என்றவள் நச்சரித்தாள். ஆனால், அழகி மீண்டும் அந்த வரிகளையே பாடுகிறாள். முதலில் வியப்புற்றத்தோழி இப்பொழுது, ஏதோ விபரீதம் நிகழ்ந்திருக்கக்கூடுமென உணர்கிறாள். 'அழகி' யின் அன்னையை விளித்து வைத்தியத்திற்கு ஏற்பாடு செய்கிறாள். ஆனால், அழகியின் மனநோய்க்கு எம்மிடம் மருந்தில்லை, என்ற மாற்றத்தைதான் மருத்துவரிடமிருந்து எதிர்பார்க்க முடிந்தது. அடுத்துப் 'பாலத்துச் சோசியனை' வரவழைத்துக் குறி கேட்கிறாள். அவனோ 'கிரகம் படுத்தும்பாடு இது' என்று கூறிச்செல்கிறான். அன்னையும் தோழியும் அடுத்து செய்வதறியாது சோர்ந்திருந்தனர் சின்னங்கள்.

அழகி தன் நெஞ்ச ஆழத்தில் மண்டிக் கிடந்த நினைவுப் பையலை அகழ்ந்தெடுத்துப் பார்க்கிறாள். அன்பு அறம் ஒழுக்கம் ஒப்புரவு என்ற உயர் பொருளின் திறமறிய ஆராய்கிறாள். அவள் அறிவு எதிலும் நிலைகொள்ளவில்லை. மீண்டும் எதையோ சிந்திக்கிறாள். இருளிடைத்தோன்றும் மின்னல் போல் அவள் விரும்பியஅந்தப் 'பொருள்' நினைவில் பதிந்து விடுகிறது. ஆனால் அதைப் பற்றிய தெளிவு ஏற்படவில்லை. மீண்டும் சிந்திக்கிறாள்.

அன்று ஒருநாள் அருவிப் புனலில் நீராடிய நிகழ்ச்சி நினைவுக்கு வருகிறது. நீராடிவிட்டு குடத்தில் தளும்பும் நீருடன் அவள் வந்துகொண்டிருந்த போது. ஏதோ ஒன்று நிகழ்ந்ததே! என்ன அது? ஆமாம், புரிகிறது அது அழகின் சிரிப்பு! அழகனின் சந்திப்பு!

யார் அந்த அழகன்? இந்தக் கேள்விப் புதிருக்கு அவளால் விடையிறுக்க இயலவில்லை. யாராக இருந்தாலென்ன. அவன் அழகன். அழகிற் சிறந்த ஆணழகன். அவள் நினைவுப்பறவை சிறகொடிந்து வீழ்ந்து விட்டது. அவள் அயர்ந்து உறங்கினாள்.

பொழுது புலர்ந்ததும் தோழி அவளைக் கண்டாள். 'அழகி, யின் அங்கப்பொலிவிலே மாற்றங்கண்டு பூரித்தாள். மெல்ல அருகே வந்து அவள் மேனியைத் தடவிப் பார்த்தாள். உச்சி குளிர்ந்திருக்கக்கண்டு; 'உடல் நலமோ'? என்றாள்.

தோழிக்கு எவ்வாறு மாற்றம் உரைப்பது? நேற்றுவரை பித்துப் பிடித்தவள் போல் எதிலும் நாட்டம் அற்று இருந்த அழகி; இன்று புது நீராடி, புத்தாடை புனைந்து, கூந்தலைக் கோதிவிட்டு, மலர்ச்சரம் தொடுக்க முனைந்திருக்கின்றனளே—இந்த மாற்றத்திற்குரிய காரணத்தை எவ்வாறு விளம்புவது?

தோழி மீண்டும் கேட்டாள்; "ஏனடி மவுனம். என்ன நடந்தது, சொல்லேன்."

'அழகி'க்கு உற்ற நாணம் பதில் கூற முடியாமல் தடுத்து

விட்டது. அவள் மாடிக்கும்முற்றத்திற்கும் ஓடி வேடிக்கைப் பார்த்துக் கொண்டிருந்தாள். 'அழகி'யின் இந்த போக்குக் கண்டு தோழி சலிப்படையவில்லை. அவளும் தொடர்ந்து நச்சரித்துக் கொண்டிருந்தாள்.

அழகிக்கு எதைச் சொல்வது எப்படிச் சொல்லுவது என்றே புரியவில்லை. நேற்றிரவு கனவிலே நிகழ்ந்த 'அந்த நிகழ்ச்சி' வறண்டுக் கிடந்த அவள் நெஞ்சில் மகிழ்ச்சியை நிறைத்துவிட்டது. அந்த மகிழ்ச்சி, அவளை உச்சி குளிரச் செய்து, உடம்பை நேராக்கி விட்டது. சின்னுட்களாக வெறுத்திருந்த பொருள்களின் மீது அவளுக்கு இச்சை பிறந்தது. அதனுல், அச்சம் ஒழிந்த நெஞ்சில் இன்பம் விளைந்தது. இழந்திருந்த அழகையும் மீட்டுத் தந்தது.

ஆமாம் இத்தனை சிறப்புக்கும் ஏதுவாக அமைந்த 'அந்த நிகழ்ச்சி' தான் என்ன?

நேற்றிரவுக் கனவிலே அழகனைக் கண்டாள், அழகி. ஆனுல், அவன் நிறம் கறுப்பா சிவப்பா என்றுகூட அவளுக்குத் தெரியாது. கனவிலே வந்த அவன் 'அழகி'யின் உடலைத் தழுவித் தன் உருவைக் காட்டாமல் அவள் உள்ளத்தை மட்டும் தொட்டானும். அவளும். துடித்தெழுந்து "யாரென்று" வினவக் கண் விழித்தாளாம். உடனே மேனியை மறைத்துக் கொண்டானும். என்ன மாயம் பாருங்கள்.

தோழியின் தொல்லை பொறுக்க மாட்டாமல் அழகி, 'இந்த ரகசியத்தை' தயங்கித் தயங்கி வெளியிட்டாள். இனி விளக்கம் என்ன வேண்டியிருக்கிறது. தோழி பூக் குடலையிலிருந்த நீலமலர் ஒன்றை எடுத்துக்காட்டி; "ஏன்டி, இதைப் பாரேன். உன் கனவிலே வந்த மாயமனிதன் இந்தநீல மலரைவிட அழகாயிருப்பானே?" என்ருள்.

தோழியின் உவமை வினு; அழகிக்குப் புத்துணர்வு அளித்தது. நீலமலர். நீல நிறம். விண்ணும் விரிகடலும் நீல நிறம்தானே. என்ன பொருத்தமான உவமை. நேற்றிரவுக் கனவிலே வந்த மாய மனிதனும், நீல நிறமுடையவனுகத்தான் இருப்பானே? ஆமாமப்படித்தான் இருந்திருக்க வேண்டும் இல்லையென்ருல் அந்த மையிருட்டிலே தன் மேனியை மறைத்துக்கொள்ள வாய்ப்பேற்பட்டிருக்குமா?

தோழி மீண்டும் கேட்கிருள். "ஏண்டி மவுனம், தெரிந்திருந்தால் சொல்வேன்".

அழகியின் உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்கி வழிந்தது. அவள் தன் மறுமொழியை இசையுடன் குழைத்துப் பாடுகிருள்.

எண்ணும் பொழுதிலெல்லாம்—
அவன் கை
இட்ட விடத்தினிலே
தண்ணென்றிருந்ததடீ!—புதிதோர்
சாந்தி பிறந்ததடீ!
எண்ணி யெண்ணிப் பார்த்தேன்—
அவன் தான்
யாரெனச் சிந்தை செய்தேன்;
கண்ணன் திருவுருவம்—அங்ஙனே
கண்ணனின் முன் நின்றதடீ!

—பாரதியார்,

'சொன்னபடி நடந்துவிட்டால்'

—[" திருவேணி மாதவன் "]—

" சார் " இந்த வழியாக ஒரு மாட்டு வண்டி சென்றதைப் பார்த்தீர்களா?" என்ருன் ஒருவன் "நான் பார்க்கவில்லை. என்ன விஷயம்?" என்று கேட்டான் இன்னெருவன்.

மாட்டு வண்டியில் ஒரு மனிதனின் பிணம் இருந்தது அந்த வண்டியை மாடுமட்டுமே இழுத்துச் சென்றது. என்ருன் பதிலுக்கு; பிணம் ஏன் மாட்டு வண்டியில் வந்தது?

"நான் சினிமாவிற்கு போகிறேன், கதவை சாத்திப் பூட்டிக்கொள்" என்று சேது கட்டளையிட்டவாறே தன் சிநேகிதர்களுடன் இரவு ஆட்டத்திற்குச் சென்ருன்.

அவனுடைய சகதர்மினியான லக்ஷிமி கதவை அழுத்தி தாழ்ப்போட்டாள். அந்த சப்தத்தில், தூங்கிக்கொண்டிருந்த குழந்தை நிர்மலா, அசைந்தவாறு திரும்பிப் படுத்தாள்.

பொழுது விடிந்தால் அவளுடைய பிறந்தநாள் ஐந்துநிரம்பி ஆருவது பிராயத்தை அடையப்போகிருள்.

"உம்" என்று மனதில் ஏதோ பாரத்தை சுமப்பது போல் பெருமூச்சுடன், தன் கட்டிலில் போய்ப்படுத்தாள் லக்ஷ்மி; நித்திராதேவிகண்முன் ஆடினுள். சிந்தனை சென்ற ஆண்டின் நிர்மலாவின் பிறந்த தினத்தை நினைவுபடுத்தியது.

அன்று இரவு அவளுடைய மைத்துனர் இவ்வாறுதான் "சினிமாவிற்கு போகிறேன்" என்று கூறிச்சென்ருர்.

கடிகார முட்கள் சுழன்றன. இரவு பகலாயிற்று; சூரியன் திசை மாறினுன்; சந்திரன் தேய்ந்தும் வளர்ந்தும் தன் கடமையை செய்தான்; நாட்கள் பறந்தன. பழைய காலண்டர் இருந்த இடத்தில் புதிய காலண்டர்தொங்கியது. ஆனுல் போன அவர் திரும்பவேயில்லை.

மீண்டும்.........அதேமாதம், அதேதேதி.........இரவு நேரம் ....

தார்ரோடில் நிசப்தமான வேளையில் ஒரு மாட்டுவண்டி தொலைவில் வந்துகொண்டிருந்தது. அதைஓட்டும்வண்டிக்காரன் தன் முண்டாசை அவிழ்த்துவிட்டு, வண்டியைவிட்டு இறங்கி மாட்டை தட்டிக்கொடுத்து விட்டு ஒட்டமாக

5

ஓடி சேதுவின் வீட்டை யடைந்தான்.

பலமாக தட்டவே, கதவை திறந்தாள் லக்ஷ்மி, "நீங்களா!" என்று ஆச்சர்யத்துடன் வரவேற்ருள்.

"ஆம் நான்தான் மன்னி நானேதான் அண்ணு எங்கே? அம்மா எங்கே?" என்று கூறிக்கொண்டே நிர்மலா படுத்திருந்த கட்டிலில் அமர்ந்து கொண்டு, அவள் தலைமயிரை அன்புடன் வருடினன் வந்தவன்.

"அவர் சிநேகிதர்களுடன் சினிமாவிற்குப் போனர் என்று பதிலளித்துவிட்டு" ஆமாம் உங்கள் உடை, நடை, பாவனை எல்லாமே மாறிவிட்டதே ஏன்! எங்கே இருக்கிறீர்கள்?" என்று கேள்விகளை அடுக்கினாள் வாஞ்சையுடன்.

மடியிலிருந்த இரண்டு மாதுளம் பழங்களை எடுத்தான், வண்டிக்கார வேஷத்தில் இருந்த ரகு, பதில் பேசாமலேயே. அவனுக்குத் தெரியும். சென்ற ஆண்டு நிறைவு விழாவின்போது நிர்மலா, இவர் வாங்கிகொடுத்த மாதுளம் பழத்தின் மணிகளை இண்ணத்தில்போட்டுக்கொண்டு, தன் பவளவாயில் ஒவ்வொன்ருக மென்றுக்கொண்டே "சித்தப்பா அடுத்த வருஷமும் என் பிறந்த நாளின்போது இதே பழம் வாங்கி தருவாயோ?" என்ருள். அதன் அறிகுறிதான் இது.

நிர்மலா, தன் களங்கமற்ற முகத்தின் கண்கள் திறந்தாள். "சித்தப்பா" என்று தன் சிறு கைகளால் இறுகக்கட்டிக் கொண்டாள். லக்ஷ்மி தன் கண்களில் பொங்கிய நீர் திவிலைகளை துடைத்துக்கொண்டாள்.

ரகு எங்கே? அவன் தன்மடியில் படுத்திருந்த நிர்மலாவை கட்டிலில் விட்டுவிட்டு வாசலை நோக்கி விரைந்தான்.

"என்னங்க............மீண்டும் போகாதீர்கள். அவரும் வரும் சமயமாயிற்று. நாளை காலையில் உங்கள் அம்மாவும் பெங்களூரிலிருந்து வந்து விடுவார்கள். ரகுவின் காதுகளில் வார்த்தைகள் விழுந்தனவே யொழிய, மாட்டு வண்டியில் தாவி ஏறியவன் ரகு திரும்பிக் கூடப்பார்க்கவில்லை.

சேதுவும் சினிமா முடிந்து வந்துவிட்டான். கயிறு கட்டிலை வீட்டின் வெளிப்புறத்தில் போட்டுவிட்டு, அதன்மேல் மெத்தையை விரித்தான். கதவின்மீது சாய்ந்துக்கொண்டிருந்த லக்ஷ்மி பேச வாயெடுத்தாள். ஆனல் "டார்ச்" ஒளியை வீசியவாறே இரண்டு போலீஸ்காரர்கள் சேதுவை நோக்கி வந்தார்கள்.

"சார்" இந்த வழியாக ஒரு மாட்டுவண்டி சென்றதை பார்த்தீர்களா?" என்ருன் ஒருவன். கறுத்து தொங்கிய மீசையுடன் கூடிய அவன் முகம் லக்ஷ்மியின் வயிற்றை கலக்கியது.

"நான் பார்கவில்லை. என்ன விஷயம்?" என்று சேது கேட்கவே, "சார் மாட்டுவண்டியில் ஒரு மனிதன் கொலை செய்யப்பட்டு பிணம் இருந்தது. அந்த வண்டியை மாடு மட்டுமே இழுத்துச் சென்றது. வண்டிக்காரன் இல்லாததால் சந்தேகத்தின் மீது, நிறுத்திப்பார்தோம் அது வந்த வழியையே இப்பொழுது விசாரிக்கின்றோம்". என்று கூறிச்சென்றார்கள். சேது கட்டிலில் உட்கார்ந்துக் கொண்டு லக்ஷ்மியை பார்த்தான். அவளுக்கு "ஹோ" என்று வாய்விட்டு கத்தவேண்டும்போல் இருந்தது. ஆகையால் உள்ளே ஓடி நிர்மலா படுத்திருந்த கட்டிலில் போய் தொப்பென்று விழுந்தாள். குழந்தையின் கைகளில் இருந்த பழங்களை எடுத்து, கட்டிலில் கீழே உருட்டி விட்டாள்.

"பயப்படாதே! நானும் உள்ளேவந்து படுத்துக்கொள்கிறேன்" என்று கூறிக்கொண்டே கயிறுகட்டிலை தூக்கிக் கொண்டு உள்ளே நுழைந்தான் சேது. கதவை தாழ்ப்பாள் போட்டு விட்டு, களைப்பினால் கண்ணயர்ந்தான்.

காலையில்சேது வழக்கத்திற்கு மாறாக நாழி கழித்து எழுந்தான். பல் துலக்கிவிட்டு வந்தபோது நிர்மலா கட்டிலின் அடியில் இருப்பதைக் கண்டான்.

"நிரு, வெளியே வா என்ன விஷமம் செய்கிறாய்" என்று அதட்டினான்.

P. H. முகமது நஸீருத்தீன்

★

டால்மியா சிமெண்ட் ஸ்டாக்கிஸ்ட்

G I பைப் & பைப்

பிட்டிங்ஸ் வியாபாரம்,

இரும்பு சாமான்கள் தயாரிப்பவர்

★

பாலக்கரை ரோடு, திருச்சி-8.

தபால் பெட்டி நெ. 456

போன் : 786

தந்தி : HARDWARE

★

குறிப்பு:—

1/157, தஞ்சை ரோடு (அரியமங்கலம் ஹமீதியா ரைஸ் மில் எதிரில்) சப் டிப்போவிலும் சிமெண்ட் டிலவரி செய்கிறோம்.

"இல்லையப்பா......நேத்து, ராத்திரி சித்தப்பா வந்து பழம் கொடுத்தாரப்பா" என்றுசொல்லிக்கொண்டே பழங்களை உருட்டிக்கொண்டு வெளியே தலையை நீட்டவும், கையில் காபியை ஆற்றிக்கொண்டே வந்த லக்ஷ்மி "ஆமாம் நேற்று உங்க தம்பி வந்தார். நான் எவ்வளவு சொல்லியும் தங்காமல் வெளியில் போய்க்கொண்டிருந்த மாட்டுவண்டியில் ஏறிப் போனார். நேற்று இரவே போலிஸ்காரர்கள் வந்து விசாரித்ததால், நான் உடனே சொல்லவில்லை. உம் நான் பாவி. இதற்கெல்லாம் நான் தானே காரணம் நான்தானே... ......" என்று லக்ஷிமி விம்மலுடன் நிறுத்தி நிறுத்திச் சொன்னாள்.

"இதுவரை எங்கோ தொலைந் தான் என்று வருத்தப்பட்டேன். ஆனால்கொலைக்காரனாக மாறுவான் என்று நினைக்கவில்லை...சரி நான் ஸ்டேஷனுக்கு போய் அம்மாவை அழைத்துக் கொண்டு வருகிறேன். பிறகு அவள் வந்து மற்றவை பார்ப்போம்" என்று சேது வெறுப்புடன் கூறிச் சென்றான். இரண்டு மணிநேரம் ஆயிற்று.

வாசலில் பேபி டாக்ஸி வந்து நின்றது. சேது கைகளில் பெட்டியும் படுக்கையுமாக நுழைந்தான். அவன் தாயார் சேதுவின் மூலம் விஷயம் அறிந்தவள், வாசலை மிதித்தவுடன் "அடி நாசக்காரி என் பிள்ளையை கொலைகாரனாக்கி விட்டாயே உனக்கேண்டி இந்த புத்தி" என்று வந்ததும் வராததுமாக கத்தினாள்.

"அம்மா வீணாக யாரையும் திட்டாதே வீட்டைவிட்டு, வெளியே யார் போகச் சொன்னார்கள்" என்று சொன்னானே தவிர அவன் மனமும் சஞ்சலப் பட்டது.

"எல்லாம் தெரியும்டா. உன் மனைவி போன வருஷம் இதே திருவின் ஆண்டு நிறைவு நாளில் என்ன சொன்னா என்று ஞாபகப்படுத்திப்பாரு. "சினிமாவிற்குப் போகிறேன் என்று ரகு என்னிடம் சொன்னான், அதற்கு இவள் உள்ளே இருந்தவாறே உன்னிடம் "சினிமாவிற்கும் நாடகத்திற்கும் போறதில் ஒன்றும் குறைச்சலில்லை. நாலு காசு சம்பாதிக்க வழியில்லை. தான் கஷ்டப்பட்டு சம்பாதித்தால் தானே தெரியும். இப்படி இரவில் சினிமாவிற்கு போவதை விட திருடப் போயேன் "என்று மேலே அடக்கிக்கொண்டு போனதை கேட்டுக்கொண்டிருந்த அவன் ஒரேயடியாக போய்விட்டான். என்னையும் ஒரேவாரத்தில் பெங்களூருக்கு அனுப்பி விட்டீர்கள். எல்லாம் இவளுடைய அட்டகாசம்" என்று வந்ததும் வராததுமாக திட்டினாள், பெற்ற மனம் படும் சஞ்சலத்துடன்.

"அம்மா வீணாக கத்தாதே. அவன் என் தம்பி என்று இப்பொழுது சொல்லக்கூட நாகூசுகிறது. அவன் மட்டும் என் எதிரில் இப்பொழுது இருந்

தால்......அப்படியே போலிஸ் ஸ்டேஷனுக்குத் தள்ளிக் கொண்டு..."

"சார்" என்ருன் டாக்ஸி டிரைவர். உள்ளே நுழைந்து தன் தொப்பியை எடுத்தவாறே அவனைப் பார்த்த சேது பிரமித்து போனுன்.

"அண்ணு கேள். நேற்று இரவு மாட்டு வண்டியில் வந்ததும் நான்தான். உங்களை பார்க்கவேண்டுமென்ற காரணம் மட்டுமல்ல. குழந்தை நிர்மலாவின் பிறந்த தினத்தில் என் கடமையை செய்ய வந்தேன். அவள் கபடமற்ற உள்ளத்தின் ஆசையை நிறைவேற்றினேன். மீண்டும் வெளியில் போகும் போது மதனி, அம்மா வருவதை சொன்னுள். முதலில் வண்டியில் ஏறித்தான் சென்றேன். ஆனுல் மீண்டும் என் வாழ்வில் தாயாரை பார்க்க சந்தர்ப்பம் கிடைக்குமா என்ற சந்தேகம் தோன்றவே வண்டியை விட்டு கீழே இறங்கினேன். பாதையின் ஓரத்தில் ஒரு டாக்ஸி டிரைவர் காரிலேயே தூங்கி கொண்டிருந்தான். பழக்கமான என் கைகள் அவன் கழுத்தை இறுக்கியது. பிணத்தை மாட்டு வண்டியில் போட்டுவிட்டு மாட்டை தட்டி விட்டேன். உடையுடன் கார் கிடைத்தது. ஸ்டேஷனை அடைந்தேன். பிறகு தாயாரும் நீயும் வெளியில் வந்த போது நான் அம்மாவை பார்த்தேன். பாசம்தான் இழுத்ததோ என்னவோ நீங்களும் என் வண்டியில் ஏறினீர்கள். ஆனுல் நான் அவளுக்கு இப்பொழுது பிள்ளையும் இல்லை, உனக்கு தம்பியும் இல்லை. நீ போலீஸ் ஸ்டேஷனுக்கு தகவல் கொடுக்க பிரியப்பட்டாயே..... இப்பொழுது அதைசெய். காரின் நெம்பர் XYZ 0203. நான் இதே காரில் தான் போகிறேன்" என்று கணீரென்று வார்த்தைகளை உதிர்த்துவிட்டு வண்டியில் உட்கார்ந்தான் ரகு.

தூசியையும் தும்பையும் அதன் வேகத்தில் கிளப்பி தன் உருவத்தை மூடிக் கொள்ளப் பார்த்தது அந்தக் கார்.

தாயார் தாயுள்ளத்துடன் கதறினுள். சேது ரகு சென்ற திக்கையே சகோதர பாசத்தால் பார்த்தான். லக்ஷ்மி மட்டும் "ஐயோ! எல்லாம் என்னுல்தானே என்னை மன்னித்துவிடுங்கள். போகாதீர்கள்..." என்று வாய்விட்டு கதறினுள். கட்டிலில் இருந்து கீழே விழுந்தாள். நித்திராதேவி கனவு என்ற நாடகம் காட்டி மறைந்தாள். லக்ஷ்மியின் உடம்பில் ஊமைக் காயங்கள் ஏற்பட்டன. நித்திரை கலைந்து எழுந்து உட்கார்ந்தாள்.

அப்பொழுது தான் சினிமாவிலிருந்து வந்த சேது கதவை தட தடவென்று தட்டியவாறே லக்ஷ்மி என்று கூப்பிட்டான்.

சுய உணர்வு முற்றும் பெருமல் இயந்திரம்போல் எழுந்து கதவை திறந்த லக்ஷ்மி வீதியில் ஒரு மாட்டு வண்டி போவதைப் பார்த்தாள். "வண்டியை நிறுத்துங்கள். உள்ளே பிணம் இருக்கா, பாருங்கள்" என்று கத்தினுள்.

பொடிகளில் சிறந்தது எது?

கிரிஜா நெ. 1. பட்டணம் பொடி

நேதாஜி நெ. 1. பட்டணம் பொடி

சவரன் மார்க் பவுன் கலர் பொடி

ஸ்ரீ ஆண்டாள் ஆபீஸர்

ஸ்பெஷல் நெய் பொடியும் எமது தயாரிப்பே.

ராதா

பவுன்கலர் & ஆபீஸர்

பொடி

RADHA SNUFF

MANUFACTURERS: RADHA & CO., 12.T.H. ROAD. MADRAS-21.

"என்ன லக்ஷ்மி உளருகிறாய் கனவு ஏதாவது கண்டாயா அந்த வண்டிக்காரன் இந்த பக்கமாக தன் வீட்டிற்குபோவதால் நானும் அதில்தான் வந்து இறங்கினேன்.......... ஆமாம் உன்னிடம் இவ்வளவு நாளாக ஒரு விஷயம் சொல்லவில்லை என் தம்பி ரகு சென்ற வருஷம் இங்கிருந்து நேராகப் போனவன் பெங்களூரில் தங்கை வீட்டில் தங்கி வியாபாரம் செய்ய ஆரம்பித்தான். இன்று நல்ல நிலைமையில் இருக்கிறான். நாளைக் காலையில் அம்மாவுடன் வருவதாக எனக்கு ஆபீஸுக்கு கடிதம் எழுதியிருக்கிறான்: உன்னிடம் இதுவரை சொல்லக்கூடாது என்றும், திடீரென்று நாளைக்கு வந்து உன்னை ஆச்சர்யத்தில் மூழ்க செய்யவேண்டுமென்று நினைத்தான். ஆனால் இப்பொழுதே சொல்லும்படியாக நேர்ந்து விட்டது என்றான் சேது விவரமாக.

லக்ஷ்மி தன் மனதில் இருந்த பாரம் நீங்கியது போல் படுக்கையில் படுத்தாள். ஆனால் மனம் சஞ்சலமாகவே இருந்தது.

காலையில் எழுந்து சென்ற சேது ஒரு டாக்ஸியில் வந்திறங்கினான். அவன் தாயாரும், ரகுவும் உள்ளே நுழைந்தார்கள். நிர்மலா ரகுவை கட்டிக் கொண்டாள்.

சாமான்களை உள்ளே வைத்துக்கொண்டிருந்த டிரைவரை உற்று நோக்கிய லக்ஷ்மி அவன் கடைசியாக தன் சீட்டில் உட்கார்ந்து வண்டியை ஸ்டார்ட் செய்தபோது டிரைவர்" என்று தன்னையுமறியாமல் கத்தினாள்.

டிரைவர் திரும்பிபார்த்தான் அவன் கண்களில் வண்டியின் பின்புற சீட்டின்மேல் இருந்த இரண்டு மாதுளம் பழங்கள் தென்பட்டன.

வண்டியை விட்டு இறங்கி, கையில் பழத்துடன் லக்ஷ்மியை நோக்கி வந்தான். "அம்மா, நான் பார்க்கவில்லை மன்னிக்கவும்" என்றான்.

தன் நிலைமையை ஒருவாறு சமாளிக்க உதவிய அந்த பழங்களை அன்புடன் வாங்கிக் கொண்டாள்.

"மன்னி அன்று நீங்கள் இரவு சொன்னவார்த்தைகள் என் வாழ்வில் ஒரு நல்ல திருப்பத்தை செய்துவிட்டது என்று ரகு உணர்ச்சி பெருக கூறியும் லக்ஷ்மிக்கு தன் உள்ளத்தில் ஊசிகள் குத்துவதுபோல அவ் வார்த்தைகள் இருந்தது.

"அம்மா பழம் என்று நிர்மலா கேட்கவே அவள் கைகளில் அதை கொடுத்தாள். நிர்மலா ரகுவிடம் கொடுத்து உரிக்கச் சொன்னாள். தன் பையிலிருந்து பேனா கத்தியை எடுத்து நான்கு கீறல்களாகப் போட்டான். அதிலிருந்து இரத்தம் போன்ற சாறு அவன் கைகளில் படிந்தது. லக்ஷ்மியின் கண்களுக்கு அவன் கை ஓர் விகாரமாக தோற்றமளித்தது.

விஞ்ஞானக் கருவிகள் தயாரிப்புத் திட்டம்

விஞ்ஞானக் கருவிகள் பற்றிய கமிட்டி சமீபத்தில் வெளியிட்டுள்ள அதன் அறிக்கையில், இந்தியாவில் பல வகைப்பட்ட விஞ்ஞானக்கருவிகள் விஷயத்தில் இருந்துவரும் தேவை அளவை பற்றி மதிப்பீடு செய்து, அவற்றின் தயாரிப்புத் தொழிலை திட்டமிட்ட ரீதியில் அபிவிருத்தி செய்வதற்கான சில தனிப்பட்ட யோசனைகளைத் தெரிவித்திருக்கிறது. இந்தக் கமிட்டி திட்டக் கமிஷனால், 1958 ஏப்ரலில் ஏற்படுத்தப்பட்டது. இந்த அறிக்கை தக்க தருணத்தில் வெளி வந்திருக்கிறது. கமிட்டியின் அறிக்கையில் இந்த இன்றியமையாத தொழிலில் தேவைகள் பற்றியும், அத்தொழிலின் தற்போதைய நிலவரம் பற்றியும் விவரிக்கப்பட்டிருக்கிறது; மற்றும் இத்தொழிலைச் சிறந்த அடிப்படையில் அபிவிருத்தி செய்து வருவதற்காக மேற்கொள்ளவேண்டிய நடவடிக்கை பற்றி உருப்

ஸ்ரீ சிவராமனுக்கு வரவேற்பு

திட்டக்கமிஷனின் விவசாய ஆலோசகரான ஸ்ரீ எம். எஸ். சிவராமன் ஐ. சி. எஸ். அவர்கள் சென்னைக்கு 20ம் தேதி, சென்ட்ரல் ஸ்டேஷனில் வந்திறங்கியபோது "தொழில்" பத்திரிகை சார்பிலும், அதிகாரிகள் சார்பிலும் அவருக்கு கோலாகலமான வரவேற்பு கொடுக்கப்பட்டது.

படியானயோசனைகள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

இந்தியாவில் விஞ்ஞானக் கருவிகள் தயாரிப்புத் தொழில் இன்னும் இளம் பிராயத்தில் தான் உள்ளது; தனியார் துறையிலும், சர்க்கார் துறையிலும் இரண்டொரு தொழில் ஸ்தாபனங்களே அவற்றின் தயாரிப்பில் ஈடுபட்டு வருகின்றன; வேறு சில தொழில் ஸ்தாபனங்கள், இறக்குமதி செய்யப்பட்ட பகுதிகளைக் கொண்டு கருவிகளைத் தயாரித்து வருகின்றன. இந்த முக்கியமான தொழில் சம்பந்தப்பட்ட எல்லா பிரதான அம்சங்கள் பற்றியும் அறிக்கையில் சிபாரிசுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

விஞ்ஞானத்துறை ஆராய்ச்சியில் பெருவாரியான கல்வி, தொழில் ஸ்தாபனங்களும், இதர ஸ்தாபனங்களும் ஈடுபட்டு வருவதனால் இந்நாட்டில் விஞ்ஞானக் கருவிகளுக்கும் பெருவாரியாகவும், பலவகைப்பட்ட ரீதியிலும் கிராக்கி இருந்து வருகிறது.

இந்தத் தேவைகள் தற்போது பிரதானமாக இறக்குமதிகளின் மூலம் பூர்த்தி செய்யப்பட்டுவருகின்றன. 1957-ம் ஆண்டில் மட்டிலும் 589.92 லட்சம் ரூபாய் மதிப்புள்ள விஞ்ஞானக் கருவிகள் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டன. ஆனால் உள்நாட்டில் 90 லட்சம் ரூபாய் மதிப்புள்ளவைதான் தயாரிக்கப்பட்டன. இந்தப் பெரும் இடைவெளியைப் பூர்த்தி செய்வதற்காக அறிக்கையில் பல்வேறு உருப்படியான யோசனைகள் கூறப்பட்டிருக்கின்றன.

விஞ்ஞானக் கருவிகளின் உள்நாட்டு உற்பத்தியை வளர்த்து அபிவிருத்தி செய்வதற்கான மத்திய ஸ்தாபனமொன்றை அமைக்கவேண்டும் என்ற சிபாரிசு அவற்றில் முக்கியமான சிபாரிசு ஆகும். அந்த ஸ்தாபனம் இத்தொழிலின் அபிவிருத்திக்கான திட்டத்தை படிப்படியான கட்டத்தைக் கொண்டதாக வகுக்கும். அடுத்த பத்து ஆண்டு காலத்துக்குள், விஞ்ஞானக்கருவிகள் விஷயத்தில் ஓரளவு தன்னிறைவு நிலையை எய்த வேண்டியதைக் குறிக்கோளாகக் கொண்டு கமிட்டி இச்சிபாரிசுகளைச் செய்திருக்கிறது.

பிறருக்கு சுதந்திரத்தை மறுக்கின்றவர்கள் சுதந்திரத்திற்கு அருகதையற்றவர்களாவர். பாரபட்சமற்ற கடவுளின் கீழ் அத்தகையவர்கள் சுதந்திரத்தை நிலைத்து வைத்துக்கொள்ள இயலாது.

—லிங்கன்.

நாடு முன்னேற.....?

—நீ. சிகாமணி—

4. கொடுத்திட்டான் முதலாளி கூலி,' என்றே
கொண்டதொழில் கைவிடாமல் உழைக்கும் மக்கள்
சடுதியிலே முடித்திடவே ஒன்று சேர்ந்து
கருதியே கூலிக்கேற்ப உழைக்க வேண்டும்.
'விடுதொழிலை முதலாளி மறைந்தான்,' என்றே
வீண்பொழுது போக்கஎண்ணும் வேலை கொண்டோர்
'படுநிழலில் பொழுதுபோகும்' என்றே தூங்கி
பகற்கொள்ளை அடிக்காமல் இருக்க வேண்டும்.

* * * *

5. அடுத்துவரும் நாளைக்குப் பொருள்கள் சேர்க்க
அலைமெல்லாம் பாடுபடல் என்றும் நன்று
கொடுத்துவாழும் மக்கட செல்வம் சேர்க்கும்
கொடுஞ்செயலைக் கடியஅது மடியவேண்டும்.
படுத்துண்ணும் பரம்பரைக்கும் கொடுத்தல் பாபம்
படிப்படியாய் அன்னவரால் எவர்க்கும் துன்பம்
மடுவில்வாழ் முதலையென இவர்கள் செய்யும்
கொடுமைகளைப் போக்கஇது ஒன்றே போதும்.

* * * *

6. வட்டிக்குக் கொடுக்கின்ற வணிகர், காட்டில்
வளர்கின்ற வயப்புலிகள்; அவர்கள் செல்வம்
பெட்டிக்குள் குட்டிபோட்டுக் கயவர், கள்வர்
பெருங்கொலைஞர், காமுகரை ஏவி விட்டு
எட்டிநின்றே ‡ திருஷ்டியால்கொல் அரவம் போல
ஏளாதார் வறுமைகண்டு இருகை தட்டும்
சுட்டசங்கொத்த நபிசொல் உணர்ந்த பின்னும்
* அட்டஉண வென்றுவட்டிகள் வாங்காதீர்!

† திருஷ்டிவிஷம் என்னும் பாம்பு, பார்வையால் உயிர்களைக் கொல்லும்.

* தாளித்த உணவு. (சுவை மிக்கது)

செயற்கைசந்திரனில் சில நுட்ப மான கருவி அமைக்கப்பட்டுள்ளது. இந்த கருவி, சூரியனின் உஷ்ணம் மேகத்தில் விழுவதால் ஏற்படக்கூடிய நுட்ப வெப்ப நிலையை, எடுத்து பூமிக்கு அனுப்புகிறதாம்.

மூங்கிலினுல் ஏற்படக்கூடிய நன் மைகள் பல உள. மழைக்காக போடும் கோட்டு, பீர், கரண்டிகள், குடைகள், தண்ணீர் குழாய்கள், பறவை கூடு கள், வில்லு, அம்பு, கயிறு, புல்லாங் குழல், காற்ருடிகள், வீடுகள், போனே கிராப் ஊசிகள், விசிறிகள், சிலவகை ஆகாரங்கள் ஆகியவைகள் மூங்கிலில் இருந்து தயார் செய்யப்படுகின்றன.

பூமிக்கடியில் சில தாவரங்கள் வளருகின்றன. இந்த தாவரத்தின் சிதைந்த பாகத்திலிருந்து சில உயிர் ஜந்துக்கள் வளருகின்றனவாம், இப் படி வளருகிற ஜந்துக்கள், முற்றிலும், வேறு பாடுடையதாக இருக்கின்றன.

1883 ம் ஆண்டு ஜாவா பக்கத்தில் ஒரு எரிமலை குமுறியது. அந்த எரிமலை குமுறலின் சத்தம் உலகம் முழுவதுக்கும் கேட்டது. 2000 மைல்களுக்கப்பாலுள்ள ஆஸ்திரேலியாவுக்கு அந்த சத்தம் கேட்டதாம்.



மார்ஸ் கிரஹத்தில் பூமியில் வாழும் சில ஜீவராசிகள் வசிக்கின்றன என்று தற்போது நடந்த விஞ்ஞான ஆராய்ச்சி கூறுகிறது.

தென் ஆப்பிரிக்காவில் கனு என்னும் ஒரு அதிசய மிருகம் வாழ்கிறது; அதனுடையத் தலை எருமை மாட்டைப்போன்றது; வால் குதிரையைப் போன்றது. மொத்தத்தில் அது ஒரு எருமை மாட்டைப் போலிருக்கிறது.

கனவு பலிக்குமா!

—[ராஜலட்சுமி ராஜாராம்]—

(சென்ற இதழ் தொடர்ச்சி)

இன்னுமா குளித்து டிரஸ் செய்து கொள்ளவில்லை? நேரம் ஆகிவிட்டது! இன்னும் ஒரு மணி நேரத்தில் அவர்கள்வந்து விடுவார்கள். சீக்கிரம் தலையை பின்னி விடு என்று சொல்லிக் கொண்டே கோமதி தைலத்தை தடவி மகளின் தலையில் இழைய வாரி கேசத்தை பின்னி விட்டாள். செயற்கை சாதனமான சவரி இல்லாமலே, தலைப் பின்னல், கரு நாகம் போல் தாழ்த் தவழ்ந்தது. வேண்டா வெறுப்பாக சாக்லேட் கலர் நைலான் புடவையை தாயாரின் வற்புறுத்தலுக்காக அணிந்துக் கொண்டாள். மென்மையான சிவந்த அவளது கழுத்தில் ஊசலாடிய தங்கச் சங்கிலி அழகுக்கு அழகு செய்தது போலிருந்தது. தன் அலங்காரத்தை முடித்துக் கொண்டு, சோபாவில் அமர்ந்தாள். அமர்ந்தவள் ஆழ்ந்த சிந்தனையில் ஈடுபடுமுன் வாசலில் கார் சர்ரென்று நிற்கும் சப்தம் கேட்டது. வந்தவர்கள் யார் என்று எட்டிப் பார்க்ககூட மனமில்லாமல், சோபாவில் சோர்ந்து உட்கார்ந்து கொண்டிருந்தாள்.

பரபரப்புடன் வந்த கோமதி, !அவர்கள் வந்து விட்டார்கள். ஏன் ஊமைக் கோட்டான் மாதிரியாக உட்கார்ந்துக் கொண்டிருக்கிறாய்...? சிரித்த முகமாயிருக்கவேண்டாமா என்று எச்சரித்துப் போனாள்.

இது என்ன தொந்தரவு...... வேறு வேலை இடையாது. ஏதாவது கார்வார் செய்யாவிடில் பொழுதுபோகாது என சீதா முணு முணுத்தாள்.

சிற்றுண்டி காப்பிமுதலியன முடிந்தது. பெண் பார்க்கும் படலம் ஆரம்பமாயிற்று. குனிந்த தலை குனிந்தபடி, அன்ன நடைப்போட்டு, ஹாலில் உட்கார்ந்திருந்தவர்களை நமஸ்கரித்தாள். அச்சம் பயிற்பு நாணம்முதலிய புதிய சூழ் நிலையினால் உடம்பெல்லாம்வியர்க்க, ஏதோ ஒரு ஆவலினால் உந்தப்பட்டு சீதா கடைக்கண்ணால் வருங்காலக் கணவனை நோட்டமிட்டாள். தன் கண்களை அவளால் நம்ப முடியவில்லை. அவள் ஆசைக் காதலன் கோபுவை அங்கு எதிர்பார்க்கவில்லை. இவனு மணமகன் அவளுக்குஒன்றுமே புரியவில்லை. மிதமிஞ்சிய ஆனந்தத்தில் அவளின் மூச்சு நின்று விடும் போலிருந்தது. இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. அவளின் மார்பகம் பூரிப்பால்

நெகிழ்ந்தது. இவர் தான்...நன்ருகப்பார்த்துக் கொள்ளம்மா கீதா என்ருர் நாராயணன் புன்முறுவலுடன்.

மறுமுறை கோபுவைப் பார்த்த கீதாவை நோக்கி விஷமமாக கண்ணடித்தான். ஆளைப்பாரு ஆளை கல்யாணம் ஆகட்டும் பார்த்துக் கொள்கிறேன். பொய்யல்லவா சொன்ஞர். தான் ஒரு சமையற்காரியின் மகனென்று,ஷேலசில் விடுகிறேன பார் என கருவினுள். கண்ணேடு கண்ணேக்கின், கேட்கவா வேண்டும், கீதாவின் பூர்ண சம்மதத்துடன் கல்யாணம் ஜாம் ஜாமென்று நடந்தது.

கோபு இவளை நோக்கி வருவதைக்கண்ட கீதா, அவனைக் காணுததுபோல், தன் பார்வையை வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்.

என்ன ராணிசாகிபாவுக்கு கோபமா என்று பரிகாசம் செய்தபடி கோபு அவள் முகத்தை தன் பக்கம் திருப்பினுன்.

ஒன்றும் பேசத் தயாராயில்லை என்ருள் கீதா.

ஓ. ஐ...ஸீ...அதுவா—நான் கல்யாணம் செய்து கொள்ளும் பெண் எப்படியிருக்கிருள் என்பதை முன் கூட்டியே தெரிந்து கொள்ளத்தான் என்ருன் கோபு. நான்தான் நீங்கள் மணக்கப்போகும் பெண் என்று எப்படித் தெரியுமாம் என்ருள் கீதா.

உன் அப்பாவும் என் அப்பாவும் பள்ளித் தோழர்கள். அவரவர்கள் உத்யோக நிமித்தம் ஆளுக்கொரு பக்கமாக போய் விட்டார்கள். இந்த வருடம் தான் டில்லியில் நடந்த ஒரு மகா நாட்டிற்கு என் அப்பா வந்தார். யதேச்சையாக கர்ஞட் சர்க்கஸில் நண்பர்கள் சந்திக்கநேரிட்டது. பிறகுதான் பிரிந்தவர் கூடிப் பேசி உன்னையும் என்னையும் பிணைக்கத் திட்டமிட்டனர். நான் உனக்கு எல்லா விதத்திலும் ஏற்றவன் என்று சந்தோஷப்பட்டுக் கொண்டர்கள் இரு சம்பந்திகளும். ஆனுல் பணக்காரக் குடும்பத்தில் பிறந்த நீ பணத் திமிருடன் இருக்கிருயா அல்லது கர்வமின்றி இருக்கிருயா என்பதை யறிவதற்காகத்தான் உன்னுடன் கண்ணியமான முறையில் பழகிப்பார்த்து சம்மதம் தெரிவிக்கிறேன் என்று உன் அப்பாவிடம் கூறினேன். 'கல்யாணம் ஆவதற்கு முன் கண்களை நன்ருகத் திறந்து பார்த்து, பரஸ்பரம் குணங்களை ஆராய்ந்து அலசி மணம் செய்து கொள். கல்யாணம் முடிந்தவுடன் அரைக்கண்களை மூடிக்கொள். பிந்தியதை முன்பும், முந்தியதை பின்பும் செய்து பிறகு திண்டாடாதே" என்று ஒரு தமிழ்ப்பெரும் தலைவர் கூறியதைத் தான் நான் கடைப்பிடித்தேன். உன்னை எங்கு எப்படி சந்திக்கமுடியும் என்று யோசித்து உன் ஜாதகத்தில் தோஷமிருப்பதாயும், அனுமார் கோவிலுக்கு உன்னையனுப்புவதாயும், நான் அங்கு வந்து சந்தித்துப்பேசி பழக வேண்டுமென்றும் நாங்கள்

பல் வியாதிகளை பறந்தோடச் செய்யும்

டாக்டர் கோட்டீஸ்

முயல் மார்க் பயோரியா பற்பொடி

ரிஜிஸ்டர்ட்

எல்லா கடைகளிலும் கிடைக்கும்

DR.KOTI'S PYORRHEA TOOTH POWDER

டாக்டர் கோட்டீஸ்

இண்டியன் கெமிக்கல் ஒர்க்ஸ், சென்னை-5

போலிகள் ஜாக்கிரதை!

நெம்பர்களைக் கண்டு ஏமாறாதீர்கள்.

கூடி செய்த கதம்ப நிகழ்ச்சிகள்தானே இவைகள். உன் அப்பர் இதனை உனக்குச் சொல்லவில்லையா என்றான் கோபு, கனிவான குரலில் இல்லவேயில்லை...நான் என்ன சொல்லியும் அப்பா தங்களுக்கு என்னைக் கொடுக்க இஷ்டப்படாததுடன் கண்டபடி வைது விட்டுப்போனார் என்றாள் கீதா.

வருத்தப் படாதேயம்மா கீதா...நீ கோபுவை மனப்பூர்வமாகக் காதலிக்கிறாயா என்பதை அறியவே தான் நான் ஒரு சிறிய நாடகம் நடித்தேன், என்றார் நாராயணன். இவ்விருவர்களுடைய சம்பாஷணையும் இந்நேரம் விடாமல் மறைவிலிருந்து ரசித்தது ஸ்ரீமான் கோபுவிற்கும், ஸ்ரீமதி கோபுவிற்கும் எங்கே தெரியப் போகிறது?

என்னை மன்னித்து விடுங்கள் அப்பா...என் மீது குற்றமிருப்பின் என்றாள்; கீதா கண்களில் நீர் மல்க.

(முற்றும்)

அச்சுத் தொழிலில் முன்னேறியவர்!

"டி. எம். ராஜாபாதர்"

சூரியன் இன்னும் சரியாக உதிக்கவில்லை; அதோ ஒரு சிறுவன் கிளம்பிவிட்டான்!

வயது பத்து அல்லது பதினொன்றுதான் இருக்கும். அவனுக்கு அரையை மறைக்க ஒரு துண்டு; மார்புக் கூட்டை மறைக்க ஓர் அரைக் கைச் சட்டை; கையிலே கட்டுச் சோறு!

பாவம், பள்ளிப் பிராயத்தில் அவனை இந்தக் கோலத்தில் பார்க்கும் யாருக்கும் பரிதாபமாய்த்தான் இருக்கும். ஆனால் என்ன செய்வது? அவன் பிறந்த குடும்பம் பெரிய குடும்பம்; அந்தக் குடும்பத்துக்குக் கிடைத்த மாத வருமானமோ ரூபாய் முப்பத்தொன்று. ஆம்; ரூபாய் முப்பத்தொன்றேதான்!

அதையும் அவன் மட்டும் சம்பாதித்து விடவில்லை; அவனுடைய தந்தையும் சேர்ந்து தான் சம்பாதித்தார்!

தந்தைக்குக் கிடைத்தது மாதம் ரூபாய் முப்பது தனயனுக்குக் கிடைத்தது மாதம் ரூபாய் ஒன்று!

அந்த ரூபாய் ஒன்றையும் அவனுக்கு எடுத்ததும் கொடுத்துவிட்டாரா, முதலாளி?— இல்லை; இரண்டு மாதங்கள் வரை தொழில் பயின்று, மூன்றாவது மாதம் முழுவதும் தொழில் செய்தபிறகே கொடுத்தார்!

அது என்ன தொழில் அப்படிப்பட்ட தொழில் என்கிறீர்களா? அதுதான் அறிவுவளர்ச்சிக்கு இன்று அஸ்திவாரமாயிருக்கும் அச்சுத் தொழில்: அந்த அச்சுத் தொழிலைக் கற்க அவனுக்கு அஸ்திவாரமாயிருந்தது திண்ணைப் பள்ளி!

அரிச்சுவடியிலிருந்து அறப்பளீசுர சதகம் வரை அங்கே படித்த அவன், அதற்கு மேல் படிக்க வேண்டியதை 'அநுபவக் கல்லூரியிலே' சேர்ந்து படித்தான். அதன் பயனாக மாதம் ஒரு ரூபாய் சம்பளம் வாங்கியவன், நாலைந்து வருடங்களுக்கெல்லாம் பதினைந்து ரூபாய் சம்பளம் வாங்க ஆரம்பித்துவிட்டான். அப்பொழுதும் "பற்றுக்குறை" அவனை விட்டபாடாயில்லை. அதற்காக அவன் தளர்ந்தானா? தடுமாறினானா? 'தகப்பனார் இருக்கிறார் சம்பாதிக்க; தாயார் இருக்கிறார் வேளை தவறாமல் சமைத்துக்கொட்ட!' என்று பொறுப்பற்றுத் திரிந்தானா? திகைத்தானா?—இல்லை இல்லவே இல்லை—ஓய்ந்தபோதெல்லாம்,

"கனகவல்லி கோலை கேசுவிலே
சொன்னேன் ஆறு காசு!"

என்று "சந்து முனை சிந்து" பாடி அரையணா, ஓரணா புத்தகங்களை விற்ருன். அதன் வாயிலாகக் கிடைத்த காசையும் அம்மாவிடம் கொண்டு போய்க் கொடுத்து, "கவலைப் படாதே, அம்மா! நம்முடைய கண்ணீரைக் கண்டு கஷ்டம் ஓடாது; காசைக் கண்டால் தான் ஓடும்!" என்ருன்.

இந்த நிலையிலே பத்துப் பன்னிரண்டு வருட காலத்தை எப்படி எப்படியெல்லாமோ கழித்த பிறகு, அவன் ஒருபத்திரிகை காரியாலத்தில் சேர்ந்தான்; அங்கே நாலைந்து வருடங்கள் பணியாற்றியும், அவன் குடும்பத்தின் பசி ஆறவில்லை!

'ஏன் இந்த நிலை? தன்னிடம் திறமை யில்லையா? திறமையிருந்தும் அதைப் பயன்படுத்தச் சந்தர்ப்பம் வாய்க்கவில்லையா?"

அவன் யோசித்தான்; அந்த யோசனை யின் முடிவிலே 'தன்னிடம் திறமை என்னமோ இருக்கத்தான் இருக்கிறது; அதைப் பயன் படுத்தச் சந்தர்ப்பம்தான் வாய்க்கவில்லை" என்பதை அவன் உணர்ந்தான்.

அவ்வளவுதான்; அவனுடைய கண்கள் கழுகுக் கண்களாகி, "எங்கே அந்தச் சந்தர்ப்பம், எங்கே அந்தச் சந்தர்ப்பம்? என்று தேட ஆரம்பித்து விட்டன!

இந்தச் சமயத்தில்தான் 'வெளியாகிறது ஒரு வர்ரப் பத்திரிகை என்ற விளம்பரம் பத்திரிகைகளிலே வெளியாயிற்று.

'தனக்கு வாய்க்க வேண்டிய சந்தர்ப்பம் தனக்காக அங்கே காத்துக்கொண்டிருந்தாலும் காத்துக்கொண்டிருக்கலாமல்லவா?'

இப்படி நினைத்தானே, இல்லையோ—எடுத்தான் ஓட்டம், எழும்பூருக்கு. ஆம், 'பத்திரிகை காரியாலய'த்தை முதன் முதலில் அங்கேதான் துவக்கினார்கள். ஏற்கெனவே ஓரளவு அறிமுகமாகியிருந்த அதன் அதிபர்கள் அவனுக்கு அங்கே வேலை கொடுக்கத் தயங்கவில்லை; கொடுத்தார்கள் ஆனால் அந்தச் சந்தர்ப்பம் அவனுடைய கனவை நனவாக்கும் அந்தச் சந்தர்ப்பம் — இரண்டு வருடங்களுக்குப் பின்னால்— அவனுக்கு வாய்த்தது எது எப்படியிருந்தாலும் திறமைக்கு முக்கியத்வம் கொடுப்பதில் முன்னணியில் நிற்கும் தூய உள்ளம் படைத்த முதலாளி அவனைப் 'போர்மே'னாக்கி மகிழ்ந்தார்கள். உத்தியோகம் உயர்ந்ததுபோல் ஊதியமும் உயர்ந்தது.

அவன் வாழ்க்கை கரும்பாக இனிக்காவிட்டாலும் வேம்பாகக் கசக்கவில்லை அவனுக்கு! அவனுடைய வெற்றியின் இரகசியம்? விடாமுயற்சி".

*

குடுமியா? கிருப்பா?

டாக்டர் பி.எஸ். சின்னசாமி
பி.எஸ்.ஸி; எம்.பி.பி.எஸ்

சாந்தம் நிலவும் அவர் முகம் விளக்கின் ஒளியில் ரத்தச் சிவப்பாக மாறியது நன்குத் தெரிந்தது. உதடுகள் துடி துடிக்க கட்டிலிலிருந்து எழூந்தார், மேல் வேஷ்டி கீழே விழ, அவர் அகன்ற மார்பு விம்மியதை காட்டியது. கீழே நழுவிய வேஷ்டியை அவர் பொருட்படுத்தவில்லை. "சீ நீ ஒரு பெண்ணா? உனக்கு மானமிருந்தால் உன் புருஷனிடம் இப்படிப் பேசுவாயா?" என்று கூறிக்கொண்டே என் கன்னத்தில் அறைய கையை ஓங்கிக்கொண்டு அருகில் நெருங்கினார்.

என்னை இதுவரை எவரும் விரலால்கூட தொட்டதில்லை.

நான் கண்களை பயத்தால் மூடிக்கொண்டேன் இன்னும் அரை வினாடி அவர் அருகில் வந்து விட்டார் என்று தெரிந்தது. எதிர்பார்த்த அந்த அறை விழவில்லை. கண்ணை விழித்தேன். ஓங்கின கை நின்றுவிட்டது. என் உடல் வெடவெடவென்று நடுங்கிக்கொண்டிருந்தது. ஒரு வினாடியில் கோபத்தைக் கட்டுப்படுத்திக்கொண்டு விட்டார் போலும் கீழே விழுந்த உத்தரியத்தை எடுத்து மேலே போட்டுக்கொண்டு, ஏது சம்பவமும் நடக்காதது போல் கட்டில் விளம்பில் உட்கார்ந்துகொண்டு என் கையால் அவர் வாயில் போடப்படவேண்டிய கறுந்திராக்ஷைக்குலையை எடுத்து ஒரு பழத்தை எடுத்து வாயில் போட்டுக்கொண்டு அதிலுள்ள விதைகளை கீழே துப்பினார்.

மிகவும் நிதானமாக "குந்தளா கோபத்தில் புத்தியை இழக்கப்பார்த்தேன். மன்னித்து விடு. உன்னை திருப்தி செய்யநான் எதுவேண்டுமானாலும் செய்வேன். ஆனால் இந்த ஒரு விஷயம் மாத்திரம் எனக்கும் அப்பாற்பட்டது. என் தந்தை மரணத்தருவாயில் என் கைகளைப் பிடித்துக்கொண்டு, ரிஷி என்றும் நீ

உன் சிகையை எடுக்கக்கூடாது என்றார். நான் தலையை அசைத்து என் சம்மதத்தைத் தெரிவித்தேன். என்னை முன்னமே பார்க்க உனக்கு வாய்ப்பு இல்லாமல் போனதே இந்த சூழ்நிலைக்குக் காரணம் என்னைப்பற்றி உன் அப்பா உன்னிடம் ஒன்றும் கூறவில்லை எனத் தெரிகிறது.

நான் ஒரு விவசாயி ஒரு பள்ளியின் தலைவன். வினாடிக்கு வினாடி மாறும் பட்டண நாகரீகத்திற்கும் எனக்கும் வெகு தூரம். நவீன நாகரீக வாழ்வில் வளர்ந்து ஒன்றிப்போன உன் மனம் இந்தக்கோலத்தைக் கண்டு நான் வருந்துவது தர்மமல்ல. உன்னை நான் மனப்பூர்வமாக விரும்புகிறேன். என்றும் உன்னை வரவேற்பேன். என்று என்னை இதே கோலத்தில் ஏற்க உன் மனம் இடமளிக்கிறதோ அன்று என்னிடம் இணையலாம். அதுவரை நான் உன்னை நிர்ப்பந்தித்து என் உரிமையை நிலைநாட்ட முயற்சிக்கமாட்டேன், வருகிறேன்.'' என்று என் பதிலை எதிர்பாராமல், அறையின் கதவை சந்தடி செய்யாமல் திறந்துவெளியேறி விட்டார். சில நிமிஷத்திற்கெல்லாம் வாசலில் கார் புறப்பட்ட சப்தம் கேட்டது. என்னைப் பிடித்த போலி கௌரவ உணர்ச்சி அவரை தடுத்து நிறுத்த இடம் கொடுக்கவில்லை. அவர் சென்றதை நல்லவேளையாக எவரும் கவனிக்கவில்லை.

விடியற்காலை சோபன அறையிலிருந்து வெளியே வந்தேன். சலவை கலையாத புடவைக்கட்டும், கழட்டப்படாத ஒட்டியாணமும். இரவு வாரிவிடப்பட்ட கேசம் கலையாமலும், நாணமின்மையையும் கவனித்த என் தாயார் ஒரு வினாடியில் நிலைமை புரிந்து கொண்டார்கள். சந்தேகத்தை நிவர்த்திக்க உள்ளே சென்றாள். படுக்கப்படாத மெத்தை அவள் அனுமானத்தை ஊர்ஜிதப் படுத்திவிட்டது.

''குந்தளா, எங்கேடி மாப்பிள்ளை?'' என்றாள்.

அவள் மார்பில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினேன். என் தலையையும் முதுகையும் மெல்ல தடவினாள். அவள் கண்களிலிருந்து நீர் வழிந்தது. என் அம்மா கண் கலங்கியதை நான் கண்டதே கிடையாது.

மாப்பிள்ளை அவசர ஜோலியாய் விடியுமுன்பே ஊருக்குப் போய் விட்டதாகவும் வீடு பார்த்து ஊருக்கு அழைத்துப் போவார் என்றும் எல்லாரிடமும் அம்மா சொல்லி விட்டாள்.

ஆடி ஆறும் மாதம் தலை தீபாவளி எல்லாவற்றிற்கும் தனக்கு வேலையிருப்பதால் வர முடியவில்லை என்று அப்பாவிற்கு மரியாதையாய்க் கடிதம் எழுதி விட்டார், தீபாவளிக்கு எனக்காக அரக்கு நிறத்தில் ஒரு சாண் அகலம் ஜரிகை போட்ட ஒரு பட்டுப்புடவையும் அப்பாவுக்கு ஒரு வேஷ்டியும் அனுப்பியிருந்தார். அதைத்

நான் கட்டிக்கொள்ள வேண்டும் என்று அப்பா பிடிவாதம் பண்ணினர். உள்ளே போய்ப் புடவையைப் பிரித்தேன். என்ன ஏமாற்றம்! அது ஒரு பதினெட்டு முழப்புடவை! அப்படியே அதை ஒரு பந்தாகச் சுருட்டி மூலையில் எறிந்தேன். அப்பாவிற்கும் மெள்ள மெள்ள என் நிலை தெரிந்து விட்டது. காலப்போக்கில் எல்லாம் சரியாய்விடும் என்று அவர் வாளாயிருந்தார்.

விளையாட்டுப்போல் ஓராண்டு உருண்டோடி விட்டது. இப்பொழுதெல்லாம் நான் வெளியே போவது இடையாது. ஏனென்ருல் எல்லாரும் தலை முழுகிருயா எப்பொழுது வந்தாய்?'' என்று கேட்க ஆரம்பித்து விடுகின்றனர். அம்மாவுக்கு சமையலில் கூடமாட ஒத்தாசை செய்து வந்ததில் நன்ருய்ச் சமைக்க கற்றுக்கொண்டேன் என் தாயார், அடிக்கடி, என்னை அவருக்கு கடிதம் எழுதுமாறு தூண்டுவாள். நான் ஊம் கொட்டுவேன். அம்மா அந்தப் பேச்சை எடுத்து என்னைப் புண்படுத்தமாட்டாள். ஆனல் எங்கள் வீட்டில் கலையில்லை.

எங்கள் ஊருக்கு அப்பொழுது ஒரு பெரிய தவச்சிரேஷ்டர் எழுந்தருளினர் அவரது. பூஜையைக் கண்டு புண்யமடையவும் அவர் பொன்மொழிகளைக் கேட்கவும் அவர் ஆசியைப் பெறவும் திரள்திரளாக மக்கள் அணுகினர். அவர் காலையில் சுமங்கலிகளுக்கும் கன்னிப் பெண்களுக்கும் தன் திருக்கரங்களாலேயே பிரசாதம் அளிப்பார். தீராதநோய்களையும் மனோவியாதிகளையும் தீர்க்கவல்ல பிரசாதமென, அவரை அணுகினர். என் தங்கை தினமும் அங்கு அழைத்துப்போகுமாறு நச்சரித்துக்கொண்டிருந்தாள் அவள் உபத்திரவம் பொருக்காமல் ஒருநாள் குளித்துவிட்டு ஒரு தட்டில் வெற்றிலை பாக்கு புஷ்பம் தேங்காய் பத்து ரூபாய் பணத்துடன் என் தங்கையோடு புறப்பட்டேன். உத்சவ கால கூட்டமிருந்தது. எப்படியோ முண்டியடித்து முன்னணியில் இடம் பிடித்துவிட்டோம்.

அன்று தேவிபூஜையாம் பூஜையைப் பார்த்துக்கொண்டிருந்த எனக்கு என்னையறியாமலேயே ஒரு பரவசம் ஏற்பட்டது. பூஜை முடிந்துஅத்தவசிலர் பிரசாதம் கொடுக்க ஆரம்பித்தார். ஒவ்வொருவராக ஸுமங்கலிகளும் கன்னிப் பெண்களும் உள்ளே அனுமதிக்கப்பட்டனர். என் தங்கை கனகா கூட்டத்தில் நுழைந்து உள்ளே சென்று விட்டாள். உள்ளே நுழைய என் முறை வந்தது. வழியில் நின்று கூட்டத்தை ஒவ்வொருவராக உள்ளே அனுமதித்துக்கொண்டிருந்தார் ஒரு கிழவர். அவர் என்னை நிறுத்தி, ''உனக்கு விவாகமாய்விட்டதா,'' என்று கேட்டார்.

''ஆகிவிட்டது', என்றேன்.

''நீ இப்படி உள்ளே செல்லலாகாது. விவாகமானவர்கள் கொசுவம் வைத்துத்தான் புடவை உடுத்தி பிரசாதம்

வாங்கச்செல்லவேண்டும். ஒரு நர்ஸ் என்ருல் அவள் உடையை ஒரு மாதிரி அணிந்துதான் வேலைக்குச் செல்கிருளல்லவா? அதுபோல் இங்கு வருவதற்கு ஒரு நியமம்உண்டு. விவாகமாய் விட்டதாய்ச் சொல்லிக்கொள்ளும் நீ மூக்குக்குத்திக்கொள்ளாதிருத்தல் மிகவும் அமங்களம் பிறகு வா" என்றுஎன்னை திருப்பி அனுப்பி விட்டார். கூட்டம் உள்ளே செல்லமுடியாமல் என்னுல் தடைபட்டது. என் பின் இருந்த ஒரு வயோதிகமாது, "தட்டுகெட்ட கழுதைகள் எல்லாம்என்னத்துக்கு இங்கு வரணும்" என்று முணுமுணத்தது என் காதில் விழுந்தது.

ஒரே ஏமாற்றம். அந்த குங்குமப் பிரசாதத்தை யடையாதது எனக்கு ஒரு பெரிய குறையாய்ப் போய்விட்டது. என்

தங்கை கையில் கொண்டு வந்த குங்குமத்தை என்முன் நீட்டி ளுள். அதை நான் எடுத்துக் கொள்ள விரும்பவில்லை. காரில் வீடுவந்து சேர்ந்தோம்.

"அம்மா" என்றேன் அவசரமாக சமையலறையிலிருந்து அம்மா வெளியே வந்தாள். பணத்தில் நீந்தினபோதிலும் அம்மாவுக்குத் தன் கையால் சமைத்துத் தான் அப்பாவுக் போடுவதில் அலாதிப் பிரியம். அதனுல் எங்கள் வீட்டில் சமைக்க மட்டும் ஆள் இடைவாது.

"அம்மா...தட்டானை வரச் சொல்...நானும் உன்னைப் போல் மூக்கு குத்திக் கொள்ளப் போகிறேன்." என்றேன்.

புன்னகையுடன் உள்ளே போய்விட்டாள். வெள்ளிக் கிழமை காலை தட்டான் வந்து விட்டான். முத்திப்போன மூக்கல்லவா. வலியில் துடித்துப் போய்விட்டேன். இரண்டு மூக்கையும் குத்திக்கொண்டு விட்டேன். நான் சற்றும் எதிர் பார்க்காமல் இருக்கும்பொழுது மூக்கில் வளையத்தை மாட்டுவது போல் தட்டான், என் மூக்கின் நடுத்தண்டின் அடியில் குத்திவிட்டான். "எதற்கு இங்கே வேறு குத்தினுய்" என்று அவனைக் கடிந்தேன்.

"அது வைர புல்லாக்கு போட அம்மா," என்று கூறினுன். மரியாதைக்காகத் தந்த வெற்றிலை, பாக்கு, புஷ்பம், தக்ஷிணை, ஆகியவற்றை பெற்றுக் கொண்டு போய்விட்டான்.

பின்னர் ப்ளூ ஜாகர்வைரத்தில் மூக்குத்தியும் எட்டுக்கல் பேசரியும், ஆயிரம் ரூபாய் விலையுள்ள ஒரே ஒரு முத்தில் புல்லாக்கும் செய்துவிட்டாள். எல்லாவற்றையும் அணிந்து கொண்டு அம்மாவை நமஸ்காரம் செய்தேன். உள்ளே ஓடிப்போய் கண்ணுடி முன் நின்று முகத்தைப் பார்த்தேன். முகம் களையாகவே யிருந்தது.

அம்மா என்று, அம்மாவைக் கூப்பிட்டேன்.

"என்னடி என் பின்னே சுத்தறே" என்ருள்.

"இல்லேம்மா எனக்குக் கொசுவம் வைத்து உன் மாதிரி புடவை கட்டிவிடு," என்றேன். அம்மா தன் புடவைகளில் ஒன்றை யெடுத்து வந்தாள். நான் என் அறைக்கு ஓடி தீபாவளிப்பரிசாக அவர் அனுப்பியிருந்த புடவையை எடுத்துவந்து நீட்டினேன்.

என்னையறியாமல் என் முகம் சிவந்தது.

புடவையைக் கட்டிக் கொண்டு இப்படியும், அப்படியும் இரண்டு தடவை நடந்து பார்த்தேன். புடவை நழுவி கீழே விழுந்துவிடும்போல் இருந்தது. பண்டைய கால பொருள் என்று என்னுல் ஒதுக்கிவைக்கப்பட்டிருந்த வைர ஒட்டியாணத்தை இடுப்பில் பெல்ட் போல் அணிந்தேன். காரைக்கொண்டு வரச் சொல்லி அம்முனிவரைத் தரிசிக்கப்புறபட்டேன். இவையனைத்தையும் கண்ணுற்றிருந்த என் தாய், ஜாக்கிரதையாய் போய்விட்டுவா," என்ருள்.

(தொடரும்)

தலை வணங்குவோம்!

(கவிஞர் பாரதிமோகன்)

செக்கிழுத்தனர் சிப்பி ஏந்தினர்
சிறையில் மாதவஞ் செய்தனர்
சுக்கலாகவும் மண்டை சிதறவும்!
தூக்கிலே சிலர் மாண்டனர்!
திக்கெலாம் புகழ் தியாகம் ஏற்றனர்
தேசம் விடுதலை பெற்றதே!
மக்கள் அனைவரும் "தலை வணங்குவோம்"
வாழ்க! வீரர்கள் பெயரெலாம்!

●

பஞ்சம் பசிப்பிணி வறுமை மாய்ந்திட
பாடுபடுவர் வாழ்ந்திட
வஞ்சனைபொய் சூது வாதுகள்;
வர்க்கமே அலறி வீழ்ந்திட!
நெஞ்சங்குளிர நற்பண்பு பொங்குக!
நீடுயத் "தொழில்" கள் பெருகவும்
குஞ்சரத்தனை யொத்த இளைஞர்கள்
கோடி நற்பணி செய்கவே!

●

உலகிலே சிலயுத்த வெறியர்கள்!
உலகை மாய்த்திடத் துடிக்கிறார்!
குலம் அழிந்திடும் நாசம் வருமென
கூர்ந்த மதியினர் இடிக்கிறார்
பலமும் கொண்டவர் பகைமை வென்றவர்
பாரில் காந்திமகானின் சொல்!
கலமுயர்ந்திடும் இருளகன்றிடும்
நாடுவீர் உலகுய்யவே!

"குறளோவியம்"

[காரை கணேசன்]

அவள் அழகி. அவளில்லா இடம் அவனுக்கு நிலாவில்லா வானம்— நீரில்லா ஓடை, மணமில்லா மலர்; அவள் அசைந்தாடும் பூங்கொடி! அவன் அன்புடன் வீசிவரும் தென்றல்— அவள் மகிழ்வூட்டும் மஞ்சம்! அவன் மகிழ்ந்தாடும் நெஞ்சம். அவள் சுவையூட்டும் கரும்பு!— அவன் சுவைத்து வரும் எறும்பு மேலே படியுங்கள்.

பௌர்ணமி நிலவு ஊரைப் பகலாக்குகிறது, பக்கத்துத் தெருவில் பாவையரின் பேச்சொலி கேட்டு மெல்ல யாரும் காணாமல் பக்கத்தில் உள்ள மாங்காட்டு ஆற்றருகே! பெருமூச்சு விட்டபடி காதலியைத் தேடினான்.... காதலியைக் காணாது மனம் வருந்தியபடி சுற்றும் முற்றும் பார்த்துக்கொண்டிருந்தான்....அப்போது, "பளீர்" என்று ஓடையில் உள்ள மீன் துள்ளித் தரையில் விழுந்தது —புரண்டது— நீரின்றித் தத்தளித்தது. காதலன் மனமும் காதலியைக் காணாமல் தத்தளித்தது.... பிறகு மீனை ஓடையில் எடுத்துவிட்டு....அது நீந்துவதைப்பார்த்தான்.... "திடீர்" ரென்று அவன் கண்களைப் பொத்தினாள்....யாரென்றான் பேச்சில்லை, காரணம் கேட்டான். மௌனமாய் நின்றாள் ....ஏன் கோபமா? என்று கரம் பிடித்தான்.......நீங்கள் தான் என்னை யாரென்று கேட்டுவிட்டீர்களே! என்னைத்தவிர தங்கள் கண்களை பொத்துவதற்கு வேறு யாருக்கு உரிமையென்றாள்.... அடடா .... இதற்காகவா, இன் நேரத்தை வீணாக்கினாய், சரி இனிமேல் சொல்லவேமாட்டேன் என்றான்...காதலி சிரித்தாள்.... சிரிப்பில் முத்துக்கள் உதிர்ந்தன. என்று வானத்தைப் பார்த்தான்............. வட்ட நிலாவும் வான வீதியில் பவனிவர சொட்டும் தேனாகச் சுந்தரியும் சொல்லுதிர்க்க! கிட்டயிருந்தே, கட்டாரி விழியாளின் கனிவான மொழி கேட்டு, கனியமுதே! பனிமலரே!! காதல் பிணி நீக்கும் சஞ்சீவியே!' வா பக்கமென்றபடி நகர்ந்தான். அங்குமிங்கும் பார்த்தாள். யாருமில்லை "வா" வென்றான்... சிரித்தான்.

Regd. 141246

WHITE HORSE SOAP

ஒயிட் ஹார்ஸ் சோப் தரத்திலும் குணத்திலும் சிறந்ததென எல்லோராலும் புகழப்பட்டது, தகுந்த விலையில் இடைக்கக்கூடியது.

எங்கும் கிடைக்கும்:—

NATIONAL INDUSTRIES

MADRAS-21.

ஏனென்றாள்" முழு மதியை முகத்தழகால் வென்று விட்டாயே என்றான்....“போங்களத்தான் புகழ்ச்சி" புன்னகைபால் வென்றிட்ட பூங்கொடியே! புகழ்ச்சி இல்லை, நீ! இல்லா இடம் எனக்கு நிலவில்லா—வானம், நீரில்லா ஓடை, மணமில்லா மலராகும் மான் விழியே! நீ! அசைந்தாடும் பூங்கொடி! நான் அன்புடன் வீசிவரும் தென்றல்—நீ! மகிழ்வூட்டும் மஞ்சம், நான் மகிழ்ந்தோடும் நெஞ்சம், நீ! சுவையூட்டும் கரும்பு, நான் சுவைத்து வரும் எறும்பு! குறும்புபேசாதே குளிர்—தென்றல் காற்றே! உன் அழகு நடைக்கு அன்னம் பின்வாங்கும்; ஆட்டத்தில் மயில் மருளும், குரலினிமையில் குயில் கோட்டானாகும் சுந்தரியே என்றான்.

தேனருவிதானே! ஓடுகிறதே “அத்தான்" மானருகில் நானிருக்க வார்த்தைக்குப் பஞ்சமா? அஞ்சுகமே பேசு! தென்றல் நடை வீசு!.... என்று மார்போடு அணைத்தான்.......... வெண்ணிலாவும் விறைந்தோடியது ...அத்தான் என் நிறுத்தி விட்டீர்கள் .... கொஞ்சம்.... பேசுங்கள்....ம்ம்....பேசுங்கள் அத்தான் என்று, விழித்துவிட்டாள்...கண்டது கனவுதானா? என்று வருந்தினாள்....இக்காட்சியை ஏழு சீரில் எடுத்துக்காட்டுகிறார் குறள் தந்த கோமான் வள்ளுவன், படியுங்கள்.

“நனவினான் நல்காக் கொடியார்
கனவினான்
என்னெம்மைப் பீழிப் பது!
—(குறள்)

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 7 வது மகாநாடு

தமிழ் எழுத்தாளர் சங்கத்தின் 7வது மகாநாடு சென்னை ராஜாஜி ஹாலில் நடந்தது. ஏராளமான தமிழ் எழுத்தாளர்கள் மகாநாட்டிற்கு வருகை தந்து, மகாநாட்டை சிறப்படையச் செய்தார்கள். "தமிழில் உரை நடை" என்பதுபற்றி நடைபெற்ற கருத்தரங்கத்திற்கு டாக்டர் அ. சிதம்பரநாதன் எம். எல். சி. தலைமை தாங்கினார். அவர் குறிப்பிட்டதாவது:—

தமிழ் எழுத்தாளர்கள் என்று கூறிக்கொண்டே, தமிழையும், தமிழ்பெருமக்களையும், தமிழ் மரபையும் இழித்து பேசுவோருக்கு தமிழ் எழுத்தாளர் உலகில் மட்டுமல்லாமல் தமிழ் நாட்டிலும், எங்கும் இடம் இடைக்காது போய்விடும். பிறமொழியை 'வலிந்து' தமிழில் கலந்தும், இயற்கையாக தூய தமிழ்ச்சொற்கள் பயன்படுதுவதைப் பழித்தும், இழித்தும் பேசுவது 'தமிழ்' எழுத்தாளனுக்கு அழகல்ல என்றும் அவர் குறிப்பிட்டார்.

கருத்தரங்கில் விவாதத்தைத் துவக்கிவைத்த ஸ்ரீ. ரா. ஸ்ரீ. தேசிகன் மறைமலை அடிகள் எழுதிய உரை நடையில் வேண்டுமென்றே வடமொழிச்சொற்கள் தவிர்க்கப்பட்டது என்றார். டாக்டர் அ. சிதம்பரநாதன் தமது தலைமையுரையில் மறைமலை அடிகள் எழுதியது 'தமிழா? என்று கேட்டு குற்றம் காணும் நிலையில் தமிழ்நாடு இருப்பது குறித்து வருந்தாமல் இருக்கமுடியாது. இப்படி குற்றம் காணக்கூடியவரை தமிழன் என்று எப்படி கூறுவது? தமிழ் நாட்டில் இப்படிப்பட்ட நபர் இருப்பதால் உண்மையிலே நான் துக்கம் அடைகின்றேன் என்றார். அவர் மேலும் கூறியதாவது மறைமலை அடிகளது நடை உமக்கு புரியாமல் இருக்கலாம். அல்லது அதுபோல் தூய தமிழில் எழுத முடியாத நிலை இருக்கலாம். அல்லது அவரவர் மனப்பக்குவத்திற்கும், கல்வியறிவிற்கும் ஏற்ற தமிழாக இல்லாமல் போகலாம் அல்லது குறை கூறியவர் மூளைக்கு எட்டாமல் இருக்கலாம். இதுதான் தமிழ்பற்று? இப்படிப்பட்ட நபர் தமிழ்நாட்டில் பிறந்ததற்கு உண்மையிலே தமிழ் நாடு தலைகுனிகிறது என்றார்.

தொல்காப்பியர், நச்சினார்க்கினியர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், மறைமலை அடிகள் ஆகிய தமிழறிஞர்களால்

தமிழும் உரை நடையும் வளரவில்லை, என்று எழுத்தாளர் சங்கமேடையேறிப் பேசும் நிலை தமிழகத்திற்கு வந்ததே என்று அவர் வருத்தம் தெரிவித்தார். தமிழ்ப் புலவர்களையும், பெருமக்களையும், பழிப்பதற்கு எழுத்தாளர் சங்கம் இடமளிக்குமானல் தமிழாசிரியர்கள் அனைவரும் சங்கத்திலிருந்து விலகநேரிடும் என்று ஸ்ரீ சிதம்பரநாதன் ஆவேசமாகப் பேசினர்.

நூற்றுக்கு மேற்பட்ட தமிழ் எழுத்தாளர்கள் மேடைமீது சென்று தம்மைத்தாமே அறிமுகம் செய்துகொண்டது சுவையாக இருந்தது. சில இளம் எழுத்தாளர்கள் மிடுக்குடன் வந்து "நான் சிறந்த கவிதை புனைவேன்" என்றும், "நான் சிறந்த கதை எழுதுவோன்" என்றும் அறிமுகப் படுத்திக்கொண்டனர்,

டாக்டர் சிதம்பரநாதன் தம்மை "தமிழுக்கு தொண்டு செய்யும் சிறு எழுத்தாளன்" என்று கூறிக்கொண்டார்.

பன்மொழிப்புலவர். ஸ்ரீ. கா அப்பாத்துரை பேசுகையில் தமிழ் என்றும் நிலைத்து நிற்குமென்றும், தமிழ் மொழி வளத்தையும் பண்பாட்டையும் காக்க 'தூய தமிழ்' அவசியமென்றும் வலியுறுத்தி இதனை எதிர்ப்போர், தமிழ் வெள்ளத்தோடு அடித்துச் செல்லப்படுவர் என்றும், எச்சரித்தார். பிறமொழி தமிழில் கலப்பதில் குற்றமில்லை. ஆனல் தமிழை அழித்து ஆதிக்கம் செலுத்தி, தமிழையே வேறுமொழிபோல் காட்டும் வகையில் பிறமொழி கலப்பு கூடாது என்று அவர் விளக்கிக் கூறினர். ஸ்ரீ ம. பொ. சிவஞானமும் கூட்டத்தில் பங்கு கொண்டார். ஸ்ரீ க. நா. சுப்பிரமணியம் பேசுகையில் தமிழ் 'மரபு" என்று தொன்மை மட்டும் பேசுவதால் பலனில்லை என்று கூறி, புதிய பிறமொழி நடைகளைப் பின்பற்ற வேண்டுமென்று சொன்னர்,

யாழ்ப்பாணத்திலிருந்து வந்திருந்த ஸ்ரீ கணபதி பேசுகையில் கடல் கடந்து இலங்கை முதலிய நாட்டு அரசாங்கத்துடன் கலந்து, தமிழர் வாழும் பகுதிகள் அனைத்திற்கும் ஏற்ப 'கலைச்சொற்கள்' உண்டாக்குவது நல்லது என்று கூறினர். உலகெங்கும் தமிழர் குடியேறி வாழ்வதால், இன்னும் 30 ஆண்டுகளுக்குள் ஆங்கிலம் போல தமிழும் உலக மொழியாகு மென்றும் அவர் குறிப்பிட்டார். மற்றும். ஸ்ரீமான்கள் மயிலேறு, சுந்தரமூர்த்தி நாயினர், கோபால கிருஷ்ணன், கே. டி. சம்பந்தம், ஏ. கே. ரங்கமணி, வ. வீரபத்திரன், கண்ணப்பர், ஆகியோர்கள் பேசினர்கள்.

கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேறின:

தீர்மானங்கள்

பிற்பகலில் பல தீர்மான்ங்கள் நிறைவேற்றப்பட்டன.

தமிழகத்தின் பண்டை நாகரிகத்தை வெளிப்படுத்த,புதை

ஜெனரல் இன்ஜினீரிங் & ஸ்டரக்சரல், கொல்லாப்சபில்
கேட், ஸ்லைடிங், ஸ்விட்ச் பாக்ஸ், ஸ்ட்ரக்சர்ஸ்,
வெல்டிங், காஸ்டிங் தயாரிப்பவர்கள்.

எல்லாவித இன்ஜினீங் வேலைகளையும் நம்பிக்கையாகவும்,
சரசமாகவும் செய்து கொடுக்கப்படும்.

சப்ளையர்ஸ் :

கிராம்ப்டன் இன்ஜினீரிங் கம்பெனி & இங்கிலீஷ்
இன்ஜினீரிங் பர்ம்ஸ்.

லேபர் கண்ட்ராக்ட்களும் சிறந்த முறையில் செய்யப்படும்.

விவரங்களுக்கு:

P. G. நடராஜன் & பிரதர்ஸ்,

470, திருவொற்றியூர் ஹைரோடு,

சென்னை-21.

பொருள் ஆராய்ச்சியை விரிவாக்க வேண்டும் என்று ஒரு தீர்மானம் கூறியது. முதுமை, வறுமை காரணமாக நீடித்த உதவி கோரி மத்திய அரசினருக்கு சமர்ப்பிக்கப்படும் விண்ணப்பங்களைத் தாமதமின்றி கவனிக்க வேண்டுமென மற்றொரு தீர்மானம் வலியுறுத்தியது. ஆண்டு தோறும் நூறு நல்ல தமிழ் நூல்களைத் தேர்ந்தெடுத்து கடல் கடந்த தமிழரிடையே, வெளி நாட்டுத் தூதராலயங்கள் மூலம் விநியோகிக்க வேண்டும் என்று வேறு ஒரு தீர்மானம் கூறியது. கடல் கடந்து வாழும் தமிழர், தமிழ் எழுத்தாளர்களுக்கும் அகில இந்திய ரேடியோவில் எழுத்தாளர்களுக்கும், பேச்சாளர்களுக்கும், யுத்த காலத்திற்கு முன்பு நிர்ணயிக்கப்பட்ட தொகைதான் அளிக்கப்பட்டு வருவதாகவும், இதனை உயர்த்த வேண்டுமெனவும், அகில இந்திய சாகித்ய அகாடமியில் தமிழ் எழுத்தாளர் சங்கத்திற்கு பிரதிநிதித்துவம் அளிக்க பல ஆண்டுகளாகக் கேட்டு வருவதை மேலும் தாமதிக்காமல் நிறைவேற்றுமாறும் கோரித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பத்திரிகைக் காகிதம் தாராளமாகவும், சுலபமாகவும் இறக்குமதி செய்ய வழிகோரி ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

Telegrams : MARIGOLD Phone : 31738.

K. PERUMAL UDAYAR

Importer, Exporter &
Manufacturers' Representative

Iron and Steel Approved Fabricator
and Approved Scrap dealer

Undertakes to Import goods from foreign countries

வெளிநாட்டு சரக்குகளை, இறக்குமதி செய்து கொடுக்கிறோம்

K. பெருமாள் உடையார்,

55, எடப்பாளையம் தெரு,

சென்னை-3.

அதிகாரிகளுக்கு வைத்திய சலுகைகள்

அரசாங்க ஆஸ்பத்திரிகள் இல்லாத இடங்களில் பணியாற்றும் கெஜட் பதிவு அதிகாரிகளும் அவர்களது குடும்பத்தினரும் தமக்கென அங்கீகாரமாக மருத்துவ அலுவலர்களைக் கலந்து ஆலோசிக்காமலே அவ்வூர்களில் உள்ள ஊராட்சி மன்ற ஆஸ்பத்திரிகள் அல்லது தனியார் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை பெற்றுக்கொள்ள அரசாங்கம் அனுமதித்துள்ளன. இது சம்மந்தமாக டாக்டரால் குறிப்பிடப்படும் விலையுயர்ந்த மருந்து உள்பட அவர்கள் செய்த செலவுகளுக்கான பணம் வழங்கப்பட்டு வரும். இது சம்பந்தமான ரசீதுகளும் தரப்படவேண்டும், சம்பந்தப்பட்ட ரசீதுகள் அங்கீகாரமான வைத்திய அதிகாரியின் பரிசீலனைக்கும் சென்றாக வேண்டும். தனிப்பட்ட டாக்டர் நடத்தும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றிருந்தால் அதற்கான தொகை கொடுக்கப்படும். ஆனால் அது சம்பந்தமான ரசீதுகளை ஒப்படைத்தாக வேண்டும். இது சம்பந்தமாக சம்பந்தப்பட்ட மாவட்ட வைத்திய அதிகாரி பைல்களைப் பரிசீலித்து கோரப்பட்டுள்ள தொகை நியாயமானதுதான் என்றும் செய்யப்பட்ட செலவு அவசியமானதுதான் என்றும் அத்தாட்சி கூற வேண்டியது முக்கியமாகும். இந்தச் சலுகைகள் என். ஜி. ஓ.வினருக்கு ஏற்கனவே இருந்து வருகின்றன. இப்போது கெஜட் பதிவு அதிகாரிகளுக்கு இவை நீடிக்கப்பட்டிருக்கின்றன.

அமெரிக்க வியாபார தூது கோஷ்டி

அமெரிக்க வியாபார தூதுகோஷ்டி ஒன்று, ஸ்ரீ. எட்வின் சி. ஹிக்பீ தலைமையின் கீழ் சென்னை வந்துள்ளது. இந்தக் குழுவின் 6 பேர் அடங்கியுள்ளார்கள் தூதுக்குழுவின் நோக்கங்கள்'—

இந்தியாவிற்கும், அமெரிக்காவிற்கும், பரஸ்பரவியாபாரம் நடக்கக் குழு ஆவன செய்யும்.

இந்தியாவிலுள்ள, வியாபாரிகளோடு கலந்துபேசி, கருத்துக்களை பறிமாறி, தொழிலுக்கு ஊக்கம் கொடுத்து, வியாபாரிகள் மத்தியில் குடிகொண்டுள்ள கஷ்டங்களைப் போக்க ஆவன செய்தல்.

அமெரிக்காவிலுள்ள, வியாபார சம்பந்தப்பட்டத்தகவல்களை, இந்தி வியாபாரிகளிடம் எடுத்துக்கூறுதல்; இங்கு, வியாபாரத்துறையில் நிலவும் நிலையை படித்து ஆராய்ந்து, அமெரிக்காவிற்குத தெரியப்படுத்துதல். இந்த 6 பேரும், வியாபாரத்துறையில் சிறந்த நிபுணர்களாவார்கள். இந்தியாவிலுள்ள வியாபாரிகளுக்கு, வியாபார சம்பந்தப்பட்ட, எல்லாத் தகவல்களும் எடுத்துகூறி, வியாபார முன்னேற்றத்திற்கு, தகுந்த ஆலோசனையைக் குழு கூறும்.

தற்போது சென்னைக்கு வந்துள்ள இந்த தூதுகோஷ்டி, 3வது கோஷ்டியாகும். முதல் கோஷ்டி, டில்லியில் சுற்றுப்பிரயாணம் செய்தது. இரண்டாவது தூதுகோஷ்டி, கல்கத்தாவிலும், கிழக்கு இந்தியாவிலும் கடந்த பெப்ரவரி மாதத்திலிருந்து ஏப்ரல் மாதம் வரை சுற்றுப்பிரயாணம் செய்தது. இது 3வது தூதுகோஷ்டியாகும். 4வது தூதுக்குழு, பம்பாய் மாகாணத்தில் சுற்றுப்பிரயாணம் செய்யும் என்று தெரியவருகிறது.

வாளை ஒரு புறம் வீசி எறிந்தபின் என்னை எதிர்ப்பவர்களிடம் கொடுப்பதற்கு அன்பென்ற அமுதம் நிறைந்த சின்னத்தைத் தவிர வேறு எதுவும் இல்லை. அந்த நிவேதனத்தால் தான் அவர்களை என்னிடம் இழுத்துக் கொள்ள எண்ணியுள்ளேன். —காந்தி.



1. டைரக்டர் ஸ்ரீ. எட்வின் சி. ஹிக்பி

கிளவேலேண்ட், ஒகியோ ஆகிய இடங்களில் நிறுவப்பட்டுள்ள அமெரிக்க வியாபாரத் துறை அலுவலகத்தின் மானேஜராக பணியாற்றுகிறார் ஸ்ரீ எட்வின். சி. ஹிக்பீ. வியாப்பார முன்னேற்றமடையவும், அமெரிக்காவில் உற்பத்தியாகும் பண்டங்களை மார்க்கட்டில் விற்பனை செய்யவும், இவர் மிகவும் பாடுபடுகிறார். இவர், அமெரிக்க தூது கோஷ்டியின் தலைவராவார்.

2. பேங்கர் ஸ்ரீ. கென்னெட் ஓ. பிர்னி

ஸ்ரீ கென்னெட் ஓ. பிர்னி, ஒரு பிரப்ல பாங்கராவார். பாங்குத் துறையில் இவருக்கு 30 ஆண்டுகளுக்கு மேல் அனுபவம் பெற்றுள்ளார். சிகாகோ, இல்லி நோயிஸ், ஆகிய இடங்களிலுள்ள சேவிங்ஸ் பாங்கு, ஹாரிஸ் டிரஸ்ட் முதலிய நிறுவனங்களின் உதவி தலைவராகப் பணியாற்றுகிறார். சிறிய தொழில்களை ஊக்குவிக்கும் சிறந்த நிபுணர் ஸ்ரீ கென்னென் ஓ பிர்னி என்பது குறிப்பிடத்தக்கது.

3. ஸ்ரீ. ஜான் டபுள்யூ பஸ்கி

இரசாயன கார்ப்பரேஷனின் மாஜி உதவி தலைவர் ஸ்ரீ. ஜான் டபிள்யூ பஸ்கி. இரசாயன உற்பத்திசெய்து விநியோகிப்பதில் சிறந்த நிபுணராவார்.

4. ஸ்ரீ. ராபர்ட் ஹூப்போர்டு

ஹூப்போர்டு கம்பெனியின் தலைவர் ஸ்ரீ. ரெபர்ட் ஹூப்போர்டு ஒரு சிறந்த வியாபாரியாவர். அமெரிக்காவில் வியாபாரத் துறையில் முன்னணியில் நிற்கிறார்.

5. ஸ்ரீ. ஹோவார்ட் என். நட்

புளோரிடா, ஹாலிவுட் ஆகிய இடங்களிலுள்ள, தொழில் நிறுவனங்களின் ஆலோசகர்களின் தலைவர் ஸ்ரீ. ஹோவார்டு என். நட்டாவார் இவர் இஞ்சினியரிங் துறையில் சிறந்த நிபுணராவார்.

6. ஸ்ரீ. ரோய்டென் ஜி. டெர்ரிக்

சால்ட் லெக் சிட்டி, யிலுள்ள வெஸ்டர்ன் ஸ்டீல் கம்பெனியின் ஜெனரல் மானேஜர் ஸ்ரீ. ரோய்டென் ஜி. டெர்ரிக், ஒரு சிறந்த தொழிலதிபராவார்.

உரிமைகளைப் பாதுகாத்தல்

வேறொருவரிடமும் ஒப்படைக்காமல் மக்கள் அனைவரும் தாங்களே செய்து கொள்ளக் கடமைப்பட்டுள்ளது யாதேனும் உண்டென்றால், அதுவே அவரவருக்குரிய உரிமைகளையும் ஸ்தாபனங்களையும் பேணிப் பாதுகாத்து வைத்துக் கொள்ளும் கடமையாகும்.

—லிங்கன்.

மண்பாண்ட தொழிலைப்பற்றி அமெரிக்க தூது குழு

கன்னிமாரா ஓட்டலில் அமெரிக்க தூதுக்குழு, பத்திரிகை நிருபர்களுக்கு ஒரு பேட்டி கொடுத்தது; தூதுக் குழுவைச் சேர்ந்த 6 பேரும் வந்திருந்தனர். தொழில் பத்திரிகை சார்பாக ஆசிரியர் ஸ்ரீ கே. பெருமாள் உடையார். கலந்து கொண்டார் அமெரிக்காவில் மண்பாண்ட தொழிலின் நிலை என்ன? சர்க்கார் எவ்வளவு தூரம் அத்தொழில் வளர்ச்சிக்கு ஆதரவு கொடுக்கிறது என்ற கேள்விகள் கேட்கப்பட்டன; கேள்விகளுக்குஸ்ரீ சி. ராபர்ட் ஹாப்பார்டு பதில் கொடுத்தார்.

அவர் கூறியதாவது:

அமெரிக்காவில் மண்பாண்டத் தொழில் தற்போது நல்ல நிலையில் இருக்கிறது; இருந்த போதிலும் இத்தொழிலுக்கு பெரிய போட்டி இருக்கிறது, ஜப்பான், சைனு போன்ற நாடுகள் மண்பாண்டத்தொழிலில் நல்ல முன்னேற்றமடைந்துள்ளன. அந்நாட்டில் செய்யும் மண்பாண்டங்கள் அமெரிக்காவில் உற்பத்தி செய்யும் மண்பாண்டங்களோடு போட்டி இடுகின்றன; அமெரிக்காவில் இப்போது புதுத் தினுசு மண்பாண்டங்கள், புதிய முறையில் செய்யப்படுகின்றன. சர்க்காரும் இத் தொழிலை ஊக்குவிக்க ஆவன செய்து கொண்டு இருக்கிறது என்று அவர் குறிப்பிட்டார்.

சிறுதொழிலுக்கு அமெரிக்க சர்க்கார் வேண்டிய வசதி செய்து கொண்டு இருக்கிறது. அமெரிக்காவில் எல்லா சாமான்களுக்கும் வரி விதிப்பு இருக்கிறதுஎன்றும். அந்த குழு குறிப்பிட்டது.

—*—

நீச்சல்போட்டியில் வங்கப்பெண் போட்டியிடுகிருள்

27—8—59 அன்று நடைபெறும் புட்லின் சர்வதேச ஆங்கிலக் கால்வாய் நீச்சல் போட்டியில் கல்கத்தா ப்ல்கலைக்கழகத்தைச் சேர்ந்த குமாரி ஆரத்தி ஸாஹா கலந்துகொள்கிருள். கலேயிலிருந்து டோவருக்கு நீந்திச் செல்லும் இந்தப் போட்டியில் முதல் முதலாகப் பங்குபெறும் ஆசியப்பெண் இவள் தான்.

பட விமர்சனம்:

மனைவியே மனிதனின் மாணிக்கம்

தயாரிப்பு: கே. எம். டி. வி. என். புரொடக்ஷன்ஸ்

மூலக்கதை: கோவை ராஜ கோபால்.

டைரக்ஷன்: கே. வேம்பு.

வசனம்: மக்களன்பன்.

முக்கிய நடிகர்கள்: பாலாஜி, தங்கவேலு, நாகையா, சட்டாம் பிள்ளை வெங்கட்ராமன், பண்டரிபாய், விஜயகுமாரி, எம். சரோஜா.

இளமை எழில்மிக்க நங்கை தான் மேனகா; அவள் வாழ்க்கையில் அமைதி இல்லை. வேதனைப்புயல் தான் உத்வேகத்தில் வீசியது, வரண்ட பாலைவனம் போல் இருந்த தன் கிழக்கணவனிடம், அவள் இன்ப நீரோட்டம் காணவில்லை, அவனிடம் எல்லாம் வரட்சியைத் தான் அவள் பார்த்தாள்; வாலிபனொருவனிடம் வாழமுடியவில்லையே, என்று அந்த எழில் நங்கை ஏங்கிய ஏக்கத்தை என்னவென்று சொல்லுவது.

அவள் ஏக்க அலைகள் ஒருவனைச் சுற்றி சுற்றி வந்தது; அவன் வேறு யாருமில்லை அவளுடைய தந்தையின் டிரைவர் தான். பெயர் கலிவரதன் இதனால், அந்தக் கிழக்கணவன் இறப்புலகம் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது; இந்த சம்பவம் பர்மாவில் நடந்தது. மேனகா, தன் காதலனோடு, கொலைக்குப்பயந்து தமிழ் நாட்டிற்கு வந்துவிட்டாள். கலிவரதன் அவளை தன்

சரோஜா, காதலன் இன்னும் வரக்காணே மென்று ஏங்குகிறுர்போலும் மணிவியே-மனிதனின் மாணிக்கத்தில்.

காதலியாக வைக்கவில்லை, கொலையைக்காட்டி, அவளை அச்சுறுத்தி தன் படுக்கையறை பதுமையாக வைத்திருக்கிறுன்.

சுந்தரம் நல்லவன்; மனைவி உண்டு. நல்வாழ்வில் குறுக்கே விழுந்தான் கலிவரதன். இதனுல் சுந்தரம் வாழ்க்கையில் குழப்பமும் கொந்தளிப்பும் ஏற்படுகிறது. இந்த குழ்ப்பற்றைப் போக்க பாடுபடுகிறுன், சுந்தர் மனைவி லட்சுமியின் சகோதரன் மணி. சூழ்ச்சிகாரன் கலிவரதன் கம்பி எண்ணுகிறுன். மேனகா, அவன் துப்பாக்கிக்குண்டுக்குப் பலியிடப்படுகிறுள். இதுதான் கதையின் சுருக்கம்.

சுந்தராக வரும் பாலாஜியின் நடிப்பில் சிறிது முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பாராட்டத் தக்கது; தன்பாகத்தை உணர்ந்து நடித்திருக்கிறுர் வெங்கட்ராமன், கலிவரதனுகவந்துநன்கு நடித்துள்ளார். பண்டரிபாய் பண்புள்ள மனைவியாக நடித்து ரசிகர்களின் பாராட்டுரையை நிறையப்பெறுகிறுர். தங்கவேலு நடிப்பு என்றும் போல் நன்கு அமைந்துள்ளது. எம். சரோஜா அவருக்கு ஈடுகொடுக்கிறுர்; விஜயகுமாரி அருமையாக நடித்துள்ளார். தட்சிணுமூர்த்தியின் நடிப்பு நன்கு அமைந்துள்ளது.

நல்ல கர்னுடக இசையை இதில் கேட்க முடிகிறது. கே,

ஆர். எஸ். ஆர். மூவிடோனின் தர்மபத்தினியில் ஓர் காட்சி.

வேம்புவின் டைரக்ஷன் நன்கு அமைந்துள்ளது: இருந்தாலும் இன்னும் கவனம் செலுத்தி இருக்கலாம். கதையில் விறுவிறுப்புப் போதாது; மக்களன்பன் வசனம் நன்ருக சில இடங்களில் இனிக்கிறது. மொத்தத்தில் படம் நல்ல படம்: எல்லோரும் பார்க்க வேண்டிய படம்.

"அருமை மகள் அபிராமி!"

அருமை மகள் அபிராமி எப்போது வெளிவரும், என்று எல்லோரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிருர்கள். அந்த அபிராமியைப் பற்றி வார்த்தைகளால் வருணிக்கமுடியாது. பத்தரைமாத்துத்தங்கம்அவள்! பெண்ணுக்கு அணிகலன்களாக விளங்கும், அச்சம், நாணம், மடம் ஒருங்கேபெற்று, புது உலகம் காணுத ஒருபொற்கொடிதான் அந்த அபிராமி. அவள் என்றும் வாழ்க!

அகிலாண்டத்திற்கு அளவில்லாத ஆசை நகைமீது; நகைப் பைத்தியம் பிடித்த ஆகிலாண்டம், புருஷன் ஏட்டு எல்லப்பனை, நகை வாங்கிக் கொடுங்கள் என்று பிய்த்துப் பிடுங்கிஞள். எத்தனை நாட்களுக்குத்தான் தன் அருமை மனைவியை

அவனை ஏமாற்ற முடியும். சிந்தித்து, எப்படியும், தன் அருமை மனைவிக்கு நகை வாங்கிகொடுத்துவிட வேண்டுமென்று திட்டம் தீட்டினன்.

அன்று பெரிய பொட்டலத்தோடு வீடு வந்து சேர்ந்தான்; கம்பீர நடை போட்டுக்கொண்டு கல கல வென்று சிறித்த வண்ணமாக, அந்த பொட்டலத்தைத் தன் அருமை மனைவியிடம் கொடுத்தான். மனைவி திறந்து பார்த்தாள். என்ன ஆச்சரியம்; அவள் கண்களையே அவளால் நம்ப முடியவில்லை; மகிழ்ச்சிக் கடலில் மூழ்கி குளித்தாள்; ஆம், பொட்டலத்திற்குள் இருந்தவைகள் அத்தனையும் நகைகள் விதவிதமான நகைகள்' 50 பவுன்கள்; அத்தனை நகைகளையும், தன்மேல் போட்டு அலங்காரம் செய்தாள் அகிலாண்டம்.

இருந்தாலும் அகிலாண்டம் பெண்ணல்லவா? தன்னுடைய அழகிய நகைகளை, தன்னையொத்தப்பெண்களிடம் காட்டாவிட்டால் அவள் எப்படித் தாங்கமுடியும். அண்டை வீட்டுப் பெண்களை எல்லோரையும் அழைத்தாள். அழைத்ததோடு நிற்கவில்லை; அழைத்துப் பெண்கள் அத்தனை பேருக்கும் விதவிதமான பலகாரங்களைக் கொடுத்தாள்; ஏன் தெரியுமா? தான் அணிந்திருக்கும் நகைகளை அவர்களிடம் காட்டி, தன் கணவனின் நல்ல குணத்தை அவர்கள் மத்தியில் பறைசாற்றவேண்டுமாம்! பேதைப் பெண்!!

அவர்கள் சாப்பிடும்போது, அலுக்கி குலுக்கி ஒய்யார நடை போட்டாள் அகிலாண்டம். கூடியிருந்த பெண்கள் கவனத்தைக் கவர்ந்தது அந்த அம்மா அகிலாண்டம் அணிந்த நகைகள்; நகைகளைப்பற்றி விசாரணை ஆரம்பமானது. இது தோடு! இது வளையல்!! இது மாங்காமாலை! இப்படியாக அந்த அம்மா, நகைகளைப்பற்றி டமாரம் அடிக்க ஆரம்பித்துவிட்டாள் "பார்த்தீயாடி. அகிலாண்டம் கணவர்தான் நல்லவர் நம்மவீட்டுக்காரர்கள் ஒன்றுக்கும் பிரயோஜனம் கிடையாது.' என்று வாயார வாழ்த்தினர்கள் ஏட்டு எல்லப்பனை; அவர்களில் ஒருத்தி 'இப்படிப்பட்ட புருஷன் தனக்கு இல்லையே என்று குறைபட்டுக்கொண்டாள்.

பூஜை வேளையில் கரடி புகுந்த மாதிரி திடீரென்று ஒரு பையன் வீட்டிற்குள் நுழைந்தான் "அம்மா, உங்க வீட்டுக்காரர் எங்கள் கடையில் நகை வாங்கினர். இந்த டப்பியை அங்கேயே வைத்துவிட்டுப் போய்விட்டார்" என்று கூறியதும், டப்பியுள்ளும் நகை இருந்தாலும் இருக்கும், என்ற ஆசையில் அகிலாண்டம் டப்பியை அவனிடம் வாங்கி திறந்து பார்த்தாள். என்ன ஆச்சரியம், டப்பியிலிருந்து பவுடர் கீழே சிந்தியது. பையன் பவுடரின் ரகசியத்தை விளக்கிக் கூறினன்.

"பவுடரை பார்க்கிறீர்களா? பவுடர், இல்லாவிடில், நீங்கள் அணிந்திருக்கும் முலாம் பூசிய

இன்பக் கனவு படதிதில் ஓர் காட்சி.

தங்கத்தின் பளபளப்பு குறைந்து விடும். இந்த பவுட்ரால், அதை நன்கு தேய்த்து பள்பள்வென்று வைத்துக் கொள்ளுங்கள்" என்று அந்தப் பையன் விளக்கிக் கூறினர்.

'அடி அகிலாண்டம், நீ பைத்தியக்காரியடி, இப்படி போலி நகைகளை வாங்கிக்கொடுத்து ஏமாற்றிய புருஷனை விட நகை வாங்கித் தராமலிருக்கும் புருஷனே. எவ்வளவோ மேல்" என்று முணுமுணுத்துக் கொண்டு அகிலாண்டம் மீது ஒரு அலட்சிய பார்வையை செலுத்தி விட்டு, வீட்டை விட்டு வெளியேறியது அந்தப் பெண்கள் பட்டாளம்.

"வரட்டும் என் புருஷன் ஒரு கை பார்த்துக் கொள்கிறேன்" என்று குமுறி எழுந்தாள் அப் பேதைப்பெண் அகிலாண்டம்.

இக்காட்சி அரவிந்த் பிக்சர் சாரின் "அருமை மகள் அபிராமி"க்காக பாரமவுண்டில் சுடப் பட்டது. இதில் ஏட்டு எல்லப்பஞக டி. எஸ். துரைராஜும் அகிலாண்டமாக, டி. பி. முத்துலட்சுமியும் நடித்தனர்.

மற்றும் இப்படத்தில், பிரேம் நஸீர், ராஜசுலோசனு, சகஸ்ரநாமம், மாலதி, ஓ. ஏ. கே. தேவர், சூரியகலா, முதலியோர் நடிக்கின்றனர். இதன் டைரக்டர்

இளம் நடிகர்கள்

பிரசிடெண்ட் பஞ்சாட்சரத்தில் ஓர் காட்சி.

பிஞ்சு காயாகி. பழமாகி, தின்ன தின்ன, இனித்து ருசிக்கும் பசியும் தீரும். அதுபோல இன்றைய இளம் நடிகர்கள் அன்னாரின் திறமையால், நாளை ஒரு சிறந்த நடிகர்களாகி, ரசிகர்களின் நன்மதிப்பையும் ஆதரவையும் பெற வாய்ப்பு ஏற்படுகிறது. இன்று சிறு பாத்திரமேந்தி நடிப்பவர்கள் நாளை கதாநாயகனாக நடிக்க வாய்க்கலாம். துடிதுடிப்புள்ள எடுப்பான நடிப்பால் இளம் நடிகர்கள் இன்று உருவாகி வருகிறார்கள்: அவர்களை ஊக்குவிக்க நாடக கம்பெனியாளரும், பட முதலாளிகளும், முன் வருவார்களானால், கலையும் வளரும், தாங்களும் வாழலாம்.

இளம் வயதிலேயே, நல்ல நடிப்பின் திறன்பெற்ற மாஸ்டர் கணேஷ் வருங்காலத்தில் தென்னகத்திரைவானில் மின்னும் தாரகையாய் விளங்குவான் என்பதில் ஐயமென்ன? நாடகங்களிலும்; திரைப்படங்களிலும் சின்னஞ்சிறிய பாகமேந்தி திறம்பட நடித்துள்ளான். முதன் முதலில் "மருது

வி. கிருஷ்ணன். கதை வசனம், கலைமணி; பாடல்களை மருதகாசி, தஞ்சை ராமய்யதாஸ், லக்ஷ்மணதாஸ், கிரவுன் சுந்தரம், கு. சா. கிருஷ்ணமூர்த்தி, அ. சா. நாராயணன் முதலியோர் எழுதியுள்ளனர். அபிராமி, குடும்பப் பெண்ணாக, கம்பீர நடைபோட்டு வர இருக்கிறாள், அருமை மகள் அபிராமி, அருமையாகவே இருக்கும் என்று தெரியவருகிறது.



பிரசிடேண்ட் பஞ்சாட்சரத்தில் ஓர் காட்சி.

பாண்டியன்" கள்வனின் கனவு, புயலுக்குப்பின், தாயகம் காத்த தனயன், புலித்தேவன், ஆகிய நாடகங்களில் நடித்து நடிப்பின் சிகரத்தை எட்டியுள்ளான்.

பதினொருவயதே நிரம்பிய கணேஷ் இரண்டாம் படிவம் படிக்கிறான். நல்ல முகவெட்டும், புன்னகையோடு கூடிய வதனமும், துருதுருப்பான பார்வையும், நடிப்பின் துடிப்புள்ள கணேஷ், இந்திப்படமான மிஸ் மேரியில் நடித்துள்ளான். இவன் நடித்து வெளிவந்துள்ள படங்கள் பிரசிடெண்ட் பஞ்சாட்சரம், ஹம்பஞ்ச், ஏக் டால்கே, ஆகியவை - தர்மபத்னி, இஸ்கூல் மாஸ்டர் (இந்தி) வழிகாட்டிய தெய்வம், தெய்வமே துணை, ஆகிய படங்களிலும் நடித்து வருகிறான்.

இவன் நன்கு நடித்து கலையுகிலே புகழேணியில் ஏற வேண்டுமென்பது, இவனது பெற்றோர்களின் பேரவா ஆகும்...! அது நிறைவேறுமலா போகும்.

—●—

இந்திய சினிமாப் படங்கள்!

லாகூர் இரேட் ஈஸ்டேர்ன் கார்ப்பரேஷன் தயாரித்த "ஆசிய ஜோதி" என்னும் திரைப் படம்தான் இந்தியத் திரைப் படங்களை முதன் முதலாக சர்வதேச அரங்கில் அறிமுகப்படுத்தியது. அந்தப் படம் 1926-ல் லண்டனில், தொடர்ந்து 10 மாதங்களுக்கும் அதிகமாகத் திரையிடப்பட்டது.

இரண்டாவது உலக யுத்தத்தின்போது, மேற்கு ஆசியா, ஆப்பிரிக்கா, கிழக்கு ஆசிய நாடுகளுக்கு இந்தியத் திரைப் படங்களை அனுப்பத் தோது உண்டா என்று ஆராயப்பட்டது.

இந்தியப் படங்களுக்கு வெளிநாட்டு மார்க்கெட்டுகள் படிப்படியாகத் தொடர்ந்து வளர்ந்து வந்தன.

இந்திய மக்கள் ஏராளமாகவுள்ள மலேயா, இந்தோ-சீனா, பர்மா, இலங்கை, தெற்கு-கிழக்கு ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளுக்கு இந்தியத் திரைப் படங்கள் வெகு காலமாக ஏற்றுமதி செய்யப்பட்டு வருகின்றன என்றும், இப்போது இந்தியப் படங்கள் (ஜப்பான், சீனா ஆகிய நாடுகள் தவிர மீதியுள்ள) கிழக்கு ஆசியா, தென் மேற்கு ஆசியா ஆகிய இடங்களிடல் வரவர அதிக அளவில் பிரபலம் பெற்று வருகின்றன.

இந்தியத் திரைப் படங்கள் இப்போது எகிப்திலும், மேற்கிந்தியத் தீவுகளிலும் லிபியாவிலும்கூடக் காலூன்றிவிட்டன. சமீபத்தில் இந்தியாவுக்கு விஜயம் செய்திருந்த எகிப்திய வர்த்தகத் தூதுகோஷ்டி இரு நாடுகளுக்குமிடையே இன்னும் ஏராளமான திரைப் படங்கள் பரிவர்த்தனை செய்யப்படவேண்டுமென்று வலியுறுத்தியது.

சோவியத் யூனியனில் 1954, 1956 ஆகிய வருஷங்களில் நடைபெற்ற இந்திய திரைப்பட விழாவுக்குப் பிறகும், இரு நாடுகளுக்குமிடையே திரைப் படத் தூது கோஷ்டிகள் பரஸ்பரம் அனுப்பிவைக்கப்பட்ட பிறகும் சோவியத் யூனியனில் மார்க்கெட் பெருகி வருகிறது.

"பாதர் பாஞ்சாலி", "அபராஜிதோ" ஆகிய படங்கள் நியூயார்க்கில் சமீபத்தில் வெற்றிகரமாகத் திரையிடப்பட்டன. எல்லாரும் விரும்புகிற அமெரிக்க மார்க்கெட்டுகளிலும் இந்தியத் திரைப்படங்கள் இடம் பிடிக்க வழி செய்திருக்கிறது.

இந்தியத் திரைப் படங்களுக்கு வெளிநாட்டு மார்க்கெட்டுகளிலிருந்து மொத்தம் சுமார் 2 கோடி ரூபாய் வருமானம் கிடைத்திருப்பதாகத் தெரியவருகிறது. (இந்தியத் திரைப் படத் தயாரிப்பாளர் சங்க 19-வது வருஷாந்திர அறிக்கை).

இந்தியத் திரைப் படங்கள் ஏற்றுமதியைப் பெருக்குவது சம்பந்தமான வழி வகைகளைப் பற்றி யோசனை கூறுவதற்காக இந்திய சர்க்கார் பிரதிநிதிகள், படத் தயாரிப்பாளர்கள், வினியோகஸ்தர்கள் ஆகியோரின் பிரதிநிதிகளடங்கிய "திரைப் பட அபிவிருத்தி ஆலோசனைக் கமிட்டி" யொன்று அமைக்கப்பட்டிருக்கிறது. ஏற்றுமதியாளர்களுக்கு வெளிநாடுகளிலிருக்கிற இந்திய வர்த்தகக் கமிஷன்கள் உதவி செய்து வருகின்றன.

உலகத்தில் திரைப் படங்கள் காட்டப்படுகிற நேரம் சுமார் 5 சதவிகிதமாகும் என்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. அமெரிக்கப் படங்களின் நேரம் 60 சதவிகிதமாகும். ஆகவே இந்தியத் திரைப் படங்களுக்கு வெளிநாட்டு மார்க்கெட்டுகளை விஸ்தரிக்க இன்னும் எவ்வளவோ தோது இருக்கிறது.

Edited & Published by K. Perumal Udayar,
Edapalayam Street, Madras-3. Asst. Editor: C. J. Marthandam. B.A.
Printed by K. N. Thiruvengadam,
at his Ananda Parvathi Press, 30, Edapalayam St., Madras-3.

சென்னை-600 008

சிமிண்ட்

ஏ. ஸி. ஸி-சார்மினர் பிராண்ட்

கீழ்க்கண்ட எங்கள் டிப்போக்களில்
ரெடி ஸ்டாக்குகள் உள்ளன.

- 15, செம்புதாஸ் தெரு, சென்னை-1.
- தி சிமிண்ட் கான்கிரிட் ஒர்க்ஸ், 11-A, வெஸ்ட் காட் ரோடு, ராயப்பேட்டை, சென்னை.
- 283-A, திருவல்லிக்கேணி ஹைரோடு, சென்னை.
- 131, பைகிராப்ட்ஸ் ரோடு, திருவல்லிக்கேணி, சென்னை.
- 14, கச்சேரி ரோடு, மைலாப்பூர், சென்னை.
- "ஜெயா மான்ஷன்ஸ்" பூந்தமல்லி ஹைரோடு, சென்னை.
- 139/2, புரசைவாக்கம் ஹைரோடு, சென்னை.
- 40, காளத்தியப்ப முதலி தெரு, சென்னை.
- 139, சூளை ஹைரோடு, சென்னை.
- 105, திருவொற்றியூர் ஹைரோடு, சென்னை.
- 3/95, பிராட்வே, (பிராட்வே டாக்கீஸுக்கு அடுத்தது) சென்னை.

N. B. உங்கள் தேவைகளுக்கு வேலை நடக்கும் இடங்களிலேயே டெலிவரி ஏற்பாடும் செய்யப்படும்.

M. குப்புசாமி நாயக்கர்

இறக்குமதி & ஏற்றுமதியாளர்கள்

15, செம்புதாஸ் தெரு,

சென்னை-1.

தபால் பெட்டி நெ. 1893
போன்: 21368 & 21369

ஸ்டாக்கிஸ்டுகள்: டாடா / S & L ஜி. ஐ பைப்புகள்: எவரெஸ்ட் அஸ்பெஸ்டாஸ் சிமிண்ட் ரூபிங் (கூரைகளுக்கான) ஷீட்டுகள் & A. C. பைப்புகள் & பிட்டிங்குகள் முதலியன.

Wrapper printed at Sampath Press, Sowcar pet, Madras-I.